உ

முருகா சரணம்

வேலும், மயிலும், சேவலும் துணை

அருணகிரிநாதர் அருளிய வேல், மயில், சேவல் விருத்தங்கள், வேல் வகுப்பு, மயில் வகுப்பு

(மூலம், பதவுரை-விரிவுரை)



விரிவுரையாளர்

'திருப்புகழ் அடிமை' சு. நடராஜ ஐயர் அவர்கள்

வெளியீடு

திருப்புகழ் சித்ர சபை, திருச்செந்தூர்

திருச்செந்தூர் தெப்பக்குளக்கரை ஸ்ரீசெந்திலாண்டவன் துணை



மெய்யடியார்களுக்கு ஒரு வேண்டுகோள்

தமிழ்கூறும் நல்லுலகத்தில், ஆன்மீகத்தின் அறங்காவலர் களாக விளங்கும் சிருங்கேரி ஆச்சார்ய மகாசுவாமிகள், காஞ்சி ஆச்சார்ய மகாசுவாமிகள், மடாதிபதிகள் மகானுபாவர்கள் ஆகியோரின் பொன்னார் திருவடிகளை போற்றித் துவங்கப்படு கிறது திருப்புகழ் சித்ரசபை திருப்பணி.

மகாப்புனிதம் தங்கும் திருச்செந்தூரின் மேற்கு எல்லையான கரையான தெப்பக் குளக்கரையில் உள்ளது 85 வருடங்கள் பழமையான ஸ்ரீமுருகானந்தா சங்கீத திருப்புகழ் சபை. 33 செண்ட் நிலத்தைத் தனக்கெனக் கொண்ட இச்சபையின் கட்டிடம் இடிந்து விழும் நிலையில் உள்ளது. அதை நீக்கி அவ்விடத்தில் ஸ்ரீதெப்பக் குளக்கரை செந்திலாண்டவனுக்கு ஒரு அழகிய சின்ன ஆலயத்தை உள்ளடக்கிய திருப்புகழ் சித்ர சபை, ஒரு பல்நோக்கு கட்டிடம், கோசாலை, நந்தவனம் போன்றவை அமைக்கப்பட வேண்டும். 15-07-2021 அன்று தனது 84-ஆண்டு குமாரசஷ்டி திருவிழாவைக் கொண்டாடிய இச்சபையின் 85-வது ஆண்டு குமாரசஷ்டி திருவிழா 04-07-2022 அன்று வருகிறது. அவ்வைபவம் புது ஆலய வளாகத்தில் கொண்டாடப்படவேண்டும்.

இத்திருப்பணி பூரணமடைய ரூபாய் மூன்று கோடிகளுக்கும் மேல் தேவைப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளதால், அகிலத்து அனைத்து திருப்புகழ்பாடும் அன்பர்கள், முருகனடியார்கள், மெய்யன்பர்கள் தெப்பக்குளக்கரை ஸ்ரீசெந்திலாண்டவனை

மனதால் வணங்கி, மொழி மெய்யால் பலருக்கும் பரிந்துரைத்து, திருப்பணியில் பங்குகொள்ள தங்களால் இயன்ற திரவியத்தை பொருளாகவோ, பணமாகவோ கீழ்காணும் வங்கிக்கு அனுப்பி வைக்க வேண்டுகிறோம்.

இந்நூலிற்கான தொகை முழுவதும் நன்கொடையாகத் தந்துதவிய கல்பாக்கம் திருப்புகழ் அன்பர்களுக்கு வணக்கங்கள். நன்றிகள்.

அனைத்து அடியார்களுக்காகவும் செந்திலாண்டவனிடம் பிரார்த்தனை செய்யும்:
கயிலைமணி முத்து சுப்ரமண்ய தீக்ஷிதர் திருப்புகழ் சபை நிர்வாகி, திருச்செந்தூர்.

21-11-2021

Address of the Thiruppugazh Sabha :
Sri Muruganantha Sangeetha Thiruppugazh Sabha
73/24, Theppakula Street, Tiruchendur - 628 215.
Tuticorin Dt. Tamil Nadu.

Contact Person:
Shri. Ganeshkumar, 99425 12007, 9444049061
Mail ID : chenduriyer@gmail.com

Name of the Account Holder :
Sri Muruganantha Sangeetha Thiruppugazh Sabhai
Indian Bank, Tiruchendur.
A/C Number : 7101859730,
IFSC Code : IDIB000T136

உ

புல்லினால் ஐந்துகோடி புதுமண்ணால் பத்துகோடி
செல்லுமா ஞாலம்தன்னில் செங்கல்லால் நூறுகோடி
அல்லியங் குழலாய்கேளாய் ஆலயம்மடம் நமக்குக்
கல்லினால் கட்டினோர்கள் கயிலைவிட்டு அகலார்தாமே.''

இதன் பொருள்: *சிவபெருமானுக்கு புல்லினால் கோயில் கட்டினால் ஐந்துகோடி வருடமும், புதுமண்ணால் கோயில் கட்டினால் பத்துகோடி வருடமும், செங்கல்லால் கோயில் கட்டினால் நூறுகோடி வருடமும், கல்லினால் கோயில் கட்டினால் கயிலைவிட்டு அகலாது இறைவனோடே இருப்பார்கள். (கோவில் கட்டுபவர்களுக்கும், அத்திருப்பணிக்கு உதவுபவர்களுக்கும் இந்தப்பலன் கிடைக்குமாம். இந்தப் பலன் விநாயகர் - சுப்பிரமணியர் ஆலயங்களுக்கும் பொருந்தும்.)*

உ

முருகா சரணம்

வேலும், மயிலும், சேவலும் துணை

அருணகிரிநாதர் அருளிய

வேல், மயில், சேவல் விருத்தங்கள்

வேல் வகுப்பு, மயில் வகுப்பு

(மூலம், பதவுரை-விரிவுரை)

விரிவுரை

'திருப்புகழ்அடிமை' **திரு. எஸ். நடராஜ ஐயர்** அவர்கள்

தொகுப்பு

அன்னாரின் சீடர்கள்.

வெளியீடு:

திருப்புகழ் சித்ரசபை, திருச்செந்தூர்.

திருப்பணி நன்கொடைக்காக வெளியிடப்படுகிறது

2021

நூல் விபரங்கள்

நூல் பெயர்	:	அருணகிரிநாதர் அருளிய வேல், மயில், சேவல் விருத்தங்கள்- வேல் வகுப்பு, மயில் வகுப்பு
நூலாசிரியர்	:	அருணகிரிநாதர்
விளக்கவுரை ஆசிரியர்	:	'திருப்புகழ்அடிமை' திரு.எஸ்.நடராஜ ஐயர் அவர்கள்
நூலின் வகை	:	முருகன் துதிப்பாடல்கள்
முதற்பதிப்பு	:	பிலவ-ஹூ, கார்த்திகை-மீ 9-ஈ (25-11-2021), வியாழக்கிழமை
நூலின் அளவு	:	1/8 டெம்மி
பக்கங்கள்	:	18 + 118 = 136
தாள்	:	16 கி.கி. மேப்லித்தோ
எழுத்து	:	12 புள்ளிகள்
நூல் அமைப்பு	:	ஸ்ரீகணநாத நாயனார் நூலகம், திருச்சிராப்பள்ளி.
வெளியீடு	:	திருப்புகழ் சித்ரசபை, திருச்செந்தூர்.

This Book Copies Available :
No. 65, Balakrishna Naikkan Street,
West Mambalam, Chennai-600 033.
Mobile : 98840 27426.

திருப்புகழ் பிரச்சாரத்திற்காக இலவச பதிப்பு

இந்நூலினைப் பெறும் அனைத்து அன்பர்களும்
நூலினைப் படித்து உணர்தலும்,
ஸ்ரீமுருகானந்த சங்கீத திருப்புகழ் சபை, திருச்செந்தூர்
மீண்டும் புதிய கட்டிடமாக எழுவதற்குச் சிவபுண்ணியமாகத்
தங்களின் பொருளுதவியும், உடல்உழைப்பையும்
கைங்கர்யமாகத் தருவதுமே உண்மை விலை

அச்சாக்கம் : இராம்குமார் பிரிண்டர்ஸ் சின்னக்கடைத்தெரு,
திருச்சிராப்பள்ளி-2. போன் : 0431-2700417, செல் : 98949-08437

HIS HOLINESS DHAKSHINA SHIRDI PEETAM
DWARAKAMAI ASHRAM
Thavathiru. SriLaSri. Dr.A.V.SHANTHIKUMARA SWAMIGAL
'N' Block, Aura Homes, Lake Area 8th Street, 2nd Cross, (Near Mattuthavani),
Madurai - 625107
Cell.:99940-23032

நிறைப் புகழுரை

''மயில் வாகனக் கடவுள், நமக்குறுதி அவரே பரபிரமம்'' என்பது அருணகிரிப் பெருமானின் திருப்புகழ் வாக்கு. அதனையே முகநெறியாகக் கொண்டு முகஶ்ரீ இரசபதி அவர்களிடம் பாடம் கேட்டவர், 'திருப்புகழ் அடிமை' ஶ்ரீ நடராசன் அவர்கள்.

அருணகிரியாரையே மனதில் மனனம் செய்து கொண்டவர். அருணகிரிப் பெருமானின் நூல்களை ஆராய்ந்து தெளிந்து அந்நூல்களைப் பரப்பும் பணியில் ஈடுபட்ட ஆன்ம நேயர். சிருங்கேரி பீடத்தின் குருபரம்பரைக்கே அடிமையான தெய்வீகத் தொண்டர். திருப்புகழாய் வாழ்ந்த அருளாளர்.

அத்தகைய தவசீலரிடத்தில் அருணகிரிப்பெருமான் நூல் களைப் பாடம் கேட்ட சீடர்களுள் சிலர், வேல், மயில், சேவல் விருத்தங்களுக்கு அவர் விளக்கியருளிய பதவுரை, குறிப்புரை களை குறித்துவைத்து தொகுத்து அதை ஒருநூலாக வெளியிடுவது முருகப்பெருமானின் திருவருட் கருணையாகும்.

வேல் கலையாகிய ஞானத்தையும், மயில் விந்துவாகிய ஒளியையும், சேவல் நாதமாகிய ஒலியையும் குறிக்கும்.

''**நாத விந்து கலாதீ நமோநம**'' என்னும் திருப்புகழ் வாக்கும்,

''ஆடும்பரி வேல் அணி சேவலெனப்
பாடும் பணியே பணியாய் அருள்வாய்''

என்னும் அனுபூதி வாக்கும் இங்கு இணைத்து நினைக்கத் தக்கன.

''**வெங்காளர் கண்டர் கைச் சூலம்**'' என தொடங்கும் வேல்விருத்தப் பாடலில், 'தனிஆண்மை கொண்ட நெடுவேல்' என்னும் தொடருக்கு, வேலின் பெருமையை மந்திர சொரூபமாக விளக்குகிறார் உரையாசிரியர்.

''சிவம் அஞ்சு எழுத்தை முந்த விடுவோனே'' என்னும் சிதம்பரத் திருப்புகழ், 'சிவத்தின் பஞ்சாட்சரத்தின் ஆற்றலை யுடைய வேலாயுதம்' என்று கூறும்.

''படைக்கலமாக உன்நாமத்து எழுத்து அஞ்சு என்நாவிற் கொண்டேன்'' என்னும் அப்பர் வாக்கும், **''வினைப் பகைக்கு அத்திரமாவது அஞ்செழுத்துமே''** என்னும் சம்பந்தர் வாக்கும் திருவைந்தெழுத்தாகிய பஞ்சாட்சரம், படைக்கலமாகவும், அஸ்திரமாகவும் செபிப்பவர்களுடைய வினைகளை அகற்றும்; வேலும் வழிபட்டோருடைய வினை களை விலக்கும். ஆகவே, வேலும் பஞ்சாட்சரமும் ஒரு தன்மையன.

அவ்விருத்தப் பாடலில் வரும் அம்பிகையின் திருநாமங் களைக் கொண்டு வேல், சக்திமந்திர சொரூபமாகவும் இருக்கிறது என்பதை எடுத்துக் காட்டுகிறார் உரையாசிரியர். தேவியின் பீஜமாகிய - ஹ்ரீம் - என்பதுடன் பஞ்சாட்சரத்தை இணைத்தால், அது 'ஓம் ஹ்ரீம் நமசிவாய' என்னும் சக்தி பஞ்சாட்சரியாக விளங்குகிறது. (ஓம் நமசிவாய- பஞ்சாட்சரம்; 'ஓம் நமசிவாயை' - அம்பாளைக் குறிக்கும்) இவ்வாறு சிவசக்தி ஐக்கிய மந்திர சொரூபமே வேலாயுதம் என்பதை விளக்கியமை நம் உள்ளங் கொள்ளத்தக்க தத்துவச் செய்தியாகும்.

''ஆலமாய் அவுணருக்கு அமரருக்கு அமுதமாய்'' என்னும் வேல்விருத்தப் பாடலில், ''ஆதவனின் வெம்மை ஒளி மீது அரிய தவ முநிவருக்கு இந்துவின் தண் என்று அமைந்து'' எனவரும் தொடர் அரியசெய்தியை உள்ளடக்கியது.

பிரமனின் மானசீக புத்திரரான கிருதனின் புதல்வர்கள் 'வாலகில்யர்' என்னும் 'தேவஇருடியர்' ஆவர். இவர்கள் தாம் செய்த சிவதவ பலத்தால் சூரியன் பவனிவரும்போது அவனுடனே கூடவருவர். சூரியனின் வெம்மையைத் தாங்கி உலகஉயிர்கள் வருத்தமடையா வண்ணம் உலகைக் காப்பர். இவர்கள் காற்றையே உணவாகக் கொள்பவர்கள்.

இச் செய்தியினை,

''நிலமிசை வாழ்நர் அலமரல் தீரத்
தெறுகதிர் கனலி வெம்மை தாங்கி
கால் உணவாகச் சுடரொடு கொட்கும்
அவிர் சடைமுனிவர்''

என்று புறநானூறு கூறும்.

'சுடரொடு திரிதரு முநிவர்' என்பது சிலப்பதிகாரம். ஆகாயத்தில் இருக்கும் அம்முநிவர்களையும், ஆகாயத்திற்கு அப்பால் உள்ளவர்களையும் சிவபெருமானே காவல் காக்கின்றான் என்பதை,

''ஏகாசமிட்ட இருடிகள் போகாமல்
ஆகாசங் காவலென்று உந்தீபற
அதற்கு அப்பாலும் காவல்என்று உந்தீபற''

என்று திருவாசகம் கூறுகிறது.

இம் முநிவர்களுக்கு பாதுகாவலாக இருப்பது முருகப் பெருமானின் பன்னிரு திருக்கரங்களுள் ஒன்று என்று,

''விண்செலல் மரபின் ஐயர்க்கு ஏந்தியது ஒரு கை''

என திருமுருகாற்றுப்படையில் நக்கீரர் அருளிச்செய்வார். இக் கருத்தையே,

''வசைதவிர் ககன சரசிவகரண மகாவ்ருத
சீல சால வரமுநி சித்தரை
அஞ்சேல் அஞ்சேல் என்று வாழ்வித்து நின்றன.

முருகப்பெருமானின் புயங்கள்'' என்பார் அருணகிரியார். ''குற்றம் இல்லாத ஆகாயமார்க்கத்தில் சஞ்சரிக்கவல்ல சிவத்யானம் நிறைந்த மகாவிரத சீலர்களும் நிரம்பின வரங்களைப் பெற்றவர்களுமான முநிவர்களை பயப்படாதீர்கள், பயப்படா தீர்கள் என்று வாழ்வித்து வாழ்வுதந்து நின்றன முருகப் பெருமானின் வாகைப்புயங்கள்''. இவ்வரிய நுட்பமான செய்தியை உள்ளடக்கிய உரையாசிரியரின் உரைமாட்சி மிகவும் போற்றத்தக்கது.

''பருத்த முலை சிறுத்த இடை வெளுத்த நகை
கறுத்த குழல் சிவத்தவிதழ் மறச்சிறுமி
விழிக்கு நிகராகும்''

எனவரும் வேல்வகுப்பு, 'வள்ளிப்பிராட்டியாரின் விழிகளுக்கு வேல் ஒப்பாகும்' என்று போற்றும்.

பரபக்தி நிலையில் கண்கள் ஞானத்தையும், பருத்தமுலை பக்தியையும், இடை வைராக்கியத்தையும் குறிப்பன. வெளுத்த நகை சாத்துவிகமாகிய வெள்ளை நிறத்தையும், கறுத்த குழல்

தாமசமாகிய கரிய நிறத்தையும், சிவத்த இதழ் ராஜசமாகிய சிவப்பு நிறத்தையும் குறிக்கும்.

ஈசன்பால் பக்திபெருக வேண்டுமென்பதால், பால் பெருகும் முலைகள் பக்தியைக் குறித்தன. உலகியலிலிருந்து விடுபட ஆசைகளைச் சுருக்கி பகவானிடத்தில் வைராக்கியம் வேண்டுமென்பதால் இடை வைராக்கியத்தைக் குறித்துச் சொல்லப்பட்டது.

பக்தியால் வைராக்கியத்தை வளர்த்து, வைராக்கியத்தால் முக்குணங்களைக் கடந்த ஞானநிலையை அடைய வேண்டுதலால் கூரான கண்கள் ஞானத்தைக் குறித்துச் சொல்லப்பட்டன. வேல் ஞானவடிவமாக இருப்பதால், 'மறச்சிறுமி விழிக்கு நிகராகும் வேல்' என்றார் அருணகிரியார். மேலும், வள்ளியின் கடைக்கண் நோக்கால் கிடைக்கும் அநுக்கிரகங்கள் யாவும் வேலாலும் கிடைக்கும் என்பது உணரற்பாலது.

''கிரிசரம் வனசரம் நதிசரம் அடுத்துப்
பெறுமே யானை பிறந்த நிலப்பெயர்''

என்னும் திவாகரம் கொண்டு யானைப் பெயர்களையும்,

''மனைவி உயர்வும் கிழவோன் பணிவும்
நினையுங் காலைப் புலவியும் உரிய''

என்னும் தொல்காப்பியம் கொண்டு கங்கையால் பார்வதி தேவியின் ஊடலைத் தணிக்கும் பொருட்டுச் செய்த சிவபெருமானின் செயலையும், தெய்வங்கள் செய்த நடனங் களான கூத்துவகைகளையும், மயிலுக்கும் சேவலுக்கும் இடையே காணும் நட்பையும், இன்னும் தொட்ட இடங்களி லெல்லாம் மின்னும் உரையில் நுட்பங்களை எங்ஙனம் சொல்வது? இறையருள் கொண்ட வெளிப்பாடே.

இந்நூலை வெளியிடும் திருப்புகழ் அன்பர்களுக்கும், இந்நூலை ஓதிமகிழும் அடியவர்களுக்கும் எந்தை குருநாதன் சாயிநாதனின் கருணை என்றும் நின்று எல்லா நலன்களையும் அருள வேண்டுமாய் பிரார்த்தித்துக் கொள்கிறேன்.

''அடைந்தோர்க்கு உணர்ந்தோர்க்கு அளிந்தோர்க்கு அமைந்தோர்க்கு
அவிழ்ந்தோர்க்கு உணற்குஒன்று இலதாகி
அலைந்தோர்க்கு குலைந்தோர்க்கு இனைந்தோர்க்கு கலந்தோர்க்கு
அறிந்தோர்க்கு அளிக்கும் பெருமானே''



அன்பன்

அ. வே. சாந்திகுமார சிவாமிகள்

உ

இந்நூல் விளக்கவுரைஆசிரியர்

''திருப்புகழ் அடிமை'' ஸ்ரீ சு.நடராஜ ஐயர் அவர்களின் வாழ்க்கைச் சுருக்கம்

ஸ்ரீநடராஜஐயர் ஈரோடு நகரில் பிரமோதூத வருடம் பங்குனி மாதம் 30-ஆம் நாள் (ஏப்ரல் 12, 1931) ஞாயிற்றுக்கிழமையன்று வாங்கல் ஸ்ரீசுப்பராயஐயருக்கும் - ஸ்ரீமதி.ஜயலக்ஷ்மி அம்மாளுக் கும் மூத்த புதல்வராகப் பிறந்தார். இவருடைய பள்ளிக்கல்வி சேலம் நகரத்தில் (Little Flower High School) துவங்கி மதராஸில் (P.S.High School) நிறைவுற்றது. அதன் பின் மதராஸின் உள்ள லயோலா கல்லூரியில் B.Com., பட்டம் பெற்றார்.

ஸ்ரீ நடராஜ ஐயரைத் திருப்புகழுக்கு அறிமுகப்படுத்தியவர் இலங்கை பாலானந்த சரஸ்வதி ஸ்வாமிகள் ஆவார். அவர் முதலில் கற்பித்த ''வாசித்துக் காணொணாதது'' என்கிற திருச்சிராப்பள்ளித் திருப்புகழை ஸ்ரீ நடராஜ ஐயர் ஒரு மஹா மந்திரமாகவே கருதினார். குஹஸ்ரீ ''இரசபதி'' (ஸ்ரீ ரத்தின சபாபதி நாயக்கர்) அவர்களிடம் கற்றவை, மற்றும் ''தணிகைமணி'' வ.சு. செங்கல்வராய பிள்ளையவர்கள், ''திருப்புகழ் சதுரர்'' ராமலிங்கம் பிள்ளையவர்கள் ஆகியோரின் உரைகளும் கட்டுரைகளும் இவரைத் திருப்புகழ் ஆராய்ச்சியில் ஆழ்த்தின.

1959ம் ஆண்டில் ஸ்ரீ நடராஜ ஐயர் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள வீரவநல்லூரைச் சேர்ந்த காமேஸ்வரி அம்மாளை மணந்தார். இவரது வாழ்க்கைப் பயணம் மட்டுமன்றி ஆன்மிகப் பயணத்திலும் இன்றியமையாத துணையாக இருந்தவர் இப்பெண்மணியாரே. இவ்விருவரும், அக்காலத்தில் சிருங்கேரி சாரதா பீடாதிபதியாக விளங்கிய ஜகத்குரு ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகளிடம் மிக்க பக்தி உடையவர்களாகி, அம்மஹானின் விசேஷ அன்பிற்கும் பரிபூரண அனுக்ரஹத் திற்கும் பாத்திரமாகும் பேறு பெற்றனர். ஸ்ரீமத் அபிநவ வித்யா தீர்த்த மஹாஸ்வாமிகளைப் பற்றித், திருப்புகழ்ச் சொற்றொடர்கள் விரவி வரும் ''இணையில்லாத குரு'' என்ற சிறுநூலை ஸ்ரீநடராஜ ஐயர் எழுதியது இங்கே குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீ நடராஜ ஐயருக்குத் திருப்புகழில் இருந்த ஈடுபாடு, தவத்திரு சாதுராம் ஸ்வாமிகள், ''அமிர்தவசனி'' ஸ்ரீ முத்துசாமி ஐயர், டாக்டர் மணி ஐயர் போன்ற பெரியோர் மூலமாக மேன்மேலும் வலுவடைந்தது. சாதுராம் ஸ்வாமிகளை இவர் அடிக்கடி சந்தித்துத் தமக்கிருந்த ஐயங்களைப் போக்கிக் கொண்டார். அடியார் திருக்கூட்ட இறைபணி மன்றம், முருகன் திருவருட் சங்கம், சிங்காரவேலர் திருப்புகழ் சபை, வடபழனி திருப்புகழ் சபை, சேலம் குஹானந்தா திருப்புகழ் சபை போன்ற அமைப்புகளுடன் இவருக்கு நெருங்கிய தொடர்பு இருந்தது.

ஆண்டுதோறும் சென்னமல்லீஸ்வரர் கோயிலிலும், வடபழனி ஆலயத்திலும் நடைபெற்ற திருப்புகழ் விழாக்களில் இவர் முக்கிய பங்காற்றினார். வடபழனி திருப்புகழ் சபையின் கௌரவத் தலைவராக பல வருடங்கள் பதவி வகித்தார். மயிலை கபாலீஸ்வரர் கோயிலில் இன்று பூஜிக்கப்படும் அருணகிரி நாதரின் விக்ரஹத்தை பிரதிஷ்டை செய்வதில் பெருந்தொண் டாற்றினார்.

''திருப்புகழ் அன்பர்கள்'' என்கிற உலகளாவிய அமைப்பை நிறுவிய ஸ்ரீ ராகவன் அவர்களின் முக்கிய மாணவியாகிய ஸ்ரீமதி கல்யாணி அம்மாளிடமும் அவரது கணவர் ஸ்ரீராமசாமி ஐயரிடமும் 1970களில் ஸ்ரீநடராஜஐயருக்கு நெருங்கிய நட்பு ஏற்பட்டது. இத்தம்பதியரின் வீட்டில் திருப்புகழ்ப் பாடல் ஞக்குப் பொருள் சொல்லத் தொடங்கினார். அதே போல், சென்னையில் பல்வேறு இடங்களிலும் இப்பணியைச் செவ்வனே தொடர்ந்தார்.

பின்னாளில், அருணகிரிநாதர் அருளிய பனுவல்களையும் முருகப்பெருமானைத் துதிக்கும் வேறு சில நூல்களையும் ஆவல் மிகுந்த மாணாக்கர்கள் சிலருக்குத் தம் இல்லத்தில் போதித்து வந்தார். நந்தன வருடம் மாசிமாதம் 28-ஆம் நாள் 12-03-2013 March 12-2013) செவ்வாய்க்கிழமை அன்று, மறு நாளுக்குரிய பாடம் பற்றிச் சிந்தித்துக் குறிப்பெழுதுகையில் இவரது உலக வாழ்வு முடிவடைந்தது. சொலற்கரிய திருப்புகழை ஓயாது உரைத்த இவருக்குப் பெறற்கரிய அனாயாச மரணம் வாய்த்ததைக் கண்டு வியவாத அன்பரிலர்.

''வாழ்க்கைக்குத் திருப்புகழ்'' என்ற சொற்றொடரை நெறியாகக் கருதி ஒழுகிய ஸ்ரீநடராஜ ஐயர் எழுதிய ஆய்வுக் கட்டுரைகளும் அணிந்துரைகளும் பல. இவரை நாடிவந்த பட்டங்களுள் ''திருப்புகழ் அடிமை'', ''திருப்புகழ் விரிவுரைப் பேரருவி'', ''திருப்புகழ் உரைமாமணி'' என்பன சில.

இவரைப் பாராட்டித் தவத்திரு சாதுராம் ஸ்வாமிகள் எழுதிய சிலவரிகள் வருமாறு:

''ப்ரஹ்மஸ்ரீ எஸ். ஸ்ரீநடராஜஐயர் திருப்புகழில் மிகமிக ஊறியவர். திருப்புகழ் அடியார்கட்கும், பக்தர்களுக்கும், ஸபையினர்களுக்கும், ஸங்கத்தவர்கட்கும், மன்றத்தினருக்கும், மிகநெருக்கமானவர்; நுணுக்கர்; கந்தரந்தாதிப் பாடல்களுக்கும், திருப்புகழ்ப்பாக்களுக்கும், விருப்புற்றுக் கேட் போர்க்கெல்லாம் எவ்விதக்கைம்மாறும் எதிர்பாராது, விருப்பினர் இடம் போய்த் தம் சொந்தச் செலவில் விளக்கவுரை, விரிவுரை, தெளிவுரை எல்லாம் வலியச் சென்று போதிக்கும் அளவில் அருணகிரியாரின் நூல்களில் தோய்ந்து ஆய்ந்து, பரப்பும் பணியில் ஈடுபட்டுப் பாடுபட்டுவரும் நல்ல தூயநேயர்; திருப்புகழ் ஸம்பந்தமாக அரிய கட்டுரைகளை எழுதவல்ல ஆற்றல் பெற்ற நல்லன்பர். ஸ்ருங்கிரி சங்கராச்சார்ய ஸ்வாமிகள் குருபரம் பரைக்கே அடிமையான தெய்வீகக் குடும்பத்தினர்; அருணை முனிவரின் கருணைப் பெயரைச் சொன்னைலே, கேட்டாலே உருகும் தன்மை உடையவர். ''மீசை'' நடராஜன் என்றே நாங்கள் எல்லாம் ஆசையாக அழைக்கும் திருப்புகழ் அன்பர்.''

நன்றி.

திருப்புகழ் அடிமை ஸ்ரீ நடராஜஐயர் அவர்களின் புதல்வர்கள்
ஸ்ரீ சிவகுமார், ஸ்ரீ முத்துகுமார்

❖ ❖ ❖

கடலுலகினில்வருமுயிர்படுமவதிகள்
கலகமினையதுளகழியவும்நிலைபெற
கதியுமுனதுதிருவடிநிழல்தருவது..... மொருநாளே

உ

முருகா சரணம்.

வேலும், மயிலும், சேவலும் துணை.

நோயற்ற வாழ்வும், குறைவற்ற செல்வங்களும் பெற்று பெரு வாழ்வு வாழ

'திருப்புகழ் அடிமை' **ஸ்ரீ நடராஜ ஐயர் அவர்கள்**

தொகுத்து அருளிய

''திருப்புகழ் நித்ய அனுஷ்டான விதி''

1. காலையில் எழுந்தவுடன் படுக்கையில் அமர்ந்து கொண்டு, ''முருகா!, குமரா!!, குகா!!!, என உன்நாமமே மொழிந்து காதல் உமை மைந்தா என ஓதி காலமும் உணர்ந்து ஞானவெளி கண்கள் காண அருள் என்று பெறுவேனோ?'' என ஓதவும்.

2. ஏது பருகினாலும், ''அகில புவனாதி எங்கும் வெளியுற மெய்ஞான இன்பஅமுதை ஒழியாது அருந்த அருள்வாயே'' என்று கூறிவிட்டுப் பருகவும்.

3. குளிக்கும்போது, நீர்அடங்கிய செம்பை, இடது உள்ளங் கையில் வைத்துக் கொண்டு, ''தீர்த்த!, எனது அகம் ஏட்டையுடன் நினைவுத்த அருளுடன் நோக்கி அருளுதி'' என்று ஓதி, வலதுகை மோதிரவிரலால், ''ஓம்'' என்று நீரில் எழுதி, ''சரவணபவா'' என்று சொல்லி ஜலத்தைத் தலையில் தெளித்துக் கொண்டு தொடர்ந்து ஸ்நானம் செய்யவும்.

4. காலையிலோ மாலையிலோ வெளியில் புறப்படும் போது தவறாமல் விபூதி தரிக்க வேண்டும். அப்போது, ''மருவிய பரம ஞான சிவகதி பெறுக நீறு வடிவுற அருளி பாதம் அருள்வாயே'' என்று கூறி விபூதியைக் கையில் எடுத்துக் கொண்டு, கழுமலம், கற்பகவூர், செருத்தணி என்று இம்மூன்று தலங்களையும் நினைத்துக் கொண்டு சண்முகரை மனக்கண்ணால் தியானித்து ''ஆறுமுகம்'' என ஆறுமுறை ஓதி தரித்துக் கொள்ளவும். பின்பு, ''நீறு அது இட்டு நினைப்பவர் புத்தியில் நேசம் மெத்த அளித்தருள் சற்குரு நீலமுற்ற திருத்தணி வெற்புறை பெருமாளே!'' என ஓதவும்.

5. மானசீக பூஜை முடிந்து உண்ண உட்கார்ந்து அன்னம் பரிமாறியதும், ''பொருபிடியும் களிறும் விளையாடும் புனச் சிறு மான் தரு பிடி காவல'' என தியானித்துப் பின் உண்ணவும்.

6. வேலைக்குப் புறப்படும்முன், ''மிக அருமைப்பட்டு உன் பாதத் தாமரை சரணம் எனப் பற்றும் பேதையேன் மிசை விழி

அருள்வைத்து குன்றாத வாழ்வையும் அருள்வாயே'' என பிரார்த்தனை செய்துவிட்டு பின் செல்லவும்.

7. காரியசித்திக்கு, ''நினைத்தெத்தனையில் தவறாமல் நிலைத்த புத்திதனைப் பிரியாமல் கனத்த தத்துவம் உற்று அழியாமல் கதித்த நித்திய சித்து அருள்வாயே'' எனும் திருத்தணி திருப்புகழ் பூராவையும் ஓதி தியானிக்கவும்.

8. பிரயாணம் தொடங்கும் முன்,

''நாள்என்செயும் வினைதான் என்செயும் எனை நாடிவந்த
கோள் என்செயும் கொடும் கூற்று என்செயும் குமரேசர் இரு
தாளும் சிலம்பும் சதங்கையும் தண்டையும் சண்முகமும்
தோளும் கடம்பும் எனக்கு முன்னே வந்து தோன்றிடினே.''

எனும் கந்தர்அலங்காரச் செய்யுளை ஓதவும்.

(குறிப்பு: நாள் என்றால் நக்ஷத்திரம். 27 நக்ஷத்திரங் களுக்கும் சுபபரிகாரமாக குமரேசரிடம், தாள்கள்-2,சிலம்புகள்-2, சதங்கைகள்-2, தண்டைகள்-2, ஆறுமுகங்கள்-6, தோள்கள்-12 கடப்பமாலை-1. ஆக 27 அவயங்கள் இந்த பாசுரத்தில் கூறப்பட்டுள்ளது இதன் சிறப்பு.)

9. மாலையில் தீபங்கள் ஏற்றும் பொழுது, ''திருந்த வேதம் தண்தமிழ் தெரிதரு புலவோனே, விளங்கு தீபம் கொண்டு உனை வழிபட அருள்வாயே'' என ஓதவும்.

10. நோய்உற்றபொழுது,

''இருமலும் ரோகமும் முயலகன் வாதமும்
எரிகுண நாசி விடமே நீ
ரிழிவு விடாத தலைவலி சோகை
எழுகள மாலை இவையோடே
பெரு வயிறு ஈளை எரி குலை சூலை
பெருவலி வேறு உள நோய்கள்
பிறவிகள் தோறும் எனை நலியாத
படி உன தாள்கள் அருள்வாயே''

எனும் திருத்தணி மந்திரத் திருப்புகழை ஓதி திருநீறு தரித்துக் கொள்ளவும். பிறருக்கு நோய் வந்தால் அவர் பக்கத்தில் அமர்ந்து கொண்டு இந்த திருப்புகழை ஏகச் சித்த மனதோடு ஓதி நோய் உற்றவர் நெற்றியில் விபூதி தரிக்கவும்.

11. இரவில் துயிலும் முன்,

''மாகத்தை முட்டிவரும் நெடும் கூற்றன் வந்தால் என்முன்னே
தோகைப் புரவில் தோன்றி நிற்பாய் சுத்த நித்த முத்தித்
த்யாகப் பெருப்பை த்ரிபுராந்தகனைத் த்ரியம்பகனைப்
பாகத்தில் வைக்கும் பரம கல்யாணி தன் பாலகனே''
என்ற கந்தர்அலங்காரப் பாடலையும்,

''தவர்வாள் தோமர சூலம் தரியாக் காதிய சூரும்
தணியாச் சாகரம் ஏழும் கிரி ஏழும்
சருகாக் காய் கதிர் வேலும் பொரு கால் சேவலும் நீலத்
தரிக் கூத்தாடிய மாவும் தினைக் காவல்
துவர்வாய்க் கானவர் மானும் சுர நாட்டாள் ஒரு தேனும்
துணையாய்த் தாழ்வற வாழும் பெரியோனே
துணையாய்க் காவல் செய்வாய்''.
எனும் திருவோத்தூர் திருப்புகழையும் ஓதவும்.

12. தனித்து வழி செல்லும் போதோ அல்லது ஆபத்து, பயம் தோன்றிடின், ''வேலும், மயிலும், சேவலும் துணை'' எனும் மகா மந்திரத்தைத் தொடர்ந்து ஜெபித்துக் கொண்டே பயணிக்கவும். வேல்வகுப்பில் வரும் கீழ்க்கண்ட அடிகளை ஜெபிக்கவும்.

திருத்தணியில் உதித்தருளும் ஒருத்தன்மலை விருத்தன்எனது
உளத்துறை கருத்தன்மயில் நடத்தும்குகன் வேலே,
தனித்துவழி நடக்கும்எனது இடத்தும்ஒரு வலத்தும்இரு
புறத்தும்அருகு அடுத்தும்இரவு பகல்துணைய தாகும்
சொலற்கரிய திருப்புகழை உரைத்தவரை அடுத்தபகை
அறுத்துஎறிய உறுக்கிஎழும் அறத்தைநிலை காணும்
துதிக்கும் அடியவற்குஒருவர் கெடுக்கஇடர் நினைக்கின்அவர்
குலத்தைமுதல் அறக்களையும் எனக்குஓர்துணை யாகும்.

13. தும்மல்வந்து தும்மியவுடன், **'குமரா சரணம்'** என சொல்லவும்.

14. திருமணமான தாய்மார்கள் மாங்கல்ய பலத்திற்காக வெள்ளிக்கிழமைதோறும், ''வெள்ளி மலை எனவே கால் வாங்கி நிற்கும்களிற்றான் கிழத்தி கழுத்தில் கட்டு நூல் வாங்கிடாதன்று வேல்வாங்கி பூங்கழல் நோக்கு நெஞ்சே'' எனும் கந்தர் அலங்காரப் பகுதியை ஓதிவிட்டு வேல்வாங்கு வகுப்பைப் பாராயணம் செய்யவும்.

15. அமாவாசை, கிருத்திகை, சஷ்டி தினங்களில் வேல் மாறல் பாராயணமும், கிரகண காலங்களில் வேல்மாறலுடன் மயில்வகுப்பையும் பாராயணம் செய்யவும்.

உ

செந்திலாண்டவர் துணை

முகவுரை

திருப்புகழ் அடிமை நடராஜ ஐயரின் சீடர்கள்

முருகன் ஞானபண்டிதன். வேல் ஞானத்தின் சொரூபம். ஞானமே வேல். வேலே ஞானம். பல ஆலயங்களில் வேலே கருவறையில் மூலவராகக் காணமுடிகிறது. உதாரணத்திற்கு இலங்கை யாழ்ப்பாணத்து நல்லூர் ஆலயத்தில் வேலே மூலவர். அதேபோல் மலேசியா கோலாலம்பூரின் பத்துமலை ஆலயத் திலும் ஆதியில் இருந்தே வேலே தான் மூலவர். பின்னரே பாலமுருகனின் சிலாரூபம் பிரதிஷ்டை ஆனது. அவருக்கு பின்புறம் ஆதிவேல் இன்றும் பூஜிக்கப்படுகிறது.

வேலின் சக்தி அளப்பரியது. கற்பனைக்கு எட்டாதது. பிரபஞ்சத்தின் சக்தியின் சொரூபம் தான் முருகன் கை வேல். நாம் அணுசக்தியைப் பற்றி தெரிந்துள்ளோம். 1943-45-ல் ஜப்பான் நாட்டில் போடப்பட்ட சின்னப்பையன் எனும் அணுகுண்டு, இயற்கைச் சீற்றங்களான சுனாமி, புயல், மழை, எரிமலை, நிலச்சரிவு போன்றவைகள் பிரபஞ்ச இயக்கத்தின் அம்சமான அழிவுச் சக்திகளே, வேலின் நிஷ்கரக சக்தியின் ஒரு சிறு அளவு வெளிப்பாடு எனக் கொள்ளலாம். இப்போது நாம் அனுபவித்துக் கொண்டிருக்கிறோமே கரோனா, கோவிட்-19 , கண்ணால் காண இயலாத நுண்கிருமி இதுவும் இயற்கைப் பேரழிவின் சின்னமே. வேலின் சிஷ்ட பரிபாலன சக்தியை நாம் உணர்ந்து கொண்டுள்ளோம்.

திருத்தணிப் பெருமான் கரத்தில் தாங்கியிருக்கும் ஞான சக்தியாகிய வேலாயுதம் என்னென்ன கிரியைகளைச் செய்கிறது என வேல்வகுப்பில் அருணகிரிநாதர் விரிவாக வகுத்துக் கூறியுள்ளார்.

''வள்ளிப்பிராட்டியின் கருணை திருக்கண்களுக்கு ஒப்பாகும்; இந்திரனின் கால்விலங்கின் மூளை தெறிக்க அரமும் ஆகும், நக்கீரரின் இசைக்காக குகையை இடித்து வழி தெரியும்படி செய்யும், சிவசேனைகளில் உள்ள பேய்களின் பசி

அகல உபசரிக்கும், தேவர்முதல் மக்கள் வரை அனைவரையும் துன்பப்படுத்தும் விக்கினங்களையும் மோதி அழிக்கும், உலகின் ஒளிஎல்லாம்நாணப் பேரொளி வீசும், அடியவர் களுக்கு இடையூறு செய்பவர்கள் குலத்தையே நாசஞ் செய்யும், எனக்கு எப்பொழுதும் ஒப்பற்ற துணையாக வந்து உதவும், திருப்புகழ் பாடுவோருக்கு நேரும் பகையை வேரறுக்கும், அறத்தை நிலைபெறச் செய்யும், எமன் பற்றவரின் மார்க்கண்டேயரைக் காக்க சிவபெருமான் திருவடி போல் விரைந்துவந்து அடியாரைக் காக்கும், சிவ கணங்களையும் அமுதுஉண்ண அழைப்பதுபோல் தானும் தனது திருமுடியை வளைத்து வளைத்து காட்டும், தனி வழியில் செல்லும்போதெல்லாம் இரவு பகல் துணையாக வந்து அச்சம் அகற்றி நம்மைக் காப்பாற்றும், அரக்கர்களின் பெருங்குடலெடுத்து மாலைபோல் விருப்பமுடன் சூடிக் கொள்ளும், கடலை உடைத்து புனலைக் குடித்து, உடைத்த அடைப்பை அடைத்து அதில் அசுரரது உதிரத்தை நிறைத்து விளையாடும், சிறகுகளுடன் மலைகள் பறக்கின்றது எனக் கண்டவர்கள் கூறுமளவிற்கு விண்ணில் வேகமுடன் அதிர்ச்சி காட்டி ஓடும், போரில் எதிர்த்த அசுரர்களின் தலைகளை அறுத்து பற்களைக் கடித்து கண்ணைஉருட்டி விரித்து அவைகளை மோதும்'' என்றெல்லாம் அறக்கருணை மறக் கருணை இரண்டையும் செய்யும் வேலாயுதத்தின் செயலைப் புகழ்ந்து பாடுகிறார் நம் அருணைமுனிவர்.

மயிலின்மேல் அருணைமுனிவருக்கு அலாதி பக்தியும் பிரியமும் உண்டு. அவர் மயிலை நோக்கி, ''பன்னாளும் அடி பரவும் அருணகிரிநாதன்'' நான் என்பார், மயில் பல சுருதியில்.

அடியவர்களின் இடர்தீர, கந்தர்அலங்காரத்தில்,

..... வடக்கில் கிரிக்கு அப்புறத்து நின் தோகையின் வட்டமிட்டுக்
கடற்கு அப்புறத்தும், கதிர்க்கு அப்புறத்தும், கனகச் சக்ரத்
திடற்கு அப்புறத்தும் திசைக்கு அப்புறத்தும் திரிகுவையே'' என்பார்.

முருகன் அடியார்களை நோக்கி முருகனின் மயிலானது தன் அனுகூலப் பார்வையை விரிக்கும் என்பார் ''முந்து தமிழ் மாலை'' எனத்தொடங்கும் திருச்செந்தூர் திருப்புகழில்.

முருகனின் சேவல் வீரத்தின் சின்னம் அவரது கொடியில் விளங்கும் சேவல் தன்கால் நகங்களையே ஆயுதமாகக் கொண்டது என்பதை 'காலாயுதக் கொடியோன்' என்பார். சேவலின் சிகை சிவப்பு நிறத்தில் அதன் முடியில் மகுடம் போல் விளங்கும். 'கிஞ்சுகச் சிகாலங்கார வாரணக் கொடி உயர்த்தோன்' என்பார்.

வேலையும், மயிலையும், சேவலையும் பாடும் அடியார்கள், அவைகளைப் படிக்கும் பக்தர்கள் சகல செல்வ யோகமிக்க பெருவாழ்வு வாழ்வார்கள் என்பதை பலசுருதியில் மிகத் தெளிவா சொல்லி இருக்கிறார் நம் ஓசைமுநி. ஆகையால் ''ஆடும் பரிவேல் அணி சேவல் எனப்பாடும் பணியே பணியாய் அருள்வாய்'' என வேண்டி, **வாக்குக்கு அருணகிரி, வாழ்க்கைக்குத் திருப்புகழ்** என உணர்ந்து வாழ்வோம்.

எங்கள் ஆசான் வகுப்பில் சொல்லிக் கொடுத்தபடி அன்னாரின் சீடர்களான நாங்கள், இந்த புத்தகத்தில் பதிவு செய்துள்ளோம். எழுத்துப்பிழை, சொற்பிழை இருப்பின் பெரியோர்கள் மன்னித்தருள வேண்டுகிறோம். தெரிவித்தால் மறு பதிப்பில் திருத்திக் கொள்ளுகிறோம்.

திருப்புகழுக்காக தங்கள் வாழ்வையே அர்ப்பணித்த மகானுபாவர்களை நினைவு கொள்ளும் வகையினில் திருச்செந்தூரில் உருவாக்கப்படவுள்ள திருப்புகழ் கருவூலமான திருப்புகழ் சித்ர சபை திருப்பணிக்கு, திருப்புகழ் பாடும் அன்பர்கள், முருகனடியார்கள் மெய்யன்பர்கள் பொருளுதவு மாறு பிரார்த்தனை செய்கிறோம்.

திருப்புகழ் அடிமை ஐயாவின் சீடர்கள்

பொருளடக்கம்

1. மெய்யடியார்களுக்கு ஒரு வேண்டுகோள் i
2. நிறைப் புகழுரை v
3. உரையாசிரியரின் வாழ்க்கைச் சுருக்கம் ix
4. திருப்புகழ் நித்ய அனுஷ்டான விதி xii
5. முகவுரை xv

வேல், மயில், சேவல் விருத்தங்கள்

வேல்விருத்தம்
1. மகரம்அள 07
2. வெங்காள 15
3. வேதாள 22
4. அண்டர்உலகு 32
5. ஆலமாய் 39
6. பந்தாடலிற் 51
7. அண்டங்கள் 57
8. மாமுதல் 63
9. தேடுதற் 73
10. வலாரியல 81
11. பூவிலயன் 88

மயில்விருத்தம்
சந்தனபாளித (காப்பு)
1. சந்தானபுஷ்ப 10
2. சக்ரப்ரசண்ட 18
3. ஆதார 24
4. யுககோடி 34
5. சோதியிம 44
6. சங்கார 53
7. தீரப்பயோததி 59
8. செக்கரள 67
9. சிகரதமனிய 75
10. நிராசத 84
11. எந்நாளும் (பலசுருதி) 90

சேவல்விருத்தம்
கொந்தார் (காப்பு) 04
1. உலகிலநு 13
2. எரியனைய 20
3. கரிமுரட்டடி 28
4. அச்சப்படக் 36
5. தானாயி 48
6. பங்கமாகிய 55
7. வீறான 62
8. வந்தார்ப் 70
9. உருவாய் 78
10. மகரசல 86

வேல்வகுப்பு
பருத்தமுலை 94

மயில்வகுப்பு
ஆதவனும் 108

திரு எழு கூற்றிருக்கை 116

உ

ஓம் முருகா

வேல், மயில், சேவல் விருத்தங்கள்

வேல் மயில் வகுப்புகள்

மயில் விருத்தம் - காப்பு

முன்னுரை

முருகனின் மயில் பிரணவ மந்திர ரூபம். - ''ஆன தனி மந்திர ரூபநிலை கொண்டது ஆடுமயில்'' - என்பார் அருணகிரியார் சோலைமலைத் திருப்புகழில். விந்து சக்தியாகிய சகல ஒலிக்கும் / ஒளிக்கும் மூலகாரணமாகிய மஹாமாயையே மயில். மாயை அகல வேண்டும் என்றால் நாம் மயிலைப் போற்ற வேண்டும். அது மாயையை நீக்கிவிடும். வினை ஓட விடும் கதிர் வேல், மாயை நீங்கும் மயிலால்.

'இறப்பும் வரும்எழு பிறப்பும் அறஇனி
திருத்தும் எனமயில் விருத்தமொழிவன'

என பேய்கள் மொழிவதாக 'பொருகளத்தலகை வகுப்பில்' என்பார் அருணைமுனிவர். அதாவது மரணம் நீங்கி, மேன் மேலும் வருகின்ற ஏழுவகையான பிறப்புகளும் அகன்று பேரின்ப நிலையாகிய சாயுச்சியப் பதவியைத் தரும் என எண்ணி பேய்களும் மயில் விருத்தத்தைப் போர்க்களத்தில் பாராயணம் செய்கின்றன. அப்படி இருக்கையில் மயில் விருத்தம் மனிதர் களுக்கு எவ்வளவு அவசியம் என்பது விளங்கும். இதன் பலனை கடைசி விருத்தத்திலும், அழியாவரம் பெறுவரே என்பார்.

காப்பு.

ராகம்:நாட்டை தாளம்:ஆதி

சந்தன பாளித குங்கும புளகித சண்பக கடகபுயச்
சமர சிகாவல குமர ஷடாநந சரவண குரவணியுங்
கொந்தள பாரகி ராதபு ராதநி கொண்க எனப்பரவுங்
கூதள சீதள பாதம் எனக்கருள் குஞ்சரி மஞ்சரிதோய்

கந்தக்ரு பாகர கோமள கும்பக ராதிப மோகரத
கரமுக சாமர கர்ண விசால கபோல விதானமதத்
தெந்த மகோதர மூஷிக வாகன சிந்துர பத்மமுகச்
சிவசுத கணபதி விக்ந விநாயக தெய்வ சகோதரனே.

பதவுரை: ***சந்தன***-சந்தனம், ***பாளித***-குங்குமப்பூ, ***குங்குமம்***-குங்குமம் இவைகள் பூசப்பட்டதும், ***புளகித***-மகிழ்ச்சியை ஊட்டுவதும், ***சண்பக***-சண்பக மாலையைச் சூடியுள்ளதும், ***கடக***-வீரவளைகள் அணிந்துள்ளதுமான, ***புய***-திருத்தோள்களை உடைய, ***சமர சிகாவல***-போரிடுவதில்வல்ல மயிலை வாகனமாக உடையவனே, ***குமர***-குமாரக் கடவுளே, ***ஷடாநந***-ஆறுமுகத் தோனே, ***குரவுஅணியும்***-குராமலர்களை அணிந்துள்ள, ***கொந்தள பார***-கூந்தல் பாரத்தை உடைய, ***கிராத புராதனி கொண்க***-வேடர்குலத்தில் பிறந்த பழையவளாகிய வள்ளிப்பிராட்டியின் கணவா, ***எனப்பரவும்***-என்றும் புகழப்படும், ***சரவண***-சரவணப் பொய்கையில் உதித்தவனே, ***குஞ்சரி மஞ்சரி தோய்***-யானையால் வளர்க்கப்பட்டு தளிர் போன்று அழகுடைய தேவயானையைத் தழுவி அணைப்பவனே, ***கந்த***-கந்தக்கடவுளே, ***கிருபாகர***-கருணைக்கு இருப்பிடமானவனே, ***கோமள கும்பகர அதிப***-அழகான குடம் போன்ற கபோலத்தை உடையவரும், ***மோகரத கரமுக***-மகிழ்ச்சியை ஊட்டும் துதிக்கையை உடையவரும், ***சாமரகர்ண***-சவரி போன்ற விசாலமான காதுகளை உடைய வரும், ***விசால கபோல விதான மத***-அகன்ற கன்னத்தில் மதநீர்ப் பெருக்கை உடையவரும், ***எந்தை***-எனக்கு தந்தை போன்றவரும், ***மகோதர***-பெருவயிறு உடையவரும், ***மூஷிக வாகன***-மூஷிகத்தை வாகனமாக உடையவரும், ***சிந்துர பத்மமுக***-செந்தாமரை போன்ற முகத்தை உடையவரும், ***சிவசுத கணபதி***-சிவ குமாரனாகிய கணபதி, ***விக்ன விநாயக***-விக்னங்களை அகற்றும் விநாயகர் ஆகிய, ***தெய்வ சகோதரனே***-தெய்வத்திற்கு சகோதரனே, ***கூதள சீதள பாதம் எனக்கு அருள்***-கூதாளமலர் அணிந்துள்ள குளிர்ச்சி பொருந்திய உனதுதிருவடிகளை எனக்குத் தந்தருள வேண்டும்.

விளக்கவுரை: புராதனி: வள்ளி வேடர்குலத்தில் பிறந்து வளர்ந்தவளாதலினால் அவளைப் புதிதாக வந்தவள் என எண்ணக் கூடாது. முன் யுகத்தில் திருமாலின் கண்ணில் உதித்து நாரதரால் ஷடாச்சர உபதேசம் பெற்று சரவணப் பொய்கையின் கரையில் முருகனால் ஆட்கொள்ளப்பட்டு அவர் கட்டளையின்படி வள்ளி மலையில் உதித்தவள் என்பதை வற்புறுத்தவே அவளை 'புராதனி' என குறிப்பிட்டுள்ளார்.

சேவல் விருத்தம் - காப்பு.

முன்னுரை.

சித்தாந்தக் கருத்தின்படி ஆணவமலம் எப்பொழுதும் பூரணமாய் நசிந்து விடுவதில்லை, அதன் பலம் குன்றி ஒடுங்கி இருக்குமே தவிர பூராவும் மறைவதில்லை. அதன்படி ஆணவ மலத்தின் முழுசொரூபமாக விளங்கிய சூரபத்மன் மாமரமாய் வளர்ந்து நின்ற பொழுது முருகப்பெருமான் தனது வேலாயுத்தால் அவனை இருபிளவாக பிளந்து விடுகிறார். ஆனால் சூரன் மாளவில்லை. மயில் சேவல் உருவமெடுத்து எதிர்க்கிறான்.

அவன் முன் செய்த தவத்தின் பலன் கிட்டும் நேரம் வந்ததால், ஆறுமுகப்பெருமான் அவைகளின்மேல் அருட்கண் பாலித்து ஆட்கொள்ளுகிறார். பாம்பன்சுவாமிகளின் கருத்துப்படி சேவலை சுத்தமாயையின் ஊர்த்துவ பாகத்திலும், மயிலை அதோ பாகத்திலும் வைத்திருக்கிறார். சேவலோ மேலே நின்றுகொண்டு, உலகமக்களை அழைக்கிறது. **'உங்கள் அகங்காரத்தை விட்டு முருகனை அடைக்கலம் அடையுங்கள், உங்களின் நாற்ற உடம்பை விட்டு நாதஉடம்பை அடையுங்கள்'** என்று நாதம் எழுப்புகிறது.

மயில், **'என்னைப்போல் முருகனின் பாததீட்சை பெற்று - ஓம் எழுத்தில் மிக அன்புஊறி ஓவியத்தில் அந்தம் பெற வாரீர்'** - என்று அழைப்பு விடுகிறது. இதன்பிறகு ஞானமாகிய வேலாயுதம் அந்த பக்குவஆன்மாவை குகமயமாக செய்து விடுகிறது. இந்தக் கருத்தைக் கொண்டுதான் அருணகிரிநாதர் எல்லோருக்கும் தெரிந்த - நாதம் விந்து கலை - என்று அதே வரிசையில் சொல்லி இருக்கிறார் போலும்.

காப்பு

ராகம்:நாட்டை தாளம்:ஆதி

கொந்தார் குழல்வரி வண்டோ லிடுமியல்
கொண்டேழ் இசைமருளக்
குதலை மொழிந்தருள் கவுரி சுதந்தரி
குமரன் இதம்பெறுபொற்
செந்தா மரைகடம் நந்தா வனமுள
செந்தூர் எங்குமுளான்
திலக மயிலில்வரு குமரன் வரிசைபெறு
சேவல் தனைப்பாட
வந்தே சமர்பொரு மிண்டா கியகய
மாமுக னைக்கோறி
வன்கோ டொன்றை ஓடித்துப் பாரதம்
மாமே ருவிலெழுதிப்
பைந்தார் கொடுபல ராவணன் அன்பொடு
பணிசிவ லிங்கமதைப்
பார்மிசை வைத்த விநாயகன் முக்கட்
பரமன் துணையாமே.

பதவுரை: **கொந்து ஆர் குழல்**-பூங்கொத்துக்கள் சூடியுள்ள கூந்தலில், **வரி வண்டு**- இசை பாடும் வண்டினங்கள், **ஓலிடும் (இயல் கொண்டு)**-ரீங்காரம் செய்யும், **இயல் கொண்டு**-அந்த இலக்கணத்திற்கு நிகராகவும் (அதே போல்), **ஏழ்இசை மருள**-சங்கீதத்தில் வரும் ஸரிகமபதநி என்கின்ற ஏழு சுரங்களும் தோற்று பின் வாங்கவும், **குதலை மொழிந்தருள்**-மழலைச் சொற்கள் பேசி அடியவர்களுக்கு அருள்புரியும், **கவுரி**-பொன்நிற வடிவினள், **சுதந்தரி**-எவரிடத்தும் வசப்படாமல் தன்னிச்சையாக செயல்படுபவள் ஆகிய உமாதேவியின், **குமரன்**-குமாரனாகிய முருகக் கடவுள் (வீற்றிருக்கும்),

இதம்பெறு-நன்மைகளைத்தரும், **பொன்**-அழகான, **தாமரைக் கடம்**-தாமரைக் காடுகளும், **நந்தாவனம் உள**-அழியாத சோலைகளும் உள்ள, **செந்தூர்**-திருச்செந்தூர், **எங்கு முளான்**-

மற்ற பல தலங்களிலும் குடிகொண்டுள்ள குமாரமூர்த்தியின், **திலக மயிலில் வரு**-சிறப்பு வாய்ந்த, (திலகம் போன்ற) மயில்வாகனத்தில் வரும், **குமரன்**-முருகப் பெருமானின், **வரிசை பெறு**-சிறப்பு வாய்ந்த, **சேவல் தனைப்பாட**-சேவலை நான் துதித்து (பாடுவதற்கு), **வந்தே சமர் பெரு**-எதிர்த்து போருக்கு வந்த, **மிண்டாகிய**-மதம் பிடித்த, **கயமாமுகனைக் கோறி**-கஜமுகாசுரனைக் கொன்று, **வன் கோடு ஒன்றை ஒடித்து**-தனது வலிமை பொருந்திய ஒரு தந்தத்தை ஒடித்து, **பாரதம் மாமேருவில் எழுதி**-பாரதக் கதையை மேருமலையில் வைத்து எழுதினவரும், **பைந்தார் கொடுபல**-பசுமையான அன்று பூத்த பல மலர்மாலைகளைக் கொண்டு, **ராவணன் அன்பொடு பணி சிவலிங்கமதை**-ராவணன் வழிபட்டு பூஜை செய்த சிவலிங்கம் ஆன மஹாபலேஸ்வரரை, **பார்மிசை வைத்த**-கோகர்ணத்தில் பூமியில் வைத்த, **விநாயகன்**-கணபதி யாகிய, **முக்கண் பரமன் துணையாமே**-மூன்று கண்களை உடைய பரமதெய்வம் எனக்குத் துணை புரியட்டும்.

விளக்கவுரை: ஏழ்இசைமருள: உமையின் சபாஷ் என்கிற சொல்லைக் கேட்டு இந்த இனிமைக்கு முன்னால் நமது வீணை வாசிப்பு எந்த மட்டு என்று நினைத்து வீணையை சரஸ்வதி கீழே வைத்து விட்டாள் என்று சௌந்தர்ய லஹரி கூறுகிறது. இங்கு அம்பாளின் குரல் இனிமையைக் கேட்டு ஏழு சங்கீதசுரங்களும் ஒளிந்துகொண்டன என்று அருணகிரியார் புகழ் கிறார்.

சிவலிங்கமதை: இராவணன் கயிலைக்குச் சென்று அரிய தவம்செய்து சிவபெருமானிடத்தில் இலங்கை அழியாதிருக்க வரம் கேட்டான். பெருமானும் அன்புடன் கொட்டைப் பாக்கு அளவுள்ள லிங்கத்தை தந்து அருள்புரிந்தார். அந்தலிங்கத்தை கீழே எந்தஇடத்திலும் வைக்கக்கூடாது எனவும் உத்தரவிட்டார். இவ்விலிங்கம் இலங்கையில் வைக்கப்பட்டால் இராவண சாம் ராஜ்யத்திற்கு அழிவில்லாது போய்விடுமே என்று அஞ்சிய தேவர்கள் விநாயகப்பெருமானிடம் சென்று முறைஇட்டனர். அவரும் ஒரு அந்தணச் சிறுவன் உருவமெடுத்து இராவணன் போகும் வழியில் நின்றார். கணபதியின் ஏவலால் வருணன் இராவணனின் வயிற்றில் ஜல உபாதியை விளைவித்தான். இராவணன் லிங்கத்தை எதிரில் நிற்கும் சிறுவனாகிய விநாயகப்

பெருமானிடத்தில் கொடுத்து அதை கீழே வைக்காமல் இருக்கச் சொன்னான். அதற்கு விநாயகப்பெருமான்தான் மூன்று முறை கூப்பிடுவதற்குமுன் வந்து லிங்கத்தை பெற்றுக்கொள்ளும் படியும் தவறினால் லிங்கத்தைக் கீழே வைத்து விடுவதாகவும் பதிலளிக்கிறார். அதன்படி இராவணன் வராததினால் லிங்கத்தை கீழே வைத்துவிடுகிறார். லிங்கம் பூமியில் ஒட்டிக்கொண்டு விடுகிறது. இராவணன் வந்து பார்த்து அதை எடுக்க முயன்றும் முடியாது போக அதுவே ஒரு பசுவின் காதுபோல் குழைந்ததே தவிர நிலை பெயரவில்லை. இராவணன் சலிப்படைந்து இவர் மஹாபலம் உடையவர் போலும் என்றதால் அவருக்கு **'மஹா பலேஸ்வரர்'** என்கிற திருநாமமும் அவ்விடத்திற்கு **'கோகர்ணம்'** என்றும் பெயர் ஏற்பட்டது.

இந்நிகழ்ச்சிக்கு காரணமானவன் இவ்வந்தணச் சிறுவனே என எண்ணி கோபமடைந்த இராவணன் சிறுவனான விநாயகப் பெருமானை திருமுடியில் குட்ட, அவரும் இராவணனை ஆகாயத்தில் தூக்கி எறிந்து விளையாடுகிறார். பின் இராவணன் வந்தது யார்என அறிந்து மன்னிப்பு கேட்கிறான். இப்போதும் அங்கு இதே விநாயகர் **'த்விபுஜ விநாயகர்'** என்கிற திருநாமத் துடன் விளங்குகிறார். அவர் தலையில் இராவணன் குட்டிய சின்னமாக தலையில் பள்ளமும் காணப்படுகிறது.

❖ ❖ ❖

வேல் விருத்தம் – 1

ஹம்ஸத்வனி கண்டசாபு

மகரம்அள றிடைபுரள உரககண பணமவுலி
மதியும்இர வியுமலையவே
வளரெழிலி குடருழல இமையவர்கள் துயரகல
மகிழ்வுபெறு மறுசிறையவாஞ்
சிகரவரை மனைமறுகு தொறுநுளைய மகளிர்செழு
செநெல்களொடு தரளம்இடவே
செகசிரப கிரதிமுதல் நதிகள்கதி பெறஉததி
திடர்அடைய நுகரும்வடிவேல்
தகரமிரு கமதமென மணமருவு கடகலுழி
தருகவுளும் உறுவள்எயிறுந்
தழைசெவியும் நுதல்விழியும் உடையஒரு கடவுள்மகிழ்
தருதுணைவன் அமரர்குயிலுங்
குகரமலை எயினர்குல மடமயிலும் எனஇருவர்
குயமொடமர் புரியுமுருகன்
குமரன்அறு முகன்எதிரும் விருதுநிசி சரர்அணிகள்
குலையவிடு கொடியவேலே.

பதவுரை: ***மகரம் அளறு இடை புரள***-பெரிய சுறா மீன்கள் சேற்றில் புரளவும், ***உரகம் கண மவுலி***-ஆதிஷேசனின் கூட்டமான ஆயிரம் முடிகளின்மேல், ***மதியும் இரவியும் அலையவே***-சந்திரஒளியும் சூரியஒளியும் சேர்ந்து தாக்கவும், ***வளர் எழிலி குடர் உழல***-பெரிதாக பரந்திருக்கும் மேகங்களின் உட்பாகம் சுழற்சி அடையவும், ***இமையவர்கள் துயர் அகல***-தேவர்களின் துன்பம் நீங்கவும், ***மகிழ்வு பெறும்***-களிப் படைந்த, ***அறு சிறையவாம்***-சிறகுகள் அறுக்கப்பட்ட, ***சிகர வரை***-மலைகளின் சிகரங்களிலும், ***மனை***-வீடுகளிலும், ***மறுகு தொறும்***-முச்சந்திகளிலும், ***நுளைய மகளிர்***-மலைஜாதிப் பெண்கள், ***செழு செநெல்களோடு தரளம் இடவே***-செழுமையான நெல் தானியங்களுடன் முத்துக்களையும் உரலில் இட்டு குற்றவும், ***செகம் சிரம்***-இந்தஉலகில் முதன்மை ஸ்தானம் வகிக்கும், ***பகீரதி முதல் நதிகள் கதி பெற***-கங்கை முதலாகிய மற்ற

நதிகள் பழையபடி தங்களுடைய ஓட்டத்தை ஆரம்பிக்கவும், **உததி திடர் அடையவும்**-சமுத்திரம் வற்றி மண் திடலாக போகும்படி, **நுகரும் வடி வேல்**-அந்த ஜலத்தை எல்லாம் உறிஞ்சிய, **வடிவேல்**-கூரிய வேலாயுதம், (அது யாருடையது என வினாவில்),

தகர-வாசனைச் சாந்து, **மிருக மதம்**-கஸ்தூரி (இவைகளின்) **மண மருவு**-வாசனை கொண்டு நறுமணம் வீசும், **கடகலுழிதரு**-ஊற்றுப்போல் பெருக்கெடுக்கும் மதநீர் தோன்றும், **கவுளும்**-கபோலமும், **உறுவள் எயிறும்**-உறுதியான திண்மை பொருந்திய (பற்கள்) தந்தமும், **தழை செவியும்**-தழைந்துள்ள இரண்டு காதுகளும், **நுதல் விழியும்**-நெற்றிக்கண்ணும், **உடைய ஒரு கடவுள்**-கொண்டு விளங்கும் ஒப்பற்ற விநாயகப் பெருமான், **மகிழ்தரு துணைவன்**-மகிழ்கின்ற சகோதரனும், **அமரர் குயிலும்**-தேவர்களால் வளர்க்கப்பட்ட குயில்போன்ற இனிய குரலுடைய தேவசேனை, **குகரமலை**-குகைகள் நிறைந்துள்ள மலையில் வசிக்கின்ற, **எயினர்குல மடமயிலும்**-வேடர் குலத்தில் வளர்ந்த அழகிய மயில் போன்ற வள்ளிப் பிராட்டி, **என இருவர்**-என்கிற இருநாயகிகளின், **குயமோடு அமர் புரியும்**- மார்பகங்களை அணைக்கும், **முருகன்**-முருகப்பெருமான், **குமரன்**- பால சுப்ரமணியன், **அறுமுகன்**-சண்முகன் ஆகிய முருகப் பெருமானை, **எதிரும்**-எதிர்த்து, **விருது**-பல வெற்றிச் சின்னங்களுடன் வந்த, **நிசிசரர்**-அரக்கர்களின், **அணிகள்**-சேனைகளை, **குலையவிடு**-சிதறிப் போகும்படி செய்த, **கொடிய வேலே**- வீரம்மிகுந்த வேலே தான் அது.

விளக்கவுரை: கடலின் மத்தியில் மாமரமாய் நின்ற சூரபத்மாவின் மேல் வேலை எறிந்த போது, வேலின் வெப்பத்தை தாங்க முடியாமல் கடல்நீர் ஆவியாகி அடியில் சேறுமட்டும் இருந்தது. அந்தச் சேற்றில் பெரியமீன்கள் நெளிந்து புரண்ட போது, சேற்றின் நடுவில் அங்காங்கே துவாரங்கள் தெரிய, அந்தப் பிளவுகளின் வழியாக அதலபாதாளத்தில் பூமியைத் தாங்கிக் கொண்டிருக்கும் ஆதிசேஷனின் ஆயிரம் பணா மகுடங்கள் தெரிகின்றன. சேற்றின் சந்துகளின் மூலமாக சூரிய சந்திரர்களின் ஒளிக்கற்றைகள் அந்தப் படங்களின் மேல் விழ

அதிலுள்ள ஆயிரக்கணக்கான ரத்தினங்கள் ஒளி விட்டுப் பிரகாசிக்கின்றன.

வேலாயுதத்தின் வேகத்தில் மேகங்களின் உட்பகுதி சுழற்சி அடைந்து மழை பெய்கிறது. இதுகாலும் பட்ட துன்பங்கள் தீர்ந்து தேவர்கள் களிப்படைகின்றனர். சூரனாகிய மாமரம் நதிகள் சமுத்திரத்தில் விழாமல் அடைத்து நின்றதால், நதிகளின் ஓட்டம் நிறுத்தப்பட்டதால் மலைகள் ஆடத் தொடங்குகின்றன. சூர மா மரம் பிளக்கப்பட்டதால் இப்போது நதிகள் முன்போல் பாயத் தொடங்கியதால் மலைகளுக்கு மகிழ்ச்சி ஏற்படுகின்றது. இது காலும் வானிலை, நீர்நிலை தடுமாற்றம் அடைந்த அவலம் போய் பழையபடி மழைபெய்து நதிகள் பாய்வதால் மலை வயல்களில் செழிப்பாக நெற்பயிர்கள் விளைந்து ஆறுகளிலும் முத்துக்கள் கொழித்து வர, இவை இரண்டையும் சேர்த்து மலைப் பெண்கள் உரலில் இடுகின்றனர்.

தன் அடியார்களின் குறைகளைத் தீர்ப்பதற்காக விநாயகப் பெருமானுக்கு தழைத்த பெரிய செவிகள் உள்ளன. அடியார்களின் பகையை ஓட்டுவதற்காக அவருக்கு நெற்றியில் மூன்றாவது கண். வேலைப்பற்றி பாடுவதாலும், வேல் ஞானத்தின் சொரூபமாக உள்ளதாலும் தனியாக கணபதி துதிபாடாமல், இப்பாட்டின் பின் பகுதியிலேயே விநாயகப்பெருமானை எண்ணி வழிபாடு செய்கிறார் அருணகிரியார்.

துணைவன் என்பதில் ஒரு இனிய கருத்து. தன் சகோதரரான விநாயகப்பெருமானை தொழும் அடியார்களுக்கு முருகன் துணை யாக வருவான் என்பதே இக் கருத்தாகும்.

இதை தேவேந்திரசங்க வகுப்பிலும்,

''அடன்மிகு கடதட விகடித மதகளி றனவர தமுமக
லாமாந்தர்கள் சிந்தையில் வாழ்வாம்படி'' எனக் கூறுவார்.

முருகன் கிரவுஞ்சகிரியையும் சூரனுக்குக் காவலாய் இருந்த ஏழு மலைகளுடன் போர் புரிந்தது மட்டுமல்லாமல் தனது நாயகிமார்களுடைய திருமார்பகங்களுடனும் போர் புரிந்தார் என நயம்பட கூறுகிறார் நமது அருணை வள்ளல்.

அறுசிறை: *முன்காலத்தில் மலைகளுக்கெல்லாம் சிறகுகள் (சிறை) இருந்தன. அவைகள் பறந்துசென்று கண்டஇடங்களில் எல்லாம் இறங்கி உலகோருக்கு துன்பம் விளைவித்ததால் அவற்றின் சிறகுகளை இந்திரன் தன் வஜ்ராயுதத்தால் வெட்டி விட்டான். இதையே அருணகிரியார் - அறுசிறை - என குறிப் பிடுகிறார்.*

மயில் விருத்தம் – 1

ஹம்ஸத்வனி கண்டசாபு

சந்தான புஷ்பபரி மளகிண் கிணீமுகச்
சரணயுக ளமிர்தப்ரபா
சந்த்ரசே கரமூஷி காரூட வெகுமோக
சத்யப்ரி யாலிங்கனச்
சிந்தா மணிக்கலச கரகட கபோலத்ரி
யம்பக விநாயகன்முதற்
சிவனைவலம் வருமளவில் உலகடைய நொடியில்வரு
சித்ரக் கலாபமயிலாம்
மந்தா கிநிப்பிரப வதரங்க விதரங்க
வனசரோ தயகிர்த்திகா
வரபுத்ர ராஜீவ பரியங்க தந்திய
வராசலன் குலிசாயுதத்
திந்த்ராணி மங்கில்ய தந்துரட் சாபரண
இகல்வேல் விநோதன் அருள்கூர்
இமையகிரி குமரிமகன் ஏறுநீ லக்ரீவ
ரத்னக் கலாபமயிலே.

பதவுரை: ***சந்தான****-தேவலோக விருட்சங்களில் ஒன்றான சந்தானமர புஷ்பத்தின்,* ***பரிமள****-நறுமணம் வீசுவதும்,* ***கிண்கிணி முக****-சதங்கையை தன்னிடத்தில் கொண்டதும்,* ***அமிர்த ப்ரபா****-அமிர்த ஒளியை வீசுவதும் ஆகிய,* ***சரண யுகள****-இரண்டு திருவடிகளை உடையவரும் (****யுகள****-இரண்டு),* ***சந்திரசேகர****-பிறைச் சந்திரனை அணிந்தவரும்,* ***வெகுமோக சத்யபிரிய ஆலிங்கன****-மிகப் பிரியத்துடன் சத்யநெறியையே தழுவிக்*

கொண்டிருப்பவரும், **சிந்தாமணி**-தேவலோகத்து மணியாகிய சிந்தாமணிபோல் அடியார்களுக்கு நினைத்ததை அள்ளிக் கொடுப்பவரும், **கலச கர**-தனது தாய்தந்தையர்களுக்கு அபிஷேகம் செய்வதற்காக ரத்னகலசத்தை திருக்கரத்தில் ஏந்தி இருப்பவரும், **கட கபோல**-மதநீர் பெருகும் கன்னங்களை உடையவரும், **த்ரியம்பக விநாயகன்**-முக்கண்ணினை உடையவருமாகிய கணபதி, **முதல்**-முன்னொரு காலத்தில், **சிவனை வலம் வரும் அளவில்**-கனிக்காக போட்டிஇட்டு சிவபெருமானைச் சுற்றிவரும் அதேநேரத்தில், **உலகடைய நொடியில் வரு**-சராசலங்கள் அனைத்தையும் ஒருநொடியில் சுற்றிவந்த, **சித்ரகலாப மயிலாம்**-அழகான தோகைகளை உடைய மயில்;

(அது யாருடையது என வினாவினால்),

மந்தாகினி பிரபவ-கங்கையில் உதித்தவரும், **தரங்க விதரங்க**-மனக் கவலைகளை பிளந்து பறிப்பவரும், **வன சரோதய**-சரவணத்தில் உதித்தவரும், **கிர்த்திகா வர புத்ர**-கிருத்திகை மாதர்களின் ஜேஷ்ட புதல்வரும், **ராஜிவ பரியங்க**-தாமரை மலரை தனது கட்டிலாக கொண்டவரும், **தந்திஅ வர அசலன்**-பாம்பு வடிவமான அந்த சீர்மிகு நாகாசல வேலவனும், **குலிசாயுதத்து இந்திராணி**-வஜ்ராயுதத்தை உடைய இந்திரனின் மனைவியாகிய இந்திராணியின், **மாங்கல்ய தந்து ரட்சாபரண**-மாங்கல்ய நூலை காப்பாற்றினவரும், **இகல் வேல் விநோதன்**-போரிடவல்ல வேலாயுதத்தை ஏந்தி இருக்கும் ே பரழகை உடையவனும், **அருள்கூர்**-அருளைச் சுரக்கும், **இமயகிரி குமரிமகன்**-இமவான் மடந்தை பார்வதியின் திருக்குமாரனாகிய முருகக் கடவுள், **ஏறு நீலக்ரீவ ரத்ன கலாப மயிலே**-வாகனமாக ஏறிவரும் நீலநிறமான கழுத்தையும் பச்சை நிறமாக ஒளிவீசும் தோகைகளை உடைய மயிலே அது.

விளக்கவுரை: தேவலோகத்து ஐந்துவகையான மரங்கள் இவைகள்: 1.சந்தானம், 2.ஹரிசந்தானம், 3.மந்தாரம், 4.பாரிஜாதம், 5.கற்பகம் எனப்படும்.

விநாயகப்பெருமான் கயமுகாசுரனைக் கொல்லாமல் தன்னுடைய அருளுக்குப் பாத்திரமாக தனது வாகனமாகக் கொண்டது அவரது தனிப்பெருங் கருணையே. இங்கு ஒரு யோகக்

கருத்தும் உண்டு. விநாயகர் மூலாதாரக் கடவுள். பிரணாயாமத்தால் குண்டலினியை மூலாதாரத்தில் இருந்து எழுப்பும்போது அது இரவில் மூஞ்சுறு குறுகுறு என ஒலிக்கும் சத்தத்தைப்போல உண்டாக்கும். இது ஞானிகளின் அநுபவமாகும்.

சிந்தாமணி விநாயகர்: விநாயக மூர்த்தங்களில் சிந்தாமணி விநாயகர் மூர்த்தமும் ஒன்று. கபிலமுனிவர் பாதாளத்தில் தவம் செய்து கொண்டிருக்கும் போது, தன்னைத் துன்புறுத்திய சகரர் 60,000 பேரையும் எரித்து விடுகிறார். பின்பு தன்னிடம் வந்த இந்திரனுக்கு அறுசுவை உணவை இட்டு உபசரித்தபோது பெரும் உவப்படைந்த இந்திரன் தனக்கு திருப்பாற்கடல் கடையப்பட்ட போது கிடைத்த சிந்தாமணி என்கிற ரத்தினத்தை பரிசாக தருகிறார்.

பின்பு ஒருசமயம் கணன் என்கிற மன்னன் வேட்டையாடி வரும்போது முனிவரிடம் இருந்த சிந்தாமணியை வலிய கவர முயற்சி செய்கிறான். இதனால் வருந்தி கபிலர் விநாயகப் பெருமானை துதித்து இறைஞ்ச அவர் நேரில் தோன்றி அந்த மன்னனை அழிக்கிறார். களிப்படைந்த கபிலர் அந்த சிந்தாமணி எனும் ரத்தினத்தை விநாயகருக்கு கொடுக்க அவர் அதை அணிந்து கொள்கிறார் அவரே **சிந்தாமணி விநாயகர்.**

சிவனை வலம் வருமளவில்: கணபதி சிவபெருமானை சுற்றி வந்த அதேநேரத்தில் முருகனும் தனது மயில்வாகனத்தில் உலகைச் சுற்றி வந்தார் என்பதை பல இடங்களில் அருணகிரியார் நயம்பட கூறுவார்.

''இனியகனி கடலைபய றொடியல்பொரி யமுதுசெயும்
இலகுவெகு கடவிகட தடபார மேருவுடன்
இகலிமுது திகிரிகிரி தெரியவளை கடற்கதற
எழுபுவியை யொருநொடியில் வலமாக வோடுவதும்''.

என்பார் சீர்பாத வகுப்பில்.

வன சரோதய என்னும் சொல்லுக்கு வேடனாக உரு மாறி வந்தவர் எனவும் பொருள் கொள்ளலாம்.

வன + சரர் + உதய என இச் சொல் பிரியும்.

சரவணப்பொய்கையில் ஆறுபொறிகளும் ஆறுகுழந்தைகள் வடிவம் எடுத்து தாமரைமலரில் பள்ளி கொண்டதை-ராஜீவ பரியங்க-என அழகுபட கூறுவார் அருணகிரியார். பரியங்க என்ற சொல்லுக்கு கட்டில் என்பது பொருள்.

சேவல் விருத்தம் – 1

ஹம்ஸத்வனி கண்டசாபு

உலகிலநு தினமும்வரும் அடியவர்கள் இடரகல
உரியபர கதிதெ ரியவே
உரகமணி எனவுழலும் இருவினையும் முறைபடவும்
இருள்கள்மிடி கெட அருளியே
கலகமிடும் அலகைகுறள் மிகுபணிகள் வலிமையொடு
கடினமுற வரில் அவைகளைக்
கண்ணைப் பிடுங்கியுடல் தன்னைப் பிளந்துசிற
கைக்கொட்டி நின்றா டுமாம்
மலைகள்நெறு நெறுநெறென அலைகள்சுவ றிடஅசுரர்
மடியஅயில் கடவு முருகன்
மகுடவட கிரியலைய மலையுமுலை வநிதைகுற
வரிசையின மகளவ ளுடன்
சிலைகுலிசன் மகள்மருவு புயன்இலகு சரவணச்
சிறுவன்அயன் வெருவ விரகிற்
சிரமிசையில் வெகுசினமொ டடியுதவும் அறுமுகவன்
சேவற் றிருத்து வசமே.

பதவுரை: **உலகில்**-இப்பூவுலகில், **அடியவர்**-முருகப் பெருமானின் அடியவர்களுக்கு, **அனுதினமும் வரும்**-நாள் தோறும் ஏற்படும், **இடர்அகல**-இடஞ்சல்கள் நீங்கும்படியும், **உரிய**-அவர்களுக்கு கிடைக்க வேண்டிய லட்சியமாகிய, **பரகதி** - சாயுச்சிய நிலையாகிய முக்தியை, **தெரியவே**-காண்பித்தருளியும், **மணி உரகம் என**-படத்தில் ரத்தினத்தைத் தாங்கி இருக்கும் சர்ப்பங்கள்போல, **உழலும்**-அலைந்து திரிகின்ற, **இரு வினையும் முறைபடவும்**-நல்வினை தீவினை இரண்டும் அழியவும், **இருள்கள் மிடி கெட**-அஞ்ஞான இருளாகிய

பொருள் வறுமை, அறிவு வறுமை ஆகிய இரண்டும் அழிந்து ஒழியும்படி, **அருளியே**-அருள் செய்யவும், **கலகமிடும்**- இடைஞ் சல்கள் செய்துவரும், **அலகை குறள்**-பேய்களும் குட்டிச் சாத்தன்களும், **மிகு பணிகள்**-கொடிய பாம்புகள், **வலிமை யோடு**-மிகுந்த பலத்துடன், **கடினமுறவரில்**-பெரும் துன்பத்தைத் தர வந்தால், **அவைகளை**-அவைகளை எல்லாம், கண்ணைப் **பிடுங்கி** - உடல்தன்னைப் **பிளந்து**-கண்களைப் பிடுங்கியும் தேகங்களைப் பிளந்தும், **சிறகைக் கொட்டி நின்று ஆடும்**-தனது சிறகுகளை அடித்துக்கொண்டு வெற்றிக்களிப்புடன் நின்று கூத்தாடும்,

(அது எதுஎன வினவினால்),

மலைகள் நெறுநெறுநெறு என-உலகில் உள்ள மலைகள் அனைத்தும் பொடிபடவும், **அலைகள் சுவறிட**-சமுத்திரம் வற்றி வறண்டு போகவும், **அசுரர் மடிய**-அரக்கர்கள் அனைவரும் இறந்து மடியவும், **அயில் கடவு முருகன்**-வேலாயுதத்தைப் பிரயோகித்த முருகப்பெருமான், **மகுட வடகிரி அலைய**-சிகரங்களை உடைய மேருமலை தோல்வி அடையும்படி, **மலையும்**-எதிர்த்து போர்செய்கின்ற, **முலை வனிதை**-தன பாரங்களை உடைய பெண்ணும், **குறவர்**-வேடர் குடி மக்களாகிய, **இசை**-புகழ்மிக்க, **இனமகள் அவளுடன்**-அந்த ஜாதியில் பிறந்த வள்ளிப் பிராட்டியையும், **சிலை குலிசன் மகள்**-கோபமுடைய வஜ்ராயுதத்தை ஏந்தியுள்ள இந்திரனின் திருமகளாகிய தேவயானையையும், **மருவுபுயன்**-அணைத் திருக்கும் பன்னிரு திருப்புயங்களை உடையவன், **இலகு சரவணச் சிறுவன்**-விளங்கும் சரவணப்பொய்கையில் உதித்த குமாரன், **அயன் வெருவ**-பிரமதேவன் அஞ்சும்படி, **விரகில்**-வெகு சாமர்த்தியமுடன், **சிரமிசையில்**-தலையில், **வெகு சினமொடு அடி உதவும்**-மிகுந்த கோபத்துடன் குட்டிஅருளிய, **அறுமுகன்**-சண்முகப் பெருமானின், **சேவல் திருத்துவசமே**-கொடியில் அமர்ந்துள்ள சேவலே தான் அது.

விளக்கவுரை: சைவசித்தாந்தத்தில் உள்ள முக்கிய கோட்பாடுகளில் ஒன்று-ஒரு ஜீவன் இரு வினைகளினால் அடிபட்டு அடிபட்டு பக்குவப்படும் சமயம் பராசக்தி அந்த ஜீவனின் இரு வினைகளையும் சமன்படுத்தி மும்மலங்களையும்

ஒழித்து முக்தி நிலைக்கு சேர்ப்பிப்பாள். இந்த அரும் பெரும் தொழிலை குமரக் கடவுளின் கொடியில் உள்ள சேவலும் செய்து கொடுக்கும் என்பதை அருணகிரியார் முதல் பாடலின் முதல் பாதியிலேயே குறிப்பிடுகிறார்.

சேவல் விருத்தம் பாராயணம் செய்வதினால் பில்லி சூனியம் போன்றவைகளினால் ஏற்படும் துன்பங்களை அது அகற்றிவிடும் என்பது ஒரு பொதுவான கருத்து. அதைத்தவிர முருகப் பெருமானின் சேவல், அடியார்களை நல்கதிக்கு வழி காண்பித்து ஆன்மீக மார்க்கத்தில் செல்லும் அவர்களுக்கு ஏற்படும் இடைஞ்சல்களை அனைத்தையும் தீர்த்து அவர்களுக்கு மோட்ச சாம்ராஜ்யத்திற்கு வழிகாட்டும் என்கிற கருத்தும் இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது.

❖ ❖ ❖

வேல் விருத்தம் - 2

மோஹனம் கண்டசாபு

வெங்காள கண்டர்கைச் சூலமுந் திருமாயன்
வெற்றிபெறு சுடர்ஆழியும்
விபுதர்பதி குலிசமுஞ் சூரன் குலங்கல்லி
வெல்லா எனக்கருதியே
சங்ராம நீசயித் தருளெனத் தேவருஞ்
சதுர்முகனும் நின்றிரப்பச்
சயிலமொடு சூரனுடல் ஒருநொடியில் உருவியே
தனிஆண்மை கொண்ட நெடுவேல்
கங்காளி சாமுண்டி வாராகி இந்த்ராணி
கௌமாரி கமலாசனக்
கன்னிநா ரணிகுமரி த்ரிபுரைபயி ரவிஅமலை
கௌரிகா மாஷிசைவ
சிங்காரி யாமளை பவாநிகார்த் திகைகொற்றி
த்ரியம்பகி அளித்த செல்வச்
சிறுவன்அறு முகன்முருகன் நிருதர்கள் குலாந்தகன்
செம்பொற் றிருக்கை வேலே.

பதவுரை: வெங்காள கண்டர் கைச்சூலமும்-கொடிய ஆலகால விஷத்தை அடக்கிக் கொண்டிருக்கும் கழுத்தை உடைய சிவபெருமானின் சூலாயுதமும், **திருமாயன் வெற்றிபெறு சுடராழியும்**-திருமாலின் வெற்றிச்சின்னமான ஒளிவீசுகின்ற சக்ராயுதமும், **விபுதர்பதி குலிசமும்**-தேவர்களின் தலைவனான இந்திரனின் வஜ்ராயுதமும், **சூரன் குலம்**-சூரபத்மாவின் சுற்றம் முழுவதையும், **கல்லி**-அடியோடு பெயர்த்து, **வெல்லா**-வெற்றி காணும் திறமை உடையன அல்ல, **எனக் கருதியே**-என்று நினைத்து, **சங்க்ராம நீ சயித்து அருள் என**-சிறந்தபோர் வீரனே, நீ ஜெயித்து எங்களுக்கு அருளவேண்டும் என்று, **தேவரும் சதுர்முகனும் நின்று இரப்ப**-தேவர்களும் பிரம்மனும் வேண்ட, **சயிலமொடு சூரனுடல் ஒருநொடியில் உருவியே**-கிரவுஞ்ச மலையையும் சூரபத்மாவின் உடலையும் ஒரே நிமிடத்தில் உருவி அழித்து வெளிவந்த, **தனிஆண்மை கொண்ட நெடுவேல்**-ஒப்பற்ற ஆண்மை கொண்ட நெடிய வேலாயுதம்;

(யாருடையது என வினாவில்),

கங்காளி-ஊழிக்காலத்தில் தேவர்கள் முக்திஅடையும் பொருட்டு அந்ததேவர்களின் எலும்புக்கூட்டை மாலையாக போட்டுக் கொண்டவள், **சாமுண்டி**-மகிஷாசுரனைக் கொன்று அவனின் எருமைத் தலைமேல் நிற்பவளும், **வராகி**-சப்த மாதர்களில் ஒருவளான வராகமூர்த்தியின் சக்தியாக இருப்பவள், **இந்திராணி**-இந்திரனின் சக்தியானவள், **கௌமாரி**-குமார மூர்த்தியின் சக்தி, **கமலாசனக் கன்னி**-தாமரையை ஆசனமாகக் கொண்டிருக்கும் இளமைமாறாத கன்னி, **நாரணி**-காக்கும் சக்தியாகிய விஷ்ணுரூபிணி, **குமரி**-பால்ய பருவத்தினள், **திரிபுரை**-மும்மூர்த்திகளுக்கும் மேலானவள், **பைரவி**-பைரவரின் சக்தி, **அமலை**-மலம்அற்றவள், **கௌரி**-பொன்னிறமானவள், **காமாட்சி**-அடியார்களின் விருப்பங்களை நிறைவேற்றும் கண் களை உடையவள், **சைவசிங்காரி**-சிவனுடைய தேவியாகிய பேரழகி, **யாமளை**-நீல நிறத்தவள், **பவானி**-சம்சாரக்கடலை அகற்றுபவள், **கார்த்திகை**-கார்த்திகை மாதர்களாக வருபவள், **கொற்றி**-யுத்தகளத்திற்கு அதிபதி, **திரியம்பகி**-முக்கண்ணு டையவள் ஆகிய தேவி, **அளித்த**-பெற்றருளிய, **செல்வச் சிறுவன்**-உலகுக்கெல்லாம் முத்திச் செல்வத்தை கொடுக்கும்

பாலகன், **அறுமுகன்**-சண்முகன், **முருகன்**-ஞானசொரூபி, **நிருதர்கள்குல அந்தகன்**-அரக்கர் குலத்தினை அழித்தருளிய கந்தபிரான், **செம்பொன் திருக்கை வேலே**-திருக்கையிலே விளங்கி பொன்னொளிவீசும் அழகிய வேலாயுதமே அதுவாகும்.

விளக்கவுரை: முதல்இரண்டு அடிகளில் கூறப்பட்டுள்ள கருத்தை ஆதிசங்கரர் தான்அருளிச் செய்த 'ஆன்மபோதம்' என்கிற நூலில், ஒருபொருள் மற்றொருபொருளை அழிக்க வேண்டு மானால் அவர்களுக்கு இடையே பகைமை இருக்க வேண்டும். உதாரணமாக பூனைக்கு எலிமேல் பகை, ஆதலால் பூனை எலியைக் கண்டால் கொன்றுவிடும். ஆனால் பசு எலியைக் கொல்லாது. காரணம் அவைகளுக்குள் பகைமை கிடையாது, அதுபோல அஞ்ஞானத்தை அழிக்க அதற்கு நேர்ப் பகையாகிய ஞானத்தால்தான் முடியும். அஞ்ஞானத்தின் முழுஉருவமான சூரபத்மாவை ஞானசக்தியாகிய வேலாயுதத்தினால் தான் அழிக்க முடியும். சூலாயுதமோ, சக்ராயுதமோ அல்லது வஜ்ராயுதமோ முழு ஞானசக்தி இல்லாததினால் அவைகளால் சூரனைக் கொல்ல முடியவில்லை. இதனால் தான் உலக வழக்கில் ஞானவேல் என்ற பெயரை மனிதர்கள் தரித்திருக்கிறார்கள். ஞானசூலம், ஞான சக்ராயுதன் என்கிற பெயரைக் காண முடியாது. சூரனின்மேல் வேலை பிரயோகித்ததைக் கூறும்பொழுது,

''.....சிவம் அஞ்சு எழுத்தை முந்த விடுவோனே''

- (பருவம் - சிதம்பர திருப்புகழ்)

என்று பாடுகிறார். அதாவது பஞ்சாட்சரமே வேல் என்கிற ரகசியத்தை மறைமுகமாக உணர்த்துகிறார்.

'.....ஏம் புதல்வா வாழி வாழி என வீரான வேல் தர'...

என 'கொம்பனையார்' எனத் தொடங்கும் திருப்புகழில் பார்வதி தேவியே முருகனுக்கு வேல்கொடுத்தார் என மேலும் கூறுகிறார். இன்றும் சிக்கலில், முருகன் வேல்வாங்குகிற காட்சியை பிரம்மோற்சவத்தில் காணலாம்.

இந்த வேல்விருத்தத்தில் அடுக்கடுக்காக தேவியின் திரு நாமாக்கள் கூறி இருப்பதில் ஒரு சூக்கும கருத்து உள்ளது. தேவியின் பீஜாட்சரமாகிய - ஹ்ரீம் - என்பதுடன் ஓம் நமசிவாய

என்கிற பஞ்சாட்சரமும் சேர்ந்து ஓம் ஹ்ரீம் நமசிவாய என்கிற சக்தி பஞ்சாட்சரியாக மாறுகிறது. இந்த சக்திபஞ்சாட்சர சொரூபமே வேலாயுதம் என்பதே ரகசிய மந்திரக் கருத்து.

ஆதிசங்கரரும் தாம் இயற்றிய வேலாயுத துதியில் - 'சக்தே பஜே த்வாம்' என்று வேலாயுதத்தைப் பெண்பாலாக கூறுகிறார். வேலாயுதத்தில் சிவத்துடன் சக்தியும் சேர்ந்திருக்கிறது என்பதற்கு இதுவும்ஒரு சான்றாகும்.

மயில் விருத்தம் - 2

மோஹனம் கண்டசாபு

சக்ரப் ரசண்டகிரி முட்டக் கிழிந்துவெளி
பட்டு க்ரவுஞ்ச சயிலந்
தகரப் பெருங்கனக சிகரச் சிலம்பும்எழு
தனிவெற்பும் அம்புவியும் எண்
திக்குத் தடங்குவடும் ஒக்கக் குலுங்கவரு
சித்ரப் பதம் பெயரவே
சேடன்முடி திண்டாட ஆடல்புரி வெஞ்சூரர்
திடுக்கிட நடிக்கு மயிலாம்
பக்கத்தில் ஒன்றுபடு பச்சைப் பசுங்கவுரி
பத்மப் பதங் கமழ்தரும்
பாகீ ரதிச்சடில யோகீ சுரர்க்குரிய
பரம உபதேசம் அறிவிக்
கைக்குச் செழுஞ்சரவ ணத்திற் பிறந்தஒரு
கந்தச்சுவாமி தணிகைக்
கல்லார கிரியுருக வருகிரண மரகத
கலாபத்தில் இலகு மயிலே.

பதவுரை: சக்ரப்ரசண்டகிரி-சக்ரவாளம் என்கிற பெரிய வலிமைஉடைய மலை, ***முட்டக் கிழிந்து***- அடியோடு பிளவுபட்டு, ***வெளிபட்டு***-வெளியில் சிதறவும், ***க்ரவுஞ்ச சயிலம் தகர***-கிரவுஞ்சமலை பொடியாகப் போகவும், ***பெரும் கனகச் சிலம்பும்***-பெரிய தங்கநிற மயமான பெரிய சிகரங்களை உடைய மேருமலையும், ***எழு தனி வெற்பும்***-சூரனுக்கு

காவலாக இருந்த ஏழுமலைகளும், **அம்புவியும்**-அழகிய பூவுலகும், **எண்திக்கு தடம்குவடும்**-எட்டுத் திசை களிலும் உள்ள அஷ்டகுல கிரியும், **ஒக்கக் குலுங்க**-ஒன்றுபட்டு சேர்ந்து குலுங்கவும், **வரு சித்ரப்பதம் பெயரவே**-அடி எடுத்து வருகின்ற அழகிய கால்கள் மெதுவாக வந்தவுடனேயே, **சேடன் முடி திண்டாட**- ஆதிசேஷனின் திருமுடிகள் கலங்க, **ஆடல்புரி வெஞ்சூரர் திண்டாட**-போர்புரியும் அசுரர் திண்டாட, **திடுக்கிட நடிக்கும் மயிலாம்**-திகைத்து நடுக்கமுற நடனம் செய்யும் மயிலாகும்;

(அது யாருடைய மயில் என வினாவினால்),

பக்கத்தில் ஒன்றுபடு-தனது இடப்பக்கத்தில் சேர்ந்திருக்கும், **பச்சைப் பசும்கவுரி**-பச்சைநிறமுடைய பார்வதிதேவியின், **பத்மப் பதம் கமழ் தரும்**-தாமரை போன்ற திருவடிகளின் நறுமணம் வீசும், **பாகீரதி சடில**-கங்கையை புனைந்திருக்கும் ஜடாமுடியை உடைய, **யோகீசுரர்க்கு**-யோகமூர்த்தியாகிய சிவபெருமானுக்கு, **உரிய பரம உபதேசம் அறிவிக்கைக்கு**-தகுந்த பிரணவ உபதேசம் செய்வதற்காக, **செழும் சரவணத்தில் பிறந்த கந்தசுவாமி**-வளமான சரவணப் பொய்கையில் அவதரித்த கந்தக்கடவுளின், **தணிகை**-திருத்தணிகையில், **கல்லார கிரிஉருக**-செங்கழுநீர் மலை உருகும்படி, **வருகிரண**-பேரொளி பொருந்திய, **மரகத**-மரகதநிறம் உடைய, **கலாபத்தில் இலகு மயிலே**-தோகைகளை உடைய மயிலே அது.

விளக்கவுரை: சிவபெருமான் தன்னுடைய நிமிர் ஜடா முடியில் கங்கையை வைத்திருப்பதை உணர்ந்த பார்வதிதேவி கோபமடைந்து ஊடலை அடைகிறாள். அதைத் தணிப்பதற்காக சிவபெருமான் அவள் திருப்பாதங்களில் விழும்போது அவள் திருவடிகளில் வீசும் நறுமணம் சிவபெருமான் முடியிலும் சேர்ந்து வீசுகிறது என்பதை,

'பக்கத்தில் ஒன்று படு பச்சைப் பசுங்கவுரி
பத்மப் பதங் கமழ்தரும் பாகீரதிச் சடில யோகீசுரர்'

என சிவபெருமானை அழகுபட விவரிக்கிறார் அருணகிரியார்.

சேவல் விருத்தம் - 2

மோஹனம் கண்டசாபு

எரியனைய வியனவிரம் உளகழுது பலபிரம
ராட்சதர்கள் மிண்டுகள் செயும்
ஏவற் பசாசுநனி பேயிற் பசாசுகொலை
ஈனப் பசாசு களையும்
கரிமுருடு பெரியமலை பணையெனவும் முனையின்உயர்
ககனமுற நிமிரும் வெங்கட்
கடிகளையும் மடமடென மறுகியல றிடஉகிர்க்
கரத்தடர்த் துக்கொத் துமாம்
தரணிபல இடமென்வன மதகரிகள் தறிகள்பணி
சமணர்கிடு கிடென நடனம்
தண்டைகள் சிலம்புகள் கலின்கலினெ னச்சிறிய
சரணஅழ கொடுபுரி யும்வேள்
திரிபுரம தெரியநகை புரியும்இறை யவன்மறைகள்
தெரியும்அரன் உதவு குமரன்
திமிரதின கரமுருக சரவண பவன்குகன்
சேவற் றிருத்து வசமே.

பதவுரை: எரி அனைய-நெருப்பு போல் தோன்றி, **வியன்**-படர்ந்துள்ள, **நவிரம் உள கழுது**-தலைமுடிகளை உடைய பேய்கள், **பல பிரம்ம ராட்சதர்கள்**-பலவகைப் பட்ட பிரம்ம ராட்சதர்கள், **மிண்டுகள் செயும்**-குறும்புகள் செய்யும், **ஏவல் பிசாசுகள்**-பிறரால் ஏவப்பட்ட பிசாசுகள், **நனிபேயில் பிசாசுகள்**-தனித் தன்மைகள் வாய்ந்த பிசாசுகள், **கொலை ஈனப் பிசாசுகளையும்**-கொலைகளை புரியும் துஷ்ட பிசாசுகளையும், **கரி**-கருநிறம் வாய்க்கப்பெற்று, **முரடு**-கரடுமுரடான, **பெரிய மலை**-பெரியமலை போலவும், **பணை எனவும்**-மூங்கில்கள் போலவும், **முனையின்**-முயன்று, **உயர் ககனமுற நிமிரும்**-உயர்ந்து ஆகாசவரையிலும் நிமிர்ந்து நிற்கும், **வெங்கண் கடிகளையும்**-கொடிய பார்வையை உடைய பூதங்களையும், **மடமடென மருகி அலறிட**-மடமட என்கிற சப்தத்துடன்

பயந்து அலறும்படி, **உகிர்கரத்தடர்த்து கொத்துமாம்**-கையில் உள்ள நகங்களால் கொத்தித் தாக்கும்;

(அது எது என வினவினால்),

தரணிபல இடம்என-பல மலைப்பிரதேசங்களில் வசித்து வந்த, **வனமதகரிகள்**-மதம்பிடித்த காட்டுயானைகள் போலவும், ***தறிகள்***-தூண்கள் போலவும், **பணி**-வாழ்க்கை நடத்தி வந்த, ***சமணர் கிடுகிடு என***-அமணர் கூட்டம் கிடுகிடு என நடுங்கும் படி, ***தண்டைகள் சிலம்புகள்***-காலில் அணிந்துள்ள தண்டை களும் சிலம்புகளும், ***சிறியசரண அழகொடு நடனம் புரியும் வேள்***-தனது சின்னத்திருவடிகள் அழகு புரியும்படி நர்த்தனம் புரியும் ஞானசம்பந்தப் பெருமான், ***திரிபுரம்அது எரிய***-முப்புரங் களும் எரிந்து சாம்பலாகும்படி, ***நகை புரியும் இறையவன்***-புன்முறுவல் பூத்த இறைவரும், ***மறைகள் தெரியும் அரன்***-வேதங்களால் அறிவிக்கப்படும் சிவபெருமான், ***உதவு குமரன்***-உலகத்திற்கு நன்மைசெய்யும் பொருட்டு அருளிய குமாரக் கடவுள், ***திமிர தினகர முருக***-அஞ்ஞான இருளை நீக்கும் ஞானசூரியனான முருகன், ***சரவணபவன் குகன்***-நாணல் பொய்கையில் அவதாரம் செய்தவன், அடியார்களின் இதயக் குகையில் வீற்றிருப்பவன் ஆகிய குமாரக்கடவுளின், ***சேவல் திருத்துவசமே***-கொடியில் விளங்கும் சேவலேதான் அது. *(எ.று)*

விளக்கவுரை: மதகரிகள்: *கரியநிறங் கொண்டு காடுகளில் திரியும் சமணர்களை மதயானை என ஞானசம்பந்தப் பெருமான் கூறுவார். அது பாணியை அருணகிரியாரும் இங்கு பின்பற்று கிறார்.*

தறிகள்: *திகம்பர சமணர்கள் என்கிற பிரிவினர் நிர்வாண மாக இருப்பர். இவர்கள் இவ்வாறு நாணமில்லாமல் திரிவதினால் இவர்களைத் தூண்போல இருக்கிறார்கள் என்கிறார்.*

வேல் விருத்தம் - 3

சாரங்கா கண்டசாபு

வேதாள பூதமொடு காளிகா ளாத்ரிகளும்
வெகுளுறு பசாசகணமும்
வெங்கழு குடன்கொடி பருந்துசெம் புவனத்தில்
வெம்பசி ஒழிக்கவந்தே
ஆதார கமடமுங் கணபண வியாளமும்
அடக்கிய தடக்கிரியெலாம்
அலையநட மிடுநெடுந் தானவர் நிணத்தசை
அருந்திப் புரந்தவைவேல்
தாதார் மலர்ச்சுனைப் பழநிமலை சோலைமலை
தனிப்பரங் குன்றேரகம்
தணிகைசெந் தூரிடைக் கழிஆவி னன்குடி
தடங்கடல் இலங்கைஅதனிற்
போதார் பொழிற்கதிர் காமத் தலத்தினைப்
புகழும்அவ ரவர்நாவினிற்
புந்தியில் அமர்ந்தவன் கந்தன்முரு கன்குகன்
புங்கவன் செங்கைவேலே.

பதவுரை: **வேதாள பூதமொடு**-முருகனின் சேனைகளான வேதாள கணங்களும் பூத கணங்களும், **காளி காளாத்தரிகளும்**-நச்சுப்பற்களை உடைய கொடிய நாக சர்ப்பங்களும், **வெகுளுறு**-பசியால் சினங் கொண்டிருக்கும், **பசாச கணங்களும்**-பிசாசுக் கூட்டங்களும், **வெங்கழுகுடன்** - கொடிய பருந்துகள், **கொடி**-காக்கைகள், **பருந்து**-பருந்துகள் (இவைகளுடன்), **செம்பு வனத்தில்**-செழிப்பான இவ்வுலகத்தில், **வெம்பசி ஒழிக்க வந்து**-கொடியபசியைத் தீர்க்கும்படி போர்க்களத்தில் எழுந்தருளி, **ஆதார கமடமும்**-உலகத்தைத் தாங்கி கொண்டிருக்கும் கூர்ம ராஜனும், **கணபண வியாளமும்**-கூட்டமான படங்களை உடைய ஆதிஷேசனும், **அடக்கிய**-தாங்கி இருக்கும், **தடக்கிரி எலாம்**-பரந்த மலைகளில் எல்லாம், **அலைய நடமிடு**-அங்கும் இங்கும் நடந்துகொண்டு துன்பத்தை விளைவித்த, **நெடும் தானவர்**-பெரியவடிவுள்ள அரக்கர்களின், **நிணந்தசை**-கொழுப்

பையும் மாமிசத்தையும், **அருந்தி**-உணவாகக் கொண்டு, **புரந்த**-உலகத்தை எல்லாம் காப்பாற்றி அருளிய, **வைவேல்**-கூரிய வேல்,

(எது என வினாவில்),

தாதார் மலர்ச்சுனை-மகரந்தப் பொடிகள் நிறைந்துள்ள பூஞ்சோலைகள் அருவிகள் விளங்கும், **பழநி மலை**-பழநி மலை, **சோலைமலை**-பழமுதிர்ச்சோலை, **தனிப்பரங்குன்று**-ஒப்பற்ற திருப்பரங்குன்றம், **ஏரகம்**-சுவாமிமலை, **செந்தூர்**-திருச்செந்தூர், **இடைக்கழி**-திருவிடைக்கழி, **ஆவினன்குடி**-திருவாவினன்குடி, **தடங்கடல் இலங்கை அதனில்**-பெரிய கடல்சூழ்ந்த இலங்கைத் தீவில், **போதார் பொழில்**-மலர்கள் நிறைந்த பூங்காக்கள் உள்ள, **கதிர்காமத் தலத்தினை**-கதிர்காமப் பதியை, **புகழும் அவரவர்**-விரும்பித் துதிக்கின்ற அடியார்களின், **நாவில்**-நாவிலும், **புந்தியில்**-சித்தத்திலும், **அமர்ந்தவன்**-வீற்றிருக்கும், **கந்தன்**-கந்தக்கடவுள், **முருகன்**-முருகப் பெருமான், **குகன்**-குகன், **புங்கவன்**-புனிதமூர்த்தியின், **செங்கைவேலே**-சிவந்தகரத்திலுள்ள அழகிய வேலாயுதமே அது.

விளக்கவுரை: முப்பிறவியில் செய்த பாவத்தின் பலனாக உயிர்கள் வேதாள பூதங்களாக மாறி, அவைகளில் சில முருகனின் சேனைகளில் வந்திருக்கின்றன. அவைகள் எப்பொழுதும் முருகப் பெருமானையே புகழ்ந்து பாடி அதன்மூலம் உய்வுபெறுகின்றன என்பதை பூதவேதாள வகுப்பிலும் திருப்புகழிலும், கந்தர் அநுபூதியிலும் காணலாம்.

‘கள முழுதும் வாழிய திருப்புகழ் முழக்குவன’
- பூத வேதாள வகுப்பு.

‘வேதாள கணம் புகழ் வேலவனே’ - அநுபூதி

நாக சர்ப்பத்திற்கு காளி, காளத்தரி, எமன், எமதூதி என நான்கு விஷப்பற்கள் உண்டு. அவற்றில் இரண்டை இங்கு குறிப்பிடுகிறார். மந்தர மலையைத் தாங்கி நிற்கும் திருமாலாகிய கூர்மத்தை இந்த வகுப்பில் குறிப்பிடுகிறார் என்பது பல உரை ஆசிரியர்களின் கருத்து. ஆனால் திருமாலாகிய கூர்மம் திருப்பாற் கடலை கடைந்த பிறகு மீண்டும் தனது இருப்பிடமாகிய வைகுண்டத்திற்கே செல்கிறார். இங்கு குறிப்பிடப்படுவது ஆமை

களுக்கெல்லாம் தலைவனாகிய கூர்மராஜனைத்தான் குறிப்பிடு கிறார் என பொருளாகக் கொள்வதே சிறப்பாகும்.

அசுரர்கள் மலைகளில் எல்லாம் உலாவி பெரும் துன்பம் விளைவித்தனர் என்பதை - 'மலை நிருதர் உக' - என்னும் திருப்புகழ் அடியில் காணலாம்.

அருணகிரியார், இங்கு பலதலங்களை வரிசைப்படுத்தி கூறும்போது, பழநியையும் திருவாவினன்குடியையும் தனித் தனியாக குறிப்பிடுவது கவனத்திற்கு உரியது. ஆறுபடை வீடுகளைத் தவிர அதற்குச் சமமான பெருமையுடன் கதிர் காமத்தையும் திருவிடைக்கழியையும் சேர்த்திருப்பது ஆராய்ச்சிக் குரியது. முருகனின் திருப்புகழைப் பாடும் அடியார்களின் நாவில் முருகன் குடிகொண்டுள்ளான் என்பதை பலஇடங்களில் குறிப்பிடுகிறார்.

1. பல கலை படித்தோது பாவாணர் நாவிலுறை (தலைவலி)
2. நித்தமு மோது வார்கள் சித்தமெ வீடதாக
   நிர்த்தம தாடு மாறு முகவோனே(எத்தனை)
3. நினைத்தார் சித்தத் துறைவோனே (சிரத்தானத்)

மயில் விருத்தம் - 3

சாரங்கா கண்டசாபு

ஆதார பாதளம் பெயரஅடி பெயரமூ
தண்டமுக டதுபெயரவே
ஆடரவ முடிபெயர எண்டிசைகள் பெயரஎறி
கவுட்கிரி சரம்பெயரவே
வேதாள தாளங்க ளுக்கிசைய ஆடுவார்
மிக்கப் ரியப்படவிடா
விழிபவுரி கவுரிகண் டுளமகிழ விளையாடும்
விஸ்தார நிர்த்த மயிலாம்
மாதாநு பங்கியெனு மாலது சகோதரி
மகீதரி கிராத குலிமா
மறைமுநி குமாரிசா ரங்கநந் தனிவந்த
வள்ளிமணி நூபுர மலர்ப்

பாதார விந்தசே கரனேய மலரும்உற்
பலகிரி அமர்ந்த பெருமாள்
படைநிருதர் கடகமுடை படநடவு பச்சைப்
பசுந்தோகை வாகை மயிலே.

பதவுரை: ***ஆதார***-இப்பூவுலகுக்கெல்லாம் ஆதாரமாய் உள்ள, ***பாதாளம் பெயர***-பாதாள லோகம் அசையவும், ***அடி பெயர***-மயில் தனதுஅடியை எடுத்துவைத்த உடனேயே, ***மூதண்ட முகடதுபெயரவே***-மிகவும் பழமையான பிரமாண்டத்தின் உச்சிக் கூரையானது அசைவு பெறவும், ***ஆடரவ முடி பெயர***-இப்பூவுலகத்தைத் தாங்கும் ஆதிசேடனின் ஆடுகின்ற ஆயிரம் முடிகளும் அசைந்து கொடுக்கவும், ***எண் திசைகள் பெயர***-எட்டுத் திக்குகளும் நடுக்கமுறவும், ***எறி கவுள் கிரிசரம் பெயரவே***-மதநீரை சிந்தி எறிகின்ற கன்னங்களை உடைய அஷ்டதிக்கு கஜங்களும் இடம்பெயரவும், ***வேதாள தாளங் களுக்கு இசைய ஆடுவார்***-வேதாள கணங்கள் தாளம் போட, அதற்கு தகுந்தவகையில் நடனமாடும் நடராஜப் பெருமான், ***மிக்கப் பிரியப்பட***-மிகவும் அன்புடன் பாராட்டவும், ***விடா விழி பவுரி கௌரி கண்டு***-வைத்த கண்களை அகற்றாதபடி மயிலின் நடனத்தைக் கண்ட பார்வதிதேவி, ***உள மகிழ*** - உள்ளத்தில் களிப்பு கொள்ளவும், ***விளையாடும் விஸ்தார நிர்த்த மயிலாம்***-பலவிதமான நடனவகைகளைக் காட்டி விளையாடு கின்ற மயில்;

(அது யாருடையது என வினாவினால்),

மாதானுபங்கி எனும் மாலது சகோதரி-திருவள்ளுவர் என பெருமை மிக்கவரின் சகோதரியானவள், ***மகீதரி***-மலையில் பிறந்தவள், ***கிராதகுலி***-வேடர் வம்சத்தில் வளர்ந்தவள், ***மாமறை முநி குமாரி***-சிறந்த வேதங்களில் வல்லவராகிய சிவமுனிவரின் புத்திரி, ***சாரங்கம்***-மான் வயிற்றில், ***தனி வந்த***-ஒப்பற்ற வகையில் உதித்த, ***நம் வள்ளி***-நமது வள்ளித்தாயாரின், ***மணி நூபுர மலர்***-கிண்கிணிகளும் சிலம்பும் அணிந்துள்ள தாமரை மலர் போன்ற, ***பாதார விந்த சேகரன்***-பாதங்களை திருவடியில் அணிந்த முருகனின், ***நேயம்***-அன்பிற்கு உகந்ததாய், ***மலரும்***-பூத்திருக்கும், ***உற்பல கிரி***-நீலோற்பல புஷ்பங்கள் நிறைந்த

திருத்தணியில், **அமர்ந்த பெருமாள்**-வீற்றிருக்கும் பெருமையை உடையவன், **படை நிருத**-படையுடன் வந்த அசுரர்களின், **கடகம் உடைபட**-சேனைகள் சிதறிப் போகும்படி, **நடவு**-நடத்துகின்ற, **பச்சைப் பசும்தோகை வாகைமயிலே**-பச்சை நிறமான தோகையை உடைய வெற்றிமயிலே அது.

விளக்கவுரை: கிரிசரம்: யானைகள் மூன்று இனத்தன அவை 1.ஆற்றுப்படுகையில் பிறந்தவைகள் **நதிசரம்** எனப்படும். 2.காட்டில் பிறந்தவைகள் **வனசரம்** எனப்படும். 3.மலைகளில் பிறந்தவைகள் **கிரிசரம்** எனப்படும்.

எண் திசைகள்: எட்டுத்திசைகளில் இருக்கும் மலைகளில் வசிக்கும் யானைகள் அஷ்ட திக்கஜங்கள் எனப்படும். அவைகள் முறையே ஐராவதம், புண்டரீகம், வாமனம், குமுதம், புஷ்பதந்தம், அஞ்சனம், சார்வபௌமம், சுப்ரதீகம்.

இந்த புண்டரீகத்தைப் பற்றிய குறிப்பு கந்தபுராணத்தில் வருகிறது. சூரபத்மா தேவலோகத்தைப் பிடித்தபோது அவனுடைய மந்திரி தர்மகோபன் இந்த புண்டரீகத்தைச் சிறைபிடித்து தன்னுடைய ஊராகிய மகேந்திரபுரிக்கு கொண்டு செல்கிறான். வீரபாகுத்தேவர் தூதுசென்றபோது சூர சேனைகளுடன் போரிட்டு, இந்த புண்டரீகத்தை மீட்டு வருகிறார்.

'வேதாள தாளங்களுக்கிசைய ஆடுவார்':

பூதகணங்கள் தாளம்போட ஈசன் ஆடுவதை திருஞான சம்பந்தர் தன்னுடைய தேவாரப் பதிகத்தில்,

'பல்லியல் பாணி பாரிடம் ஏத்த நடமிடும் ஈசன்' - என்பார்.

மிக்க பிரியப்பட: நடனத்தில் வல்லுநரனான நடராஜப் பெருமான் மகிழும்படி மயில் நடனமாடியதை 'விடமளவி' எனத் தொடங்கும் திருப்புகழில்,

'உடலுமுய லகன்முதுகு நெறுநெறென எழுதிமிர
வுரகர்பில முடியவொரு பதமோடி
உருவமுது ககனமுக டிடியமதி முடிபெயர
வுயரவகி லபுவனம திரவீசிக்

கடகக்ர தலமிலக நடனமிடு மிறையவர்மகிழ்
கருதரிய விதமொடழ குடனாடுங் கலபக்க மயில்'

என அழகாக வர்ணிக்கிறார்.

மாதானுபங்கி: பெற்ற தாயைப்போல் இதமாக ஒழுக்கத் தைப் போதிப்பதால் திருவள்ளுவருக்கு மாதானுபங்கி என்கிற பெயர் உண்டு. இவர் பிரம்மதேவனின் அவதாரம் என்பர். பிரமனுக்கு வள்ளி தங்கை என்பதை - 'விதியானவன் இளையாள் எனதுள மேவிய வள்ளிநாயகி' - என்பார் 'மதனேவிய' எனத் தொடங்கும் திருப்புகழில். திருவள்ளுவருக்கு நான்முகனார் என்கிற பெயரும் உண்டு.

ஒரு ருசியான கர்ணபரம்பரை வரலாறு. ஆதி என்பவளுக் கும் பகவன் என்பவருக்கும் பிறக்கும் குழந்தைகளை முன் செய்த நிபந்தனைகளின்படி அவர்கள் பிறந்தஉடன் அந்தந்த இடங் களிலேயேவிட்டு விடுகின்றனர். பாணாச்சேரியில் பிறந்த முதல் குழந்தை ஔவைப் பிராட்டியார் தன்னைவிட்டு பிரிய மனமில் லாமல் தன்அன்னையைப் பார்த்து,

இட்டமுடன் என் தலையில் இன்னபடி என்றுஎழுதி
விட்ட சிவனும் செத்து விட்டானோ
முட்டமுட்ட பஞ்சமே வந்தாலும் பாரம்
அவனுக்கே அன்னாய் நெஞ்சமே அஞ்சாதேநீ. என்று பாடுகிறார்.

இரண்டாவது குழந்தை வண்ணாச்சேரியில் பிறந்தது. அவளே-உறவை-பிற்காலத்தில் மாரியம்மன் ஆகிறாள். மூன்றாவ தாக அந்தணர் அக்ரகாரத்தில் பிறந்தவர் கபிலர். நான்காவதாக மன்னர் அரண்மனையில் பிறந்தவர் அதியமான். ஐந்தாவதாக கள் இறக்குபவர் சேரியில் பிறந்தவர். அவரே - உப்பை-பின்பு காளி தேவியாகிறாள். வள்ளிக்காட்டில் பிறந்தவள் நம் வள்ளிப் பிராட்டியார். நெசவாளர் சேரியில் பிறந்தவர் திருவள்ளுவர். இதன் பிரகாரம் திருவள்ளுவர் அவதாரத்திலும் வள்ளிப்பிராட்டியார் திருவள்ளுவரின் சகோதரியே.

நம் தனிவந்த வள்ளி: வைகுந்தத்தில் திருமாலும் மஹா லட்சுமியும் சொக்கட்டான் ஆடும்பொழுது அங்கு வந்த துருவாச முனிவரை மதிக்கவில்லை என்கிற காரணத்தினால் கோப மடைந்த முனிவர், திருமாலை சிவமுனிவராகவும் மஹா லட்சுமியை மானாகவும் ஆக சபிக்கிறார். அதன்படி திருமால் சிவமுனிவராக வள்ளிமலையில் தவமியற்றுகிறார். அங்கு மான் உருவில்வந்த திருமகளை பார்த்த உடனே சிவமுனிவரின் கண் பார்வையிலேயே கருவுற்று, வள்ளியை ஈன்று வள்ளிக்கொடி குழியில் போட்டுவிடுகிறாள். இப்படிஒரு ஆச்சரியமான வகையில் வள்ளிப்பிராட்டியார் பிறந்ததினால் அவளை நம் அருணை முனிவர் - ***'தனி வந்த வள்ளி'*** என குறிப்பிடுகிறார்.

ஒரு கற்புடைய மாது தன்கணவரின் சுற்றத்தாரை எல்லாம் அன்புடன் தன் சுற்றமாக கருதிப் பாவிப்பது போல் அருணகிரி யாரும் தனது ஆத்மநாயகனாகிய முருகப்பெருமானின் சுற்றத்தை எல்லாம் தன்சுற்றமாக கொண்டாடுவார். விநாயகரை 'மம விநாயகர்' என்றும், சிவபெருமானை, என் தாதை 'சதாசிவ கோத்திரன்' என்றும் பார்வதிதேவியை 'எமதாயி' என்று கூறுவது போல் வள்ளிப்பிராட்டியாரையும், 'நம் வள்ளி' என்கிறார்.

சேவல் விருத்தம் - 3

சாரங்கா கண்டசாபு

கரிமுரட் டடிவலைக் கயிறெடுத் தெயிறுபற்
களையிறுக் கியு முறைத்துக்
கலகமிட் டியமன்முற் கரமுறத் துடருமக்
காலத்திலே வேலு மயிலும்
குருபரக் குகனுமப் பொழுதில்நட் புடன்வரக்
குரலொலித் தடிய ரிடரைக்
குலைத்தலறு மூக்கிற் சினப்பேய்க ளைக்கொத்தி
வட்டத்தில் முட்ட வருமாம்
அரியகொற் கையனுடற் கருகும்வெப் பகையையுற்
பனமுறைத் ததமி கவுமே
வமணரைக் கழுவில்வைத் தவருமெய்ப் பொடிதரித்
தவனிமெய்த் திட அருளதார்

சிரபுரத் தவதரித் தவமுதத் தினமணிச்
சிவிகைபெற் றினிய தமிழைச்
சிவனயப் புறவிரித் துரைசெய்விற் பனிகற்
சேவற் றிருத்து வசமே.

பதவுரை: **கரி**-கரிய நிறத்துடனும், **முரட்டடி**-முரட்டு குணத்துடனும், **வலை**-பாச வலையான், **கயிறு எடுத்து**-கயிற்றை ஏந்திக் கொண்டு, **எயிறு பற்களை**-கோரைப் பற்களை, **இருக்கியும்**-நறநற என கடித்துக் கொண்டு, **கலகமிட்டு**-கலக்கத்தைத் தரும், **எமன்**-எமராஜன், **முன்**-என் முன்னால் தொடர்ந்து வந்து, **கரமுற தொடரும்**-கையால் பிடித்துக் கொண்டு போகும், **அக்காலத்தில்**-அந்த அந்திமக் காலத்தில், **வேலும் மயிலும்**-ஞானத்தைத் தரும் சக்தியாகிய வேலாயுதமும் ஓங்காரரூபமான மயில்வாகனமும், **குருபரக் குகனும்**-குரு சிரேஷ்டனாகிய குகப்பெருமானும், **அப்பொழுதில் நட்புடன் வர**-அந்த அபாயகரமான நேரத்தில் என்முன் கருணையுடன் தோன்றும்படி, **குரல் ஒலித்த** - கூவி அழைத்து, **அடியர் இடரை** - அடியவர்களின் மரண துன்பத்தை, **குலைத்து**-அடியோடு நீக்கி, **அலறு மூக்கில்**-உலகேழும் அதிர அரற்றும் மூக்கினால், **சினப் பேய்களை**-கோபம்மிக்க பேய்களை, **கொத்தி**-கொத்திக் குதறி, **வட்டத்தில் முட்ட வருமாம்** - சுற்றிச்சுற்றி வட்டமிட்டு முட்ட வரும்;

(அது எது என வினாவினால்),

அரியகொற்கையன்-அருமைமிக்க கொற்கைப் பாண்டியன், **உடல் கருக**-தேகத்தைக் கருக்கிவிட்ட, **வெப்பகையை**-மிகச் சுடும் வெப்பநோயை (சுரத்தை), **உற்பனம் உரைத்து**-மூல காரணத்தை எடுத்துச்சொல்லி, **அதம் மிகவும் ஏவும் அமணரை**-கொலைச் செயல்களை செய்துவந்த சமணர்களை, **கழுவில் வைத்து**-வாது புரிந்து கழுவில் ஏற்றி, **மெய்ப்பொடி தரித்தவர்**-ஒரு சிலரை உண்மைப் பொருளாகிய சிவத்தைச் சுட்டிக் காட்டும் விபூதியை அணியச்செய்து, **அவனி மெய்த்திட**-உலகம் முழுவதும் உண்மைப் பரம்பொருளை அறியும்படி செய்து, **அருளதார்**-அருள்புரிந்தவரும், **சிரபுரத்து அவதரித்து**-சீர்காழித் தலத்தில் திருஅவதாரம் செய்து, **அமுதத் தினமணி**-அமிர்தம் போன்ற

குளுமையையும் சூரியனைப் போன்ற பிரகாசத்தையும் உடைய, **சிவிகை பெற்று**-முத்துப் பந்தலை சத்திமுத்தம் என்ற தலத்தில் பெற்று, **இனிய தமிழை**-இனிமையான தமிழில் தேவாரப் பாக்களை, **சிவன் நயப்பு உறவிரித்து உரைசெய்**- சிவபெருமான் விருப்பத்துடன் கேட்கும்படி பாடிஅருளிய, **விற்பனன்**- ஞான சம்பந்த மூர்த்தியான ஆறுமுகப்பெருமான், **இகல் சேவல் திருத் துவசமே**-வெற்றியைத் தரும் கொடியிலுள்ள சேவலே தான் அது.

விளக்கவுரை: கலகமிட்டு: கடைசிக் காலத்தில் எமதர்மன் வந்து நம்முன் நிற்பது வெளிமனிதர்களின் கண்களுக்குத் தெரியாது, ஆனால் உயிர்பிரியும் அந்த ஆத்மாவுக்கு மட்டும் தெரியும் என்று சாத்திரங்கள் கூறுகின்றன. அந்த பயத்தில் உடம் பெல்லாம் கலக்கம் அடைந்து மலம்கூட திரவமாக ஒழுகும் என அருணகிரியார் 'தொந்தி சரிய' எனத் தொடங்கும் திருச்செந்தூர் திருப்புகழில்,

'எமப் படர்கள் நின்று சருவ மலமே ஒழுக' - என்கிறார்.

அச்சமயம் ஆச்சார்ய மூர்த்தியாக, இதுகாலும் ஆன்மக் குகையில் வீற்றிருந்த குகன் மானுடச் சட்டை தாங்கி குரு மூர்த்தமாய் வந்து பிரணவ உபதேசம் செய்து பிரம்ம ஞானத்தைக் கொடுத்து அருளவேண்டும் என நமக்காக சேவல் கூவி அழைக்கிறது.

அரிய கொற்கையன்: கொற்கை பாண்டிய நாட்டின் துறை முகப்பட்டணம். அதன் சிறப்புக் கருதியே பாண்டிய மன்னர் களுக்கு கொற்கைப் பாண்டியன் எனும் பெயரும் ஏற்பட்டது. இங்கு குறிப்பிடப்படுவது மதுரையை ஆண்ட கூன் பாண்டியன், அவன் உண்மைச்சமயமாகிய சைவத்தைவிட்டு நீங்கி புறச் சமயமாகிய சமணத்தைச் சேர்ந்ததாலும், சமணர்கள் திருஞான சம்பந்தர் அங்கு இருந்த மடத்திற்குத் தீ வைத்தபோது, - 'பையவே சென்று பாண்டியர்க்கு ஆகவே' - என பாடியதால் அத் தீ கடுமையான வெப்பநோயாகமாறி கூன்பாண்டியனைப் பற்றியது. நோய்க்கு காரணமாக இருந்த இந்தசெய்கையை பாண்டிய மன்னருக்கு எடுத்துச் சொன்னார். இதையே உற்பனம் என்கிறார்.

மெய்ப்பொடி: பல மாற்றுச் சமயங்களின் பொய்மையை ஒழித்து உண்மைச்சமயமான சைவசமயத்தின் திருச்சின்னமாகிய

திருநீற்றினை எல்லோருக்கும் கொடுத்தருளினார் ஞானசம்பந்த மூர்த்தி. இக்கருத்தை, 'சுருதிமுடி' எனத் தொடங்கும் பழநி மலைத் திருப்புகழில்,

'மெய்ப் பொருளதாக நவில்' எனக் கூறுவார்.

சிரபுரம்: தேவர்களும் அசுரர்களும் திருப்பாற்கடலை கடைந்தபோது வெளிவந்த அமுதை திருமால் பங்கீடு செய்யும் சமயம் சிலம்பன் என்ற அசுரன் திருட்டுத்தனமாக தேவர்களின் மத்தியில் அமர்ந்து உண்டான். இந்த உண்மையை உணர்ந்த சூரியனும் சந்திரனும் திருமாலுக்கு கண்ஜாடையாகச் சொல்ல அவர் சட்டுவத்தால் அசுரனின் தலையை வெட்டி விடுகிறார். அமுதம் புசித்த காரணத்தால் அவன் இறக்கவில்லை. வெட்டுப் பட்ட தலைபாகம் சீர்காழியில் விழுந்து அங்குள்ள சிவபெரு மானை வழிபட்டு ராகு எனப் பெயர்பெற்று நவக்கிரகங்களில் ஒன்றாக விளங்குகிறது. ஆகையால் இத்தலத்திற்கு சிரபுரம் என பெயர் உண்டாயிற்று என்பர்.

சிவிகை: சோழமன்னர்களின் தலைநகரங்களில் ஒன்றான தும், பார்வதிதேவி சிவபெருமானை முத்தமிட்டு வழிபட்ட காரணத்தினால் 'சத்திமுத்தம்' எனப் பெயர்கொண்ட இத்திருத் தலத்தில் ஞானசம்பந்தர் எழுந்தருளிய சமயம், ஆதவனின் கொடுமையினால் உடலில்வேர்வை உண்டானதைக் கண்ட சிவபெருமான் தன் பூதகணங்கள் மூலம் குளிர்ச்சி மிகுந்த முத்துப்பந்தலை கொடுத்து அனுப்புகிறார். சம்பந்தர் அந்த முத்துப்பந்தலில் பட்டீஸ்வரத்திற்கு வருவதை அறிந்த சிவனார் தன்வாகனமான நந்தியை விலகிஇருக்கச் சொல்லி காண்கிறார். இப்போதும் நந்தியம்பெருமான் பட்டீஸ்வரத்தில் சிவபெருமா னுக்கு நேரில் இருக்காமல் விலகியே இருப்பதைக் காணலாம்.

❖ ❖ ❖

வேல் விருத்தம் - 4

மனோலயம் ஆதி

அண்டர்உல குஞ்சுழல எண்திசைக ளுஞ்சுழல
அங்கியும் உடன்சுழலவே
அலைகடல்க ளுஞ்சுழல அவுணருயி ருஞ்சுழல
அகிலதல முஞ்சுழலவே
மண்டல நிறைந்தரவி சதகோடி மதியுதிர
மாணப் பிறங்கியணியும்
மணிஒலியி னிற்சகல தலமுமரு ளச்சிரம
வகைவகையி னிற்சுழலும்வேல்
தண்டமுட னுங்கொடிய பாசமுட னுங்கரிய
சந்தமுட னும்பிறைகள்போல்
தந்தமுட னுந்தழலும் வெங்கணுட னும்பகடு
தன்புறம் வருஞ்சமனையான்
கண்டுகுலை யும்பொழுதில் அஞ்சலென மென்சரண
கஞ்சம்உ தவுங்கருணைவேள்
கந்தன்முரு கன்குமரன் வண்குறவர் தம்புதல்வி
கணவன்அடல் கொண்டவேலே.

வேல் வருகின்ற வேகத்தினால் நடந்தவைகள்

பதவுரை: ***அண்டர் உலகம் சுழல***-தேவலோகம் சுழற்சி அடையவும், ***எண் திசைகளும் சுழல***-எட்டுத்திசைகளும் நிலை தடுமாறி சுற்றவும், ***அங்கியும் உடன் சுழலவே***-எல்லா வற்றையும் நீறாக்கக் கூடிய அக்னிதேவனும் சுற்றவும், ***அலை கடல்களும் சுழல***-அலை வீசும் சமுத்திரம் கொதிப்படைந்து கொந்தளிக்கவும், ***அவுணர் உயிரும் சுழல***-அசுரர்களின் உயிர்கள் தமக்கு முடிவுகாலம் வந்துவிட்டதே எனஎண்ணி பதட்டத்தினால் சுற்றவும், ***அகில தலமும் சுழலவே***-எல்லாப்பிரபஞ்சமும் சுழலவும், ***மண்டல நிறைந்த சதகோடி ரவி***-வட்ட வடிவ மாயுள்ள ஆயிரம்கோடி சூரியர்கள் போலவும், ***சதகோடி மதி***-ஆயிரம் கோடி சந்திரர்கள் போலவும் (விளங்கிக் கொண்டு), ***உதிரமாணப் பிறங்கி***-அசுரர்களின் குருதி ஏராளமாக பெருக, ***அணியும் மணி ஒலி***-தான் பூஷணமாக அணிந்திருக்கும்

மணிகளின் சப்தத்தால், **சகல தலமும் மருள**-எல்லா உலகங் களும் மருட்சி அடையவும், **சிரம வகை வகையினில் சுழலும் வேல்**-ஆயுதப் பயிற்சியை படையில் பலவித நடைகளுடன் சுழன்று வருகின்ற வேலாயுதம்;

(அது யாருடையது என வினவினால்),

தண்டமுடனும்-தண்டாயுதத்துடனும்,**கொடிய பாசமுடனும்**-கொடுமையான பாசக்கயிற்றுடனும், **கரிய சந்தமுடனும்**-கருத்த நிறத்துடனும், **பிறைகள் போல் தந்தமுடனும்**-சந்திர பிறை போல் வளைந்த கோரப்பற்களுடனும், **தழலும் வெங்கணுட னும்**- தீக் கொப்புளிக்கின்ற கொடிய கண்களுடனும், **பகடு தன் புறம்**- எருமைக்கடாவில் ஏறிவரும், **சமனை**-எமனை, **யான் கண்டு குலையும் பொழுதில்**-நான் பார்த்து அச்சப்பட்டு நடுங்கும் போது, **அஞ்சல் என**-பயப்படாதே என்று, **மென் சரண கஞ்சம் உதவும் கருணைவேள்**-தன்னுடைய மிருதுவான தாமரைமலரன்ன திருவடித் தாமரையை தந்தருளும் கருணா மூர்த்தி, **கந்தன்**-கந்தப்பெருமான், **முருகன்**-முருகப்பெருமான், **குமரன்**-குகப்பெருமான் வண் **குறவர்**-வளப்பமான வாழ்க்கையை உடைய வேடர்களின், **தம் புதல்வி**-புத்திரியான வள்ளிப் பிராட்டியின், **கணவன்**-மணாளன், **அடல் கொண்ட வேலே**-மிகவும் வளமையான வேலாயுதமே அது.

விளக்கவுரை: வேலாயுதம் எப்படி உலகத்தை எல்லாம் ஆட்டிவைக்கிறது என்பதற்கு ஒரு ரகசியக் குறிப்பு, கந்தர் அலங்காரத்தில் காணலாம்.

'தேரணி யிட்டுப் புரமெரித் தான்மகன் செய்கையில் வேற்
கூரணி யிட்டணு வாகிக் கிரௌஞ்சங் குலைந் தரக்கர்
நேரணி யிட்டு வளைந்த கடக நெளிந்தது சூர்ப்
பேரணி கெட்டது தேவேந்தர லோகம் பிழைத்ததுவே'.

வேலாயுதம் அணுகுண்டுபோல் சகல பிரபஞ்சத்தையும் அழிக்கவல்லது என்பதை மேற்கண்ட அலங்காரத்தால் உணரலாம்.

எமன் அடியார்களைப் பற்ற வரும்போது, எப்படி மார்க்கண்டேயரைப் பிடிக்கவந்த எமனை சிவபெருமானின் திருப்பாதம் உதைத்து விரட்டி விட்டதோ, அதுபோல முருகப் பெருமானின் வேலாயுதமும் நம்மைக் காக்கும் என்பதை வேல் வகுப்பில்,

'தருக்கிநமன் முருக்கவரின் எருக்குமதி தரித்தமுடி
படைத்தவிறல் படைத்த இறை கழற்குநிக ராகும்'

என்கிறார். அருணகிரியார். முருகன் வேறு வேலாயுதம் வேறு என்பது கிடையாது என்கிற ரகசியக் கருத்தை,

'உததியிடை கடவுமர கதவருண குலதுரக
வுபலளித கனகரத சதகோடி சூரியர்கள் உதயமென'.....

என்கிற அதே அடைமொழியை வேலுக்கும் கூறுகிறார். முருகனுக்கு ஒரேசமயத்தில் சூரியஒளியுடன் சந்திரஒளியும் உண்டு என்பதை 'சந்திரநிறங்களும்' என்கிற அடியில் காணலாம். அதாவது சூரியனைப்போல ஒளியுண்டு, ஆனால் வெப்பம் கிடையாது. சந்திரனைப் போல குளிர்ச்சி உண்டு.

மயில் விருத்தம் - 4

மனோலயம் ஆதி

யுககோடி முடிவின் மண் டியசண்ட மாருதம்
உதித்ததென் றயன் அஞ்சவே
ஒருகோடி அண்டர்அண் டங்களும் பாதாள
லோகமும் பொற்குவடுறும்
வெகுகோடி மலைகளும் அடியினில் தகர்ந்திரு
விசும்பிற் பறக்க விரிநீர்
வேலைசுவ றச்சுரர் நடுக்கங் கொளச்சிறகை
வீசிப் பறக்கு மயிலாம்
நககோடி கொண்டவுணர் நெஞ்சம் பிளந்தநர
கேசரி முராரி திருமால்
நாரணன் கேசவன் சீதரன் தேவகீ
நந்தனன் முகுந்தன் மருகன்
முககோடி நதிகரன் குருகோடி அநவரதம்
முகிலுலவு நீலகிரிவாழ்
முருகன் உமை குமரன் அறுமுகன் நடவு விகடதட
மூரிக் கலாப மயிலே.

பதவுரை: யுக-திரேதாயுகம், கிருதயுகம், துவாபர யுகம், கலியுகம் என்கிற சதுர்யுகங்களின், **கோடி முடிவில்**-எல்லையின் முடிவு காலங்களில், **மண்டிய**-உக்ரமாக வீசும், **சண்ட மாருதம்**-சூறாவளிக் காற்று, உதித்ததென்று இப்போதே வந்து விட்டதோ என்று, **அயன் அஞ்சவே**-பிரமன் நடுக்கமுற, **ஒருகோடி அண்டர் அண்டங்களும்**-கோடிக்கணக்கான தேவலோகங்களும், **பாதாளலோகமும்**-கீழ்உலகங்களும், **பொன் குவடு உறும்**-பொன்மயமான சிகரங்களை உடைய, **வெகுகோடி மலைகளும்**-கோடிக்கணக்கான மலைகளும், **அடியினில்**-மயில் அடி வைக்கும் பொழுதே, **தகர்ந்து**-பொடியாகி, **இரு விசும்பில்**-பெரிய ஆகாசத்தில் தூளாக பறக்கவும், **விரிநீர் வேலைச் சுவற**-பரந்த நீர்ப்பரப்பை உடைய கடல் வற்றிப்போகவும், **சுரர் நடுக்கங் கொள**-தேவர்கள் பயப்படவும், **சிறகை வீசிப்பறக்கும் மயிலாம்**-தன்னுடைய தோகைகளை வீசிப் பறக்கும் மயில்;

(அது யாருடையது என வினாவினால்)

நககோடி கொண்டு-எண்ணிலடங்காத நகங்களைக் கொண்டு, **அவுணர் நெஞ்சம் பிளந்து**-அரக்கர்களின் மார்பைப் பிளந்த, **நரகேசரி**-நரசிங்கமூர்த்தி, **முராரி**-முரன் என்ற அசுரனைக் கொன்றவர், **திருமால்**-மேகவண்ணன், **நாரணன்**-பாற்கடலில் வசிப்பவர், **கேசவன்**-கேசி என்ற அசுரனை வதைத்தவர், **சீதரன்**-மஹாலட்சுமியைத் தனது திருமார்பில் தரித்துள்ளவர், **தேவகீ நந்தனன்**-தேவகியின் திருக்குமாரர், **முகுந்தன்**-முக்தியையும் உலக நலங்களையும் வழங்குபவர், **மருகன்**-ஆகிய மஹா விஷ்ணுவின் மருமகனும், **முககோடி நதிகரன்**-ஆயிரம் முகங்களை உடைய கங்கையினால் சுமக்கப்பட்ட ஜோதி வடிவினன், **குருகு ஓடி**-வெள்ளைநிறமாக பரவிச் செல்லும், **அநவரதம் முகிலுலாவு**-மேகங்கள் எப்பொழுதும் தவழ்கின்ற, **நீலகிரி வாழ்**-திருத்தணி மலையில் வீற்றிருக்கும், **முருகன் உமை குமரன் அறுமுகன்**-முருகமூர்த்தி, பார்வதிபாலன், ஆறுமுகக் கடவுள், **நடவு**-செலுத்துகின்ற, **விகட**-அழகும், **தட**-பெருமையும், **மூரிக் கலாப மயிலே**-மிக்க வலிமையும் கொண்ட தோகைகளை உடைய மயிலேஅது.

விளக்கவுரை: நககோடி:....நரகேசரி: இரணியனை மட்டு மல்லாமல் வேறு பலஅசுரர்களையும் நரசிங்க அவதாரம் எடுத்து

மஹாவிஷ்ணுவானவர் மார்பைப் பிளந்து சம்ஹாரம் செய்தார் என்பது பாரதத்தில் வரும் செய்தியாகும்.

முககோடி நதிகரன்: கங்கை 'ஆயிரம் முகங்களை கொண்டவள்' என்பதை - 'ஆயிர முகத்து நதி பாலனும்' - என திருவேளைக்காரன் வகுப்பில் கூறுவார்.

நீலகிரி: மயில் விருத்தத்தில் வரும் முதல்பாடலான - 'சந்தான புஷ்ப' - எனத் தொடங்கும் முதல்பாடலைத் தவிர மற்ற பத்துப் பாடல்களிலும் திருத்தணி பற்றிய குறிப்பு வருவதால் இந்த விருத்தம் பூராவும் திருத்தணியில் பாடப்பட்டது எனக் கொள்ளலாம்.

சேவல் விருத்தம் - 4

மனோலயம் ஆதி

அச்சப்ப டக்குரல் முழக்கிப் பகட்டியல
றிக்கொட்ட மிட்டம ரிடும்
அற்பக் குறப்பலிகள் வெட்டுக்கள் பட்டுகடி
அறுகுழை களைக்கொத் தியே
பிச்சுச் சினத்துதறி எட்டுத்திசைப் பலிகள்
இட்டுக் கொதித்து விறலே
பெற்றுச் சுடர்ச்சிறகு தட்டிக் குதித்தியல்
பெறக்கொக் கரித்து வருமாம்
பொய்ச்சித் திரப்பலவும் உட்கத் திரைச்சலதி
பொற்றைக் கறுத் தயில்விடும்
புத்திப்ரி யத்தன்வெகு வித்தைக் குணக்கடல்
புகழ்ச்செட்டி சுப்ர மணியன்
செச்சைப் புயத்தன்நவ ரத்னக்ரி டத்தன்மொழி
தித்திக்கு முத்தமிழினைத்
தெரியவரு பொதிகைமலை முநிவர்க் குரைத்தவன்
சேவற் றிருத்து வசமே.

பதவுரை: அச்சப்பட-பகைவர்கள் அஞ்சும்படி, **குரல் முழக்கி**-பெருத்த சப்தம்செய்து, **பகட்டி**-விரட்டி, **அலறி**-கூக்குரலிட்டு,

கொட்டமிட்டு-ஆர்ப்பாட்டத்துடன், **அமரிடும்**-போர் செய்யும், **அற்பக் குறப் பலிகள்**-அற்பமான சிறுதேவதைகளுக்கு படைத் திருக்கும், பலிவரிசைகளில், **வெட்டுக்கள்பட்டு**-வெட்டுக்கள் பட்டு, **கடி அறு குழைகளை**-அந்தச் சிறுதேவதைகள் கடித்து போட்டிருந்த, இலைகள் தழைகள் போன்றவைகளை, **கொத்தியே**-மூக்கால் கொத்தி, **பிச்சு சினத்து உதறி**-துண்டுதுண்டாக பிச்சியும் நான்குபக்கமும் தூக்கிவீசி, **எட்டுத் திசைப் பலிகள்**-எட்டுத் திசைகளிலும் அடைத்து பலிபோடுவதுபோல், **இட்டு கொதித்து விறலே பெற்று**-பெரும் கிளர்ச்சியுடன் வலிமை பெற்று, **சுடர் சிறகு தட்டி**-ஒளிவீசும் தனது சிறகுகளை தட்டிக் கொண்டு, **இயல்பெற கொக்கரித்து வருமாம்**-மிகுந்த லட்சணத்துடன் கொக்கரித்துக் கொண்டுவரும்;

(அது எது என வினாவினால்),

பொய்ச் சித்திரப் பலவும்-பொய்யும் கற்பனைகளும் நிறைந்த புறச்சமயங்கள், **உட்க**-நடுங்கி பின்வாங்கவும், **திரைச் சலதி பொற்றை**-அலைவீசும் கடல் மீதும், கிரௌஞ்சகிரி மீதும், **கறுத்து**-அவைகள் கருகிப்போகும்படி, **அயில்விடும்**-ஒளி வீசும் வேலாயுதத்தை செலுத்தியவன், **புத்தி பிரியத்தன்**-அன்பும் அறிவும் நிறம்பப் பெற்றவன், **வெகு வித்தைக் குணக்கடல்**-சகல கலைகளிலும் கடலென திறமை மிக்கவன், **புகழ்ச்செட்டி சுப்ரமணியன்**-புகழ்மிக்க செட்டியாகிய சுப்ரமணியக் கடவுள், **செச்சைப் புயத்தன்**-வெட்சி மாலையை அணிந்தவன், **நவரத்ன க்ரிடத்தன்**-நவரத்தினங்களால் அலங்கரிக்கப்பட்ட கிரீடத்தை அணிந்துள்ளவன், **மொழி தித்திக்கும் முத்தமிழினை**-மொழிக்குமொழி இனிமை மிக்க இயல் இசை நாடகம் என்கின்ற மூன்று தமிழையும், **தெரிய வருபொதிகை மலை முனிவர்க்கு**-அறிந்து கொள்வதற்காக வந்த பொதிகை மலையில் வாழும் முனிசிரேஷ்டரான அகத்தியனுக்கு, **உரைத்தவன்**-உபதேசம் செய்த வருமாகிய குமாரக்கடவுளின், **சேவல் திருத்துவசமே**- கொடியில் உள்ள சேவலே தான்அது.

விளக்கவுரை: **பொய்ச்சித்திரப் பலவும் உட்க:** பல விதமான மாறுபட்ட கருத்துக்களைக் கொண்ட புறச்சமயங்களின் பொய்மைநிலையை உண்மைஞானமாகிய வேலாயுதத்தால் அகற்றிவிடுகிறான் முருகன். தினைப்புனத்தில் வளையல் விற்கும்

செட்டியாராக கந்தக்கடவுள் வந்த காரணத்தினாலும், மதுரையில் தனபதி செட்டியாருக்கு உருத்திரசன்மனாக பிறந்ததாலும் முருகனுக்கு செட்டி என்ற திருநாமம் ஏற்பட்டது. செட்டு என்றால் தமிழில் வியாபாரம் என்று பெயர். அடியார் களிடமிருந்து பக்தி என்கிற பொருளை வாங்கிக்கொண்டு முக்தியைக் கொடுக்கும் பண்டமாற்று செட்டி முருகன்.

சொக்கநாதப் புலவர் தனது சிலேடைவெண்பாவில்,

'வெங்காயம் சுக்கானால் வெந்தயத் தாலாவதென்
இங்குஆர் சுமப்பார் இச்சரக்கை? - மங்காத
சீரகம் தந்திரேல் வேண்டேன் பெருங்காயம்
ஏரகத்துச் செட்டி யாரே'.

இதன்பொருள்: கொடிய வினைகளினால் உண்டான இந்த உடம்பு வறுமையினால் வற்றிப்போய் விட்டால் கடைநாளில் செத்துப் போகின்ற இந்த தேகத்தால் என்னபயன்? இப்படிப் பட்ட பிரயோஜனமற்ற சரக்கை வைத்து யார்தான் வியாபாரம் செய்வார்கள். என்றும் அழியாத சிறந்த இருப்பிடமான முக்தி என்கிற வீட்டை நீர்தரவில்லை என்றால் இனிமேல் இந்த பொய்யான உடலை நான் நாடமாட்டேன் ஏரகத்தில் வீற்றிருக்கும் சுப்ரமணிய செட்டியாரே. (எ.று.)

பொதிகைமலை முநிவன்: அகத்தியனுக்கு முத்தமிழை உபதேசம் செய்ததை, பூத வேதாள வகுப்பில், ''அரசரிய வாமனமு நிக்கொருத மிழ்த்ரயமும் அபரிமித மாகவிவ ரித்தகட வுட்புலவன்'' என்கிறார்.

சுப்ரமணியன்: சு-ஒளி நிறைந்த, பரமணியம் - பெரிய பொருள். சுப்ரமணியன் என்கிற சொல்லுக்கு 'ஒளிவடிவினன்' எனப் பொருள்படும். இக்கருத்தையே கச்சியப்ப சிவாச்சாரியரும் கந்தபுராணத்தில் அருவமும் உருவமாகி எனத்தொடங்கும் பாடலில்,

'பிரம்மமாய் நின்ற ஜோதிப் பிழம்பு அதுஓர் மேனியாகி
கருணைகூர் முகங்கள் ஆறும்கரமது பன்னிரண்டும் கொண்டு'

என்பார்.

❖ ❖ ❖

வேல் விருத்தம் – 5

பாகேஸ்ரீ கண்டசாபு

ஆலமாய் அவுணருக் கமரருக் கமுதமாய்
ஆதவனின் வெம்மைஒளிமீது
அரியதவ முநிவருக் கிந்துவிற் றண்ணென்
றமைந்தன் பருக்கு முற்றா
மூலமாம் வினையறுத் தவர்கள்வெம் பகையினை
முடித்திந்தி ரர்க்குமெட்டா
முடிவிலா நந்தநல் கும்பத மளித்தெந்த
மூதண்ட மும்புகழும்வேல்
ஏலமாம் யானையின் கோடதிற் சொரிமுத்து
மின்பணைக ளுமிழுமுத்தும்
இனிவாடை மான்மதம் அகிலோடு சந்தனம்
இலவங்க நறவமாருந்
தாலமா மரமுதற் பொருள்படைத் திடும்எயினர்
தருவநிதை மகிழ்நன் ஐயன்
தனிநடம் புரிசமர முருகன்அறு முகன்குகன்
சரவணக் குமரன் வேலே.

பதவுரை: ***ஆலமாய் அவுணருக்கு***-பகைவர்களாகிய அரக்கர் களுக்கு ஆலகால விஷத்தைப்போல் நின்று அவர்களை அழித்தும், ***அமரருக்கு அமுதமாய்***-(தன்னைத் துதித்த) தேவர்களுக்கு அமிர்தம்போல் புத்துயிர் கொடுப்பதாயும், ***ஆதவனின் வெம்மை ஒளி மீது***-சூரியனின் தேஜசை மீறியுள்ள வகையில், ***அரிய தவ முனிவருக்கு***-செயற்கரிய தவம்செய்து தவஅக்கினியால் ஜொலிக்கும் ரிஷிகளுக்கு, ***இந்துவின் தண்என்று அமைந்து***-சந்திரனின் குளிர்ச்சியைப்போல் அவர்களின் தவவெப்பத்தை சமப்படுத்து வதாய் அமைந்து, ***அன்பருக்கு***-தன்னைத் துதிக்கும் அடியவர்க்கு, ***முற்றா மூலமாம் வினை அறுத்து***-எப்பொழுதும் முற்றுப் பெறாத வகையில் மீண்டும் மீண்டும் கிளம்பி எழும் சஞ்சித பிராரப்த வினைகளை அடியோடு ஒழித்து, ***அவர்கள் வெம் பகையினை முடித்து***-அந்த அன்பர்களின் அகப்பகை புறப் பகை இரண்டையும் அடியோடு ஒழித்து, ***இந்திரருக்கும் எட்டா***-

தேவர்களுக்குகூட கிடைப்பதற்கு அரிய, **முடிவில் ஆநந்த நல்கும் பதம் அளித்து**-அழிவில்லாத பேரின்பமாகிய சாயுச்ய பதவியைக் கொடுத்து, **எந்த மூதண்டமும் புகழும் வேல்**-எல்லா அண்டங்களும் போற்றும் வேலாயுதம்;

(அது யாருடையது என வினவினால்),

ஏலமா யானையின் கோடு அதில்-பொருந்தி இருக்கும் பெரியயானைத் தந்தத்திலிருந்து, **சொரி முத்து**-உதிர்கின்ற முத்துக்களையும், **இன் பணைகள் உமிழும் முத்தும்**-இனிய மூங்கில்களில் இருந்து விழும் முத்துக்களையும், **இனி வாடை மான் மதம்**-இனிய மணம்வீசும் கஸ்தூரி, **அகிலோடு சந்தனம்**-அகில், சந்தனம், **இலவங்க நரவம்**-இலவங்கம் (கிராம்பு), தேன், **ஆரும்**-இவைகளை எல்லாவற்றையும், **தால மாமர முதல்**-பனை, மா முதலிய மரங்களையும், **பொருள் படைத் திடும்**-தனது சொத்துக்களாக கொண்டிருக்கும், **எயினர் தரு வனிதை**-வேடர்களால் வளர்க்கப்பட்ட வள்ளிநாயகியுடன், **மகிழ்னன் ஐயன்**-மகிழ்ந்து மணந்த பெருமான், **தனி நடனம் புரி சமர முருகன்**-போர்க்களத்தில் ஒப்பற்ற நடனம்புரிந்த முருகன், **அறுமுகன் குகன் சரவணக் குமரன்**-ஆறுமுகன், குகன், சரவணபவன், குமாரக் கடவுளின், **வேலே**-வேலாயுதமே.

விளக்கவுரை: வேலாயுதம் கொடியவர்களுக்கு தீமையையே விளைவிக்கும் என்பதை - 'வஞ்சவேல்' - என்கிற சொற்றொட ரால் அறிய முடிகிறது. தேவர்கள் கந்தப்பெருமானையும் அவனது வேலாயுதத்தையும் பூஜித்ததினால் அமிர்தம் உண்டும், அசுரர் களால் மரணம் அடையும் அவர்கள், வேலாயுதத்தின் மூலமாக பரிபூரண அமிர்தத்தன்மை பெறுகிறார்கள். முனிவர்கள் தவாக்னி யால் குண்டலினி சக்தி தேகத்தை கனல்போல் சுற்றி இருப்பதி னால் உலகம் இந்த வெப்பத்தை தாங்க முடியாது என்று கருணை உள்ளம் கொண்ட வேலாயுதம் சந்திரனின் அமிர்தசக்தியைப் போல் அவ்வெப்பத்தை சமன்படுத்துகிறது.

இதற்கு குண்டலிணி யோகத்தில் ஒருகுறிப்பு காண முடி கிறது. யோகாப்பியாசம் செய்பவர்கள் சுழுமுனை நாடியில் மூன்றுமண்டலத்தைக் கடக்கவேண்டும். முதலில் சூரிய மண்டலம், பின் அக்னிமண்டலம் கடைசியில் சந்திரமண்டலம்.

அக்னி மண்டலத்தின் வெப்பத்தை சந்திர மண்டலத்தின், - கலா இன்ப அமுதூரல் - தெளிவிக்கிறது. ஆதலால் யோகாப்பியாசம் செய்பவர்கள் வேலாயுதத்தை தியானித்தால் யோகத் தவம் கைகூடும் என்பது ஒரு ரகசியக் குறிப்பு.

பிரம்மனின் மானசீக புத்திரனான கிருதன் என்பவனுக்கு வாலகல்யர் என்கிற 60,000 புத்திரர்கள். இவர்கள் கட்டை விரல் அளவே உருவம் கொண்டவர்கள். இவர்கள் தாம்செய்த சிவ தவத்தால், சூரியன் பவனி வரும்போது அவனது தேரைச் சுற்றி வருவர். இதன் நோக்கம் சூரியனுடைய அளவு கடந்த வெப்பம் பூலோகத்தில் உள்ள உயிர்களை பாதிக்காமல் இருக்க கருணை உள்ளமே. சூரியன் சுற்றி வரும்போது ஒருஅசுரர் கூட்டம் இவர்களுடன் போர்புரிகின்றன. அப்போது இந்த ரிஷிகளுக்கு துணையாகப் போவது வேலாயுதமே. புயவகுப்பின் ஆரம்பத்தில்,

'வசைதவிர் ககன சரசிவ கரண மாகவ்ரத
சீலசால வரமுநி சித்தரை
அஞ்சல் அஞ்சல் என்று வாழ்வித் துநின்றன.'

என வரும்அடிகள் இவர்களையே குறிக்கும்.

தேவர்களுக்கு தேவலோக வாழ்க்கை அவர்கள் செய்த தவத்தின் மூலமாக கிடைத்தது என்றாலும் அந்த வாழ்வு ஸ்திரமானது ஆகாது. அந்த புண்யவினை முடிந்தவுடன் மீண்டும் அவர்கள் பூலோகத்திற்கு வருவர். ஆனந்தப் பெருவாழ்வை அடியார்களுக்கு கொடுப்பது முருகனின் திருவருளே. முருகனின் திருவருட் சக்தியே வேலாயுதம். அதைத் தியானிப்பவர்களுக்கு அது நம்மைப் பெருவாழ்வுக்கு இலக்காக்கும்.

வேடர்களுக்கு சொத்தான முத்துக்கள் மற்றும் காட்டு விளை பொருட்கள் எல்லாவற்றையும் முருகன் வள்ளிப்பிராட்டி மூலமாகப் பெற்றான் என்பதை - 'சீதனம் கோடு' - எனத் தொடங்கும் கந்தர்அந்தாதி பாடல் கூறுகிறது. இப்பாடலில் வரும் கடைசிஅடியில் 'சிலை அரசு' என முடிவது 'எல்லா மலை களுக்கும் - ஆதிபத்யம்' - முருகனுக்கு வள்ளிப்பிராட்டி மூலமாக கிடைத்தது என குறிப்பிடுகிறார் அருணைமுனிவர்.

தனி நடன புரி சமர: வஞ்சக அசுரர்களை வெல்வதற்காக தெய்வங்கள் செய்த நடனங்கள் மதிவாணன், பரதசேனாபதி போன்ற கூத்துநூல் ஆசிரியர்களால் தெய்வவிருத்தி என அழைக்கப் படுகின்றன. அந்த நடனங்கள் பதினொன்று வகைப்படும்.

1. அல்லியம்:

அருணகிரியாரின் வாக்குப்படி,

'மாயைவல கஞ்ச னால்விடவெ குண்டு
பார்முழுது மண்ட கோளமுந டுங்க
வாய்பிளிறி நின்று மேகநிகர் தன்கை யதனாலே
வாரியுற யுற அண்டி வீறொடுமு ழங்கு
நீரைநுகர் கின்ற கோபமொடெ திர்ந்த
வாரண இரண்டு கோடொடிய வென்ற நெடியோனாம்'. (சீயுதிர)

வஞ்சகன் கம்சனால் அனுப்பப்பட்ட குவலாபீடம் என்கிற யானையை, ஸ்ரீ கண்ணபிரான் சென்று அழித்தபோது ஆடிய நடனம் இதுவாகும்.

2. கொடுகொட்டி:

'மாநாக நாண்வ லுப்பு றத்து க்கியோர்
மாமேரு பூத ரத்த னுப்பி டித்தொரு
மாலாய வாளி யைத்தொ டுத்த ரக்கரி லொருமூவர்
மாளாது பாத கப்பு ரத்ர யத்தவர்
தூளாக வேமு தற்சி ரித்த வித்தகர். (ஆனாத ஞானபுத்தி)

ஆன சிவபெருமான் திரிபுரசம்ஹாரம் செய்து முடித்தவுடன் தனது திருக்கைகளைக் கொட்டி ஆடிய நடனமே இதுவாகும்.

3. குடம்: மகாபலியின் புத்திரனான பாணாசுரன் சிவபெருமானை வேண்டி ஆயிரம் கரங்களைப் பெற்றான். அவன் தினமும் ஆயிரம் லிங்கங்களை வைத்து பூஜை செய்தபிறகு அவைகளை நதியில் விட்டுவிடுவது வழக்கம். இவைகளே நதியின் படுகையிலிருந்து நமக்குக் கிடைக்கும் பாணலிங்கங்கள். இவைகளையே நாம் சாலிக்கிராமங்கள் என பூஜையில் வைத்து வணங்குகிறோம். இவனுடைய மகள் உஷையை மன்மதனின் மகன் அனிருத்தன் களவில் புணர, பாணாசுரனுக்கு இது தெரிந்து

அவனை சிறையில் அடைக்க, அவனை மீட்பதற்காக ஸ்ரீ கண்ணபிரான் பாணாசுரனின் நகரமான சோணிதபுரத்தில் மாறு வேடங்கொண்டு ஒருகுடத்தை தலையில் வைத்துக் கொண்டு ஆடிய நடனம் இதுவே .

4. பாண்டரங்கம்: பிரம்மன் சிவபெருமானுக்கு தேர் சாரதியாக இருந்து ரதத்தை ஓட்டும்போது அவன் சரஸ்வதியின் பிரிவால் தளர்ந்தசமயம், இதைஉணர்ந்த சிவபெருமான் சரஸ்வதியின் உருவமெடுத்து ஆடிய நடனம் இது.

5. மல்:

'சகடுதை யாமற் போர்செய்து விளையாடி போதுவியர்
சேரிக்கே வளர் புயல்' - (முருக மயூர)

ஆகிய கண்ணபிரான் கம்சனால் ஏவப்பட்ட சானுரன் என்ற மல்லனை கொன்றபோது ஆடியகூத்து இது.

6. கடையம்: சோணிதபுரி கோட்டைவாயிலுக்கு வெளியே இந்திராணி ஆடிய நடனம் இது.

7. பேடு: மன்மதன் தன்மகனைக் காப்பாற்றுவதற்காக பேடி ரூபம் எடுத்து ஆடிய விசித்திரமான நடனம் இது.

8. மரக்கால்: துர்க்காதேவியை எதிர்த்து போரிட்ட அசுரர்கள் வஞ்சனையால் பாம்பு தேள் போன்ற கொடிய விஷ ஜந்துக்கள் ரூபம் எடுத்துவர காளிதேவி மரக்காலின் மேல் ஏறி நடனம் ஆடி அவைகளை உதைத்து அழித்த கூத்து இது.

9. பாவை: மஹாலட்சுமி அசுரர்களைக் கொல்வதற்காக கொல்லிப்பாவை உருவம் எடுத்து அவர்களை அழித்தபோது ஆடிய நடனம் இது.

10. குடை: யுத்தகளத்தில் அசுரர்கள் தம்மிடம் இருந்தவர், வாள், தோமரம், சூலம் போன்ற ஆயுதங்களை முருகன்மேல் எறிய அவைகள் புஷ்பங்கள் மாதிரி முருகனின் திருவடிகளில் விழுந்து தூளாகி விழுகின்றன. மேலே செய்வது என்ன என்று அறியாமல் திகைத்து நிற்கின்றனர். நிராயுதபாணிகளாக நிற்கும் அவர்களைக் கொல்வது யுத்த தர்மமாகாது என எண்ணி முருகன் ஒரு திருவிளையாடல் செய்கிறான். பூதங்களால் தனக்குக்

கொடுக்கப்பட்ட ஒருகுடையை எடுத்து முன்பக்கமாக திருப்பி ஒரு நடனம் செய்கிறான். இதுவே குடை நடனம். இந்த அவகாசத்தைப் பயன்படுத்தி அசுரர்கள் ஓடி விடுகின்றனர்.

11. துடி: சூரபத்மன் நூறுகோடி யோசனை அளவுள்ள மாமரமாய் கடலில் தலைகீழாக நின்றபோது அதன் கிளைகளில் இருந்து உக்ரமான அக்னி ஜ்வாலை வீசுகின்றது. இதைக் கண்டு உலகமே அஞ்சியது. அப்போது முருகப்பெருமான் தனது தந்தை மாதிரி உடுக்கையை கையில் பிடித்து நடனமாடி ஒலிக்க, சூரனின் மாயை எல்லாம் அடங்கி அவன் நிற்க, தனது வேலாயுதத்தினால் அவனது மார்பைப் பிளந்து அருளுகிறார்.

இந்த இருவிதமான நடனங்களைத் தான் அருணகிரிநாதர் இந்த விருத்தத்தில், 'தனி நடனம் புரி சமரன்' என விவரிக்கிறார்.

மயில் விருத்தம் - 5

பாகேஸ்ரீ கண்டசாபு

சோதியிம வேதண்ட கன்னிகையர் தந்தஅபி
நயதுல்ய சோம வதன
துங்கத்ரி சூலதரி கங்காளி சிவகாம
சுந்தரி பயந்த நிரைசேர்
ஆதிநெடு மூதண்ட அண்டபகி ரண்டங்கள்
யாவுங் கொடுஞ்சி றகினால்
அணையுந்த னதுபேடை அண்டங்கள் என்னவே
அணைக்குங் கலாப மயிலாம்
நீதிமறை ஓதண்ட முப்பத்து முக்கோடி
நித்தரும் பரவு கிரியாம்
நீலகிரி வேலவன் நிராலம்பன் நிர்ப்பயன்
நிர்வியா குலன்சங் குவாள்
மாதிகிரி கோதண்ட தண்டந் தரித்தபுயன்
மாதவன் முராரி திருமால்
மதுகைட வாரிதிரு மருகன்முரு கன்குமரன்
வரமுதவு வாகை மயிலே.

பதவுரை: சோதி-ஒளிவடிவினளாய், **இமவேதண்ட**-இமய மலையின் கண், **கன்னிகையர் தந்த**-தோழியர்கள் பாதுகாத்து வந்த, **அபிநய**-மிகுதியான அலங்காரம் உடையவளும், **துல்ய**-பரிசுத்தம் மிகுந்தவளும், **சோமவதன**-சந்திரன்போல் தண்ணொளி வீசும் முகம்உடையவளும், **துங்க**-சிறந்த, **திரிசூலதரி**-மூன்று முனைகளை உடைய சூலாயுதத்தை கையில் கொண்டவளும், **கங்காளி**-எலும்புமாலையை அணிந்தவளும், **சிவகாமசுந்தரி**-சிவபெருமானையே எப்பொழுதும் நாடி விரும்பி இருக்கும் பார்வதிதேவி, **பயந்த**-படைத்த, **நிரைசேர்**-ஒழுங்கு முறையும் வரிசை கொண்டதுமான, **ஆதிநெடு**-புராதனமானவையும் பரந்துள்ளதுமான, **மூதண்ட அண்டம்**-மிகப்பெரிய பிரபஞ்ச படைப்புகளான உலகங்கள் எல்லாமும், **பகிரண்டம் யாவும்**-வெளி உலகங்கள் யாவையும், **கொடும் சிறகினால்**-வளைந்த தனதுசிறகினால், **அணையும் தனது பேடை அண்டங்கள் என்னவே**-ஒரு ஆண்மயில் தனது பேடைமயிலின் முட்டைகளை காப்பதுபோல், **அணைக்கும் கலாப மயிலாம்**-அகில பிரபஞ் சங்களையும் பாதுகாக்கும் மயில்;

(அது யாருடையது என வினாவினால்),

நீதிமறை-பல தர்மங்களை உணர்த்தும் வேதங்கள், **ஓது**-வர்ணிக்கும், **அண்ட**-வெளிஉலகங்களில் வாழும், **முப்பத்து முக்கோடி நித்தரும் பரவு**-33 கோடி தேவர்களும் துதித்து வணங்கும், **கிரியாம்**-மலையாகிய, **நீலகிரி வேலவன்**-திருத்தணியில் வாழும் வேலாயுதக்கடவுள், **நிராலம்பன்**-தனக்கென்று ஒரு பற்றுக்கோடும் இல்லாதவன், **நிர்பயன்**-பயமில்லாதவன், **நிர்வியாகுலன்**-மனத்துன்பம் இல்லாதவன், **சங்கு**-பாஞ்சசனியம் எனும் சங்கு, **வாள்**-நாந்தகம் எனும் வாள், **மாதிகிரி**-பெருமைமிக்க சுதர்சனம் எனும் சக்ரம், **கோதண்டம்**-சாரங்கம் எனும் வில், **தண்டம்**-கௌமேதகம் எனும் கதை, **தரித்த புயன்**-ஆகியவைகளை ஏந்தியுள்ள புயங்களை உடையவனும், **மாதவன் முராரி திருமால்**-மாதவனும் முராரியும் திருமாலும், **மதுகைட வாரி**-மதுகைடவன் என்ற இருஅசுரர்களை அழித்தவனாகிய திருமாலுக்கும், **திரு**-மகா லட்சுமிக்கும், **மருகன்**-மருமகன், **முருகன் குமரன்**-முருகவேள் குமரக்கடவுளின், **வரமுதவு வாகை மயிலாம்**-வேலும் மயிலும்

துணை என்கிற மகாமந்திரத்தின் பொருளாக நின்று அதை ஜெபிக்கும் அடியார்களுக்கு வேண்டிய வரங்களைக் கொடுக்கும் வெற்றிமயில் தான் அது. (எ-று).

விளக்கவுரை: ஜோதி: முருகன் ஜோதி வடிவினன். அவன் ஜெகஜோதித் தம்பிரான். பலஇடங்களில் முருகனை, தீப மங்கள ஜோதி, ஜோதி நடமிடும் பெருமாள், நிர்த்த ஜெக ஜோதி பெருமாள் எனக்கூறுவார். அவருடைய தாயாரும் ஜோதி வடிவினளே என இங்கு குறிப்பிடுகிறார்.

கன்னிகையர் தந்த: சிவதூஷனை செய்த தட்சனுக்கு மகளாகப் பிறந்த பாவத்தைப் போக்க உமாதேவியார், தனது தேகத்தை தீயில் தகித்துவிட்டு இமயமலையில் சிறுகுழந்தை யாகத் தோன்றுகிறாள். இமவானும் அவனது துணைவியான மேனையும் பார்வதிதேவியை வளர்த்து, பருவம் அடைந்தவுடன், தேவி சிவபெருமானைக் குறித்து தவம்செய்கிறாள். அவளைப் பாதுகாப்பதற்காக பல தாதிகள் நியமிக்கப்பட்டனர். அதையே இங்கு கன்னிகையர் தந்த என விளிக்கிறார்.

சிவகாமசுந்தரி: அம்பிகை பரமேஸ்வரனை சதா உபாசித்து கடும்தவம் செய்து அதனால் பெற்ற அந்த தவத்தின் பலனை தான் படைத்த ஜீவராசிகளுக்கு கொடுக்கிறாள். அதனால் அவளுக்கு சிவகாமசுந்தரி என்கின்ற திருநாமம் வந்தது.

மயிலின் விஸ்வரூபம்: பிரபஞ்சத்தில் உள்ள பூரா அண்டங் களையும் தன்பேடையின் முட்டைகள் என எண்ணி அவைகளை அணைத்து பாதுகாக்கும் வல்லமை கொண்டது மயில் என கூறப்படுவதினால், மயிலுக்கு விஸ்வரூபம் எடுக்கும் ஆற்றல் உண்டு என்பது தெளிவாகிறது.

முப்பத்து முக்கோடி நித்தர்

வசுக்கள்	-	8
ருத்திரர்	-	11
ஆதித்யர்	-	12
அசுவனி தேவர்	-	2
ஆகமொத்தம்	-	33

ஒவ்வொருவருக்கும் கோடிக்கணக்கான உபதேவர்கள் இருப்பதால் அவர்களை முப்பத்து முக்கோடி தேவர்கள் என்பர்.

எல்லாத் தேவர்களும் திருத்தணியில் வந்து கந்தக்கடவுளை வணங்குகிறார்கள் என்பதை,

'தலமகள் மீதெண் புலவரு லாவும்
தணிகையில் வாழ்செங் கதிர்வேலா' (புலவர் -தேவர்)

என்பார் 'கலைமடவார்' எனத்தொடங்கும் திருத்தணித் திருப்புகழில்.

நித்தர் : இவர்கள் அழிவில்லாமல் என்றும் சிரஞ்சீவிகளாய் வாழும் சித்தர்கள் என பொருள் கொள்ளலாம். இவர்கள் திருத்தணியில் கிரிவலம் வருவதை,

'சித்தர்கள்நி டாதர் வெற்பின் கொற்றவர்சு வாமி பத்தர்
திக்குகளோர் நாலிரட்டின் கிரிசூழ'

என 'எத்தனைக் கலாதி' எனத்தொடங்கும் திருப்புகழில் கூறுவார்.

நிராலம்பன் : முருகக்கடவுள் சகலலோகங்களுக்கும் தானே பற்றுக் கோடாக இருப்பினும் தனக்கு என ஒருஆதாரமும் இல்லாதவன் என்பதை,

'தானே வளர்ந்து தானே யிருந்த
தார்வேணி யெந்தை யருள்பாலா'

என்ற 'ஊனேறெலும்பு' எனத்தொடங்கும் பொதுப்பாடலில் கூறுவார்.

நிர்பயன்: பகைவர்கள் உள்ளவருக்குத்தான் பயம் இருக்கும். முருகனுக்கு மூன்றுலோகங்களிலும் எதிரிகளே கிடையாது. ஆதலால் அவனுக்கு பயமும் கிடையாது.

நிர்வியாகுலன்: கந்தரநுபூதியில் 'நிராகுலன்' என்பதும் இங்கு நிர்வியாகுலன் என்பதும் ஒரேபொருளாகக் கொண்ட இருசொற்கள். 'மனக்கவலை அற்றவன்' என்பது இதன் பொருளாகும். அதனால் அவன் அடியார்களும் மனக்கவலையற்று வாழவேண்டும் என பிரார்த்திக்கிறார்.

மதுகைடவாரி: *மது கைடவன் என்கின்ற இருஅசுரர்களும் மஹாவிஷ்ணுவின் செவிகளில் இருந்து தோன்றிய அதிபல மகா வீரர்கள், அவர்களை எதிர்த்து ஜெயிக்க முடியாமல் திருமால் தத்தளித்த போது அவர்கள் திருமாலை நோக்கி, 'உனக்கு என்ன வரம் வேண்டும்' என கேட்க, திருமால் அதற்குப் பதிலாக, 'நீங்கள் என்னால் கொல்லப்பட வேண்டும்' என்றுகேட்க அவ் வசுரர்கள் திருமாலின் தொடையில் வந்து ஏற தன்கதையினால் அவர்களை கொன்று விடுகிறார்.*

இந்த மது தான் கும்பகர்ணாக பிறக்கிறான். கைடவன் ராவணனின் மகன் அதிகாயனாக பிறக்கிறான்.

சேவல் விருத்தம் - 5

பாகேஸ்ரீ கண்டசாபு

தானா யிடும்புசெயு மோகினி இடாகினி
தரித்தவே தாளபூதம்
சருவசூ னியமுமங் கிரியினா லுதறித்
தடிந்துசந் தோடமுறவே
கோனாகி மகவானும் வானாள வானாடர்
குலவுசிறை மீளஅட்ட
குலகிரிகள் அசுரர்கிளை பொடியாக வெஞ்சிறைகள்
கொட்டியெட் டிக்கூவுமாம்
மானாகம் அக்கறுகு மானுடையன் நிர்த்தமிடு
மாதேவ னற்குருபரன்
வானீரம் அவனியழல் காலாய் நவக்கிரகம்
வாழ்நாள் அனைத்தும் அவனாம்
சேனா பதித்தலைவன் வேதா வினைச்சிறைசெய்
தேவாதி கட்கரசுகட்
டேனான மைக்கடலின் மீனான வற்கினியன்
சேவற் றிருத்து வசமே.

பதவுரை: ***தானாய்****-ஒருவரின் தூண்டுதல் இல்லாமல்,* ***இடும்பு செய்யும்****-துன்பங்களை விளைவிக்கும்,* ***மோகினி****-மோகினி எனும் பெண் பேய்களும் (நடுநிசியில் தனிவழியில்*

செல்லும் ஆடவரைப் பிடித்துக் கொள்ளும் இவ்வகை மோகினிப் பேய்), **இடாகினி**-பிணங்களைத் தின்னும் இடாகினிப் பேய்கள், **தரித்த வேதாள பூதம்**-இவைகளுடன் கூடி இருக்கும் வேதாளங் கள் பூதங்கள், **சர்வசூனியமும்**-எல்லாவிதமான ஏவல் சூன்யங்கள் அனைத்தையும், **அங்கிரியினால் உதறி**-பாதத்தினால் எடுத்து உதறி, **தடித்து**-அவைகளைத் தண்டித்து, **மகவானும்**-இந்திர னும், **சந்தோடமுறவே**-மகிழ்ச்சியுற்று, **கோனாகி**-மீண்டும் தேவ லோகத்திற்கு அதிபனாகி, **வானாள**-தேவலோகத்தை அரசு ஆளவும், **வானாடர் குலவு சிறை மீள**-அந்த தேவர்களுக்கு நேர்ந்த சிறைநீங்கவும், **அட்ட குல கிரிகள்**-எட்டுத்திசைகளில் உள்ள மலைகள், **அசுரர் கிளை பொடியாக**-அரக்கர்களின் கூட்டங்கள் பொடிப் பொடியாக போகவும், **வெஞ்சிறைகள் எட்டிக் கூவுமாம்**-கொடிய சிறகுகளை படபடவென அடித்துக் கொண்டு எட்டிக்குதித்து பெருங்குரலிட்டுக் கூவும்;

(அது எது என வினாவினால்),

மானாகம்-பெரியவாசுகி எனும் நாகப்பாம்பு, **அக்கு அறுகு மான் உடையன்**-உருத்திராக்கம், அருகம்புல், மான்தோல் இவைகளை அணிந்து கொண்டு, **நிர்த்தம்இடு மாதேவன்**-நடனம் செய்யும் பரமேஸ்வரனுக்கு, **நற்குருபரன்**-நல்ல குருமூர்த்தி, **வான்**-ஆகாயம், **நீரம்**-நீர், **அவனி அழல் காலாய்**-பூமி, நெருப்பு காற்று முதலான பஞ்சபூதங்களாயும், **நவக்கிரகம்**-ஒன்பது கிரகங்களாயும், **வாழ்நாள் அனைத்தும் அவனாம்**-காலம் என்று சொல்லப்படும் தத்துவங்கள் அனைத்தும் எல்லாமாய் இருக்கும் முருகக்கடவுள், **சேனாபதித் தலைவன்**-தேவசேனாபதி, **வேதா வினை சிறைசெய்**-பிரம்மனை சிறையில் அடைத்தவரும், **தேவாதிகட்கரசு**-தேவலோகச் சக்ரவர்த்தி, **கள் தேன் ஆன**-மது தேன் போன்று இனிமை உடையவன், **மைக்கடலில் மீனா னவற்கு இனியன்**-இருண்ட கடலில் மீன் உருவத்தில் இருந்த நந்திதேவருக்கு மகிழ்ச்சியை அளித்தவன், **சேவல் திரு துவசமே**-இப்பேற்பட்ட குமாரக்கடவுளின் கொடியில் உள்ள சேவலே தான் அது.

விளக்கவுரை: மான் உடையன்: சிவபெருமானுக்கு புலித் தோலான ஆடை தவிர மான்தோலினால் ஆன ஆடையும் உண்டு

என்பதை 'புள்ளி மான் உரி உடையீர்' எனும் ஞானசம்பந்தரின் தேவார வாக்கிலும் காண முடிகிறது.

மைக்கடலில் மீனானவற்கு இனியன்: ஒருசமயம் கயிலை யில் சிவபெருமான் அம்பிகைக்கு வேதஆகமங்களை உபதேசித் துக் கொண்டிருக்கும்பொழுது தேவி அங்குள்ள தடாகத்தில் உள்ள மீனைக்கண்டு தன்கவனத்தை அங்கு திருப்பியதால், கோபமுற்ற ஈசன், அம்பிகையை மீனவர் பெண்ணாக பிறக்கும்படி சபிக்கிறார். அம்பிகைக்காக பரிந்து வந்த நந்தியை மீனாக ஆகும்படி சபிக்கிறார்.

தேவி கடற்கரையில் அழகிய பெண்குழந்தை உருவில் கிடந்ததைக் கண்ட செம்படவத் தலைவன் அவளை எடுத்து வளர்த்து வருகிறான். நந்தியும் பெரியமீன் உருவில் யாருக்கும் அகப்படாமல் உலாவுகிறது. வலைஞர் தலைவன், 'யார் அந்த மீனைப் பிடிக்கிறார்களோ, அவருக்கே தன்மகளை மணம்செய்து தருவதாக' சொல்ல பலபேர் முயன்றும் அந்த மீனைப் பிடிக்க முடியவில்லை.

சாபம் முடியப்போகும் தருணத்தில் சிவபெருமான் செம்படவன் உரு எடுத்து ஒரேவலை வீச்சினால் அந்தமீனைப் பிடித்து சாபநிவர்த்தி அளிக்கிறார். அவர் பின் தேவியை மணந்து உத்திரகோசமங்கையில் மீண்டும் ஆகம உபதேசம் செய்விக் கிறார்.

இந்த அற்புத வரலாற்றை, 'நகரம் இரு பாதமாகி' எனத் துவங்கும் பஞ்சாட்சரத் திருப்புகழில்,

'குகனுமரு ளாண்மை கூர மகரமெனு சாப தாரி
குறையகலை வேலை மீது தனியுருக்
குழவிவடி வாக வேநம் பரதர்தவ மாக மீறு
குலவுதிரை சேரு மாது தனைநாடி
அகிலவுல கோர்கள் காண அதிசயம தாக மேவி
அரியமண மேசெய் தேக வலைதேடி
அறுமுகவன் மீகரான பிறவி யமராசை வீசும்
அசபை செகர்சோதி நாத பெருமாளே.

என கூறுவதைக் காணலாம்.

இதே வரலாற்றை இன்றும் சிதம்பரத்தில் நடக்கும் தேர்த் திருநாளில் நடத்திக் காண்பிக்கப்படுவதை காணலாம். மேற்கு ரத வீதியில் வந்த ரதம் அங்கேயே நிற்கும். பிற்பகல் 3 மணிஅளவில் செம்படவர்சேரியில் இருந்து மாப்பிள்ளை சீர் கொண்டுவந்து சமர்ப்பணம் செய்வித்த பின்னரே தேர் அங்கிருந்து நகரும்.

❖ ❖ ❖

வேல் விருத்தம் – 6

ஸிந்துபைரவி கண்டசாபு

பந்தாட லிற்கழங் காடலிற் சுடர்ஊசல்
பாடலினொ டாடலின்எலாம்
பழந்தெவ்வர் கட்கம் துணித்திந்தி ரற்கரசு
பாலித்த திறல்புகழ்ந்தே
சந்தாரு நாண்மலர்க் குழல்அரம் பையர்களும்
சசிமங்கை அனையர்தாமுந்
தன்னைஅன் பொடுபாடி ஆடும்ப்ர தாபமும்
தலைமையும் பெற்றவைவேல்
மந்தா கிநித்தரங் கச்சடில ருக்கரிய
மந்த்ரஉ பதேச நல்கும்
வரதேசி கன்கிஞ்சு கச்சிகா லங்கார
வாரணக் கொடிஉ யர்த்தோன்
கொந்தார் மலர்க்கடம் புஞ்செச்சை மாலையுங்
குவளையுஞ் செங்காந்தளுங்
கூதாள மலருந் தொடுத்தணியு மார்பினன்
கோலத் திருக்கை வேலே.

பதவுரை: ***பந்துஆடலில்****-பலவிதமான பந்து ஆட்டங் களிலும்,* ***கழங்கு ஆடலில்****-கழச்சிக்காய் ஆட்டங்களிலும்,* ***சுடர் ஊசல் பாடலினொடு****-ஒளி வீசுகின்ற ஊஞ்சல் பாடலினோடு,* ***ஆடலில் எலாம்****-மற்ற கும்மி கோலாட்டம் போன்ற ஆட்டங் களில் எல்லாம்,* ***பழம்தெவ்வர் கட்கம் துணித்து****-பழைய பகைவர்களான அசுரர்களின் வாளையும் வீரத்தையும் அடக்கி,* ***இந்திரற்கு அரசு பாலித்த திறல் புகழ்ந்தே****-தேவேந்திரனுக்கு

மீண்டும் அரசாட்சியைக் கொடுத்த திறமையைப் புகழ்ந்து, **சந்தம்ஆரு நாள்மலர் குழல் அரம்பையர்**-அழகு மிகுந்த புதிய மலர்மாலையை கூந்தலில் அணிந்திருக்கும் ரம்பை, ஊர்வசி, திலோத்தமை போன்ற தேவமாதர்கள், **சசிமங்கை**-இந்திராணி, **அனையர்**-அன்னையர் (முருகனைப் பெற்றெடுத்த கௌரி, கங்கை, கார்த்திகைமார்கள் அனைவரும்), **தன்னை அன்பொடு பாடிஆடும் ப்ரதாபமும்**-தன்னை அன்போடு புகழ்ந்துபாடி நடனம் புரிகின்ற கீர்த்தியையும், **தலைமையும்**-ஆதிபத்யத்தையும், **பெற்ற வைவேல்**-தன்னகத்தே பெற்ற கூரிய வேலாயுதம்;

(அது யாருடையது என வினாவினால்),

மந்தாகினி தரங்க-அலைவீசும் கங்கையை, **சடிலருக்கு**-ஜடாமுடியில் தரித்திருக்கும் சிவபெருமானுக்கு, **அரிய மந்த்ர உபதேசம் நல்கும்**-கிடைத்தற்கரிய பிரணவஉபதேசம் செய்த, **வர தேசிகன்**-சிறந்த ஆச்சார்ய மூர்த்தியும், **கிஞ்சுக சிகா அலங்கார**-சிவந்த நிறமுள்ள அழகான கொண்டையை உடைய, **வாரணக் கொடி உயர்த்தோன்**-சேவல்கொடியை உயர்த்தி பிடித் திருப்பவனும், **கொந்துஆர் மலர்க்கடம்பும்**-பூங்கொத்துக்கள் நிறைந்த கடப்ப மாலையையும், **செச்சை மாலை**-இருவாச்சி மாலையையும், **குவளையும் செங்காந்தளும்** - நீலோர்பலமும் காந்தள் பூவையும், **கூதாள மலரும்**-நீலச் சங்கு புஷ்பத்தையும், **தொடுத்தணியும் மார்பினன்**-மாலையாகத் தொடுத்து அணிந் திருக்கும் திருமார்பினை உடைய முருகப்பெருமானின், **கோலத் திருக்கைவேலே**-அழகிய திருக்கரத்தில் வீற்றிருக்கும் வேலாயுதமே.

விளக்கவுரை: முன்காலத்தில் சிறுவர்கள் விளையாடும் விளையாட்டினை தெய்வீக மணம் கமழும்படியாக அமைத்திருந் தார்கள். திருவாசகத்தில் வரும் திருச்சாழல், திருஅம்மானை போன்றவைகள் இதற்கு உதாரணம். அதேபோல் வேலாயுதத்தின் கீர்த்திகளை பாடிக்கொண்டே சிறுமிகள் கோலாட்டம், பந்தாட்டம் முதலிய விளையாடல்களை புரிந்தனர் என இப்பாடலில் இருந்து ஊகிக்க முடிகிறது.

ஒருவர் ஞானோபதேசம் பெறுவதற்கு முன் மந்திரித்த நீரை அவர் தலையில் தெளித்து அவரை உபதேசம் பெறுதற்கு தகுதி உடையவராக்குவர். இதையே கிருத்துவர்களும் ஞானஸ்நானம்

என்பர். சிவபெருமான் ஞானோபதேசம் பெறுதவற்கு முன் கங்கையின் ஜலம் அவரை புனிதமாக்கியது என்பதை, 'மந்தாகிநி தரங்க சடிலருக்கு அரிய மந்திர உபதேசம் நல்கும் வரதேசிகன்' என நயம்படக் கூறுகிறார் அருணைமுனிவர்.

முருகப்பெருமானின் சேவல் சாத்வீகக் குணத்தையும் ரஜோ குணத்தையும் கொண்டுள்ளது என்பதை அதன் வெள்ளைநிறமும் சிவப்பான கொண்டையும் எடுத்துக்காட்டுகிறது. அந்த சேவலானது அடியார்களுக்கு சாத்வீகமாகவும் பகைவர்களுக்கு வீர குணமுடையதாகவும் இருக்கும் என்கிறார்.

மயில் விருத்தம் - 6

ஸிந்துபைரவி கண்டசாபு

சங்கார காலமென அரிபிரமர் வெருவுறச்
சகல லோகமு நடுங்கச்
சந்த்ரசூ ரியரொளித் திந்த்ராதி அமரருஞ்
சஞ்சலப் படஉ மையுடன்
கங்காளர் தனிநாட கஞ்செய்த போதந்த
காரம் பிறந்திட நெடுங்
ககனகூ டமுமேலை முகடுமூ டியபசுங்
கற்றைக் கலாப மயிலாஞ்
சிங்கார குங்கும படீரம்ருக மதயுகள
சித்ரப் பயோ தரகிரித்
தெய்வவா ரணவநிதை புனிதன் குமாரன்
திருத்தணி மகீதரன் இருங்

கெங்கா தரன்கீதம் ஆகிய சுராலய
க்ருபாகரன் கார்த்தி கேயன்
கீர்த்திமா அசுரர்கள் மடியக்ர வுஞ்சகிரி
கிழிபட நடாவு மயிலே.

பதவுரை: சங்கார காலமென-நான்கு யுகங்களின் முடிவில் எல்லாம் அழிவடையும் இறுதிக்காலம் வந்து விட்டதோ என்று, ***அரி பிரமர் வெருவுற***-திருமாலும் பிரமனும் அச்சப்பட்டு

நடுங்கவும், **சகல லோகமும் நடுங்க**-எல்லா உலகங்களும் அச்சப்படவும், **சந்திர சூரியர் ஒளித்து**-சந்திரனும் சூரியனும் பயத்தால் ஒளிந்துகொள்ளவும், **இந்திராதி அமரரும் சஞ்சலப்பட**-இந்திராதி அமரர்கள் குழப்பமடையவும், **உமையுடன் கங்காளர்**-உமாதேவியுடன் எலும்புமாலை அணிந்த சிவனார், **தனி நாடகம் செய்த போது**-ஒப்பற்ற சர்வசங்கார நடனம் செய்த சமயம், **அந்தகாரம் பிறந்திட**-பிரளய இருள் மூடிஇருந்ததுபோல், **நெடுங் ககன கூடமும்**-விரிந்த மேல்உலகத்தின் உச்சியும், **மேலை முகடும்**-வானத்தின் உச்சியும், மூடிய மறையும்படி செய்த, **பசுங்கற்றை கலாப மயிலாம்**-பசிய தோகையை உடைய மயில்;

(அது யாருடையது என வினாவினால்),

சிங்கார-பேரழகுடைய, **குங்கும படீர**-குங்கும நிறங் கொண்ட சாந்துக் கலவையையும், **ம்ருக மத**-கஸ்தூரியையும் புனைந்த, **யுகள சித்ர பயோதர கிரி**-விஸ்தாரமும் அழகும் உடைய மலைபோன்ற இரண்டு மார்பகங்களைக் கொண்ட, **தெய்வ வாரண வனிதை**-தெய்வீகம் பொருந்திய ஐராவதத்தால் வளர்க்கப்பட்ட தேவயானையின், **புனிதன்**-மணவாளனாகிய பரிசுத்த மூர்த்தியான, **குமரன்**-குமரக்கடவுள், **திருத்தணி மகீதரன்** - திருத்தணிமலையில் வாழ்பவன், **இரும் கங்காதரன்**-பெரிய கங்காநதியில் பொறிரூபமாக ஏந்தப்பட்டவன், **கீதம் ஆகிய சுராலயன்**-இசைக்கு ஆதாரமான ஏழுசுரங்களுக்கும் இருப்பிடம் ஆனவன், **கிருபாகரன்**-கருணைக்கடல், **கார்த்திகேயன்**-கிருத்திகை மாதர்களின் புதல்வன், **கீர்த்தி மா அசுரர்கள் மடிய**-வலிமை மிக்க சூரபத்மாதிகள் மடியவும், **கிரவுஞ்ச கிரி கிழிபட**-கிரவுஞ்சமலை பிளவுபடவும், **நடாவு மயிலே**-போர்க்களத்தில் குமரக்கடவுள் ஏறிவந்த மயிலே தான்அது.

விளக்கவுரை: உமையுடன் கங்காளர்: பேரூழிக் காலத்தில் உமையுடன் சிவனார் நடனமாடுவதை, 'சாங்கரி' எனத் தொடங்கும் திருப்புகழ் பாடலில்,

'சாங்கரி பாடியிட வோங்கிய ஞானசுக
தாண்டவ மாடியவர்' - எனக் கூறுகிறார்.

சர்வசங்கார காலத்தில் ஈசன் பிரம்மவிஷ்ணுவாதியர்களின் எலும்புகளை மாலையாகத் தரித்திருப்பதை அப்பர் சுவாமிகள் தேவாரத்தில்,

'பெருங்கடல் மூடி பிரளயம் கொண்டு பிரமனும் போய்
இருங்கடல் மூடி இறக்கும் இறந்தான் களேபரமும்
கருங்கடல் வண்ண களேபர மும்கொண்டு கங்காளராய்
வருங்கடல் மீளநின் றெம்மிறை நல்வீணை வாசிக்குமே.'

என்கிறார்.

இருங் கங்காதரன்: சிவனாரின் நெற்றிக்கண்களில் இருந்து எழுந்த பொறிகளை அக்னிதேவனிடம் கொடுக்க அவன் அப்பொறிகளின் உஷ்ணத்தைத் தாங்க முடியாமல் கங்காநதியில் விடுகிறான். கங்காதேவி அப்பொறிகளை சுமந்து வந்து சரவணப் பொய்கையில் கொண்டு சேர்க்கிறாள். அதனால் முருகனுக்கு காங்கேயன் எனும் திருநாமம் ஏற்படுகிறது. அதனால் இங்கு 'இருங் கங்காதரன்' என குறிப்பிடுகிறார்.

கீதம் ஆகிய சுராலயன்: சங்கீதத்திற்கு ஆதாரமான, சட்ஜம், ரிஷபம், காந்தாரம், மத்யமம், பஞ்சமம், தைவதம் எனப்படும் ஆறுசுரங்களும் முருகப்பெருமானின் ஆறுதிருமுகங் களிலிருந்து தோன்றியவைகளாகும். ஏழாவதுசுரமாகிய நிஷாதம் முருகப் பெருமானின் வாகனமாகிய மயிலிலிருந்து தோன்றியது.

சேவல் விருத்தம் - 6

ஸிந்துபைரவி கண்டசாபு

பங்கமா கியவிட புயங்கமா படமது
பறித்துச் சிவத்தருந்திப்
பகிரண்ட முழுதும் பறந்துநிர்த் தங்கள்புரி
பச்சைக் கலாப மயிலைத்
துங்கமா யன்புற்று வன்புற் றடர்ந்துவரு
துடரும் பிரேத பூதத்
தொகுதிகள் பசாசுகள் நிசாசரர் அடங்கலும்
துண்டப்படக் கொத்துமாம்

மங்கையா மளைகுமரி கங்கைமா லினிகவுரி
வஞ்சிநான் முகிவராகி
மலையரையன் உதவமலை திருமுலையில் ஒழுகுபால்
மகிழ அமுதுண்ட பாலன்
செங்கணன் மதலையிடம் இங்குளான் என்னுநர
சிங்கமாய் இரணியனுடல்
சிந்தஉகி ரிற்கொடு பிளந்தமால் மருமகன்
சேவற் றிருத் துவசமே.

பதவுரை: ***பங்கமாகிய விட***-கொடுமையைச் செய்யும் விஷமுள்ள, ***புயங்க மா படமது***-பாம்பின் பெரிய படத்தை, ***பறித்து***-கொத்தி, ***சிவத்தருந்தி***-சினத்துடன் அதை உணவாகக் கொண்டு, ***பகிரண்ட முழுதும் பறந்து***-வெளிஅண்டங்கள் எல்லாவற்றிலும் பறந்து, ***நிர்த்தமிடும்***-களிநடனம் புரியும், ***பச்சைக் கலாப மயிலை***-பச்சை நிறத் தோகைகளை உடைய மயிலுடன், ***துங்கமாய் அன்புற்று***-தூயஅன்பு கொண்டு, ***வன்புற்று***-வலிமையுடன், ***அடர்ந்து வரும்***-நெருங்கி வரும், ***துடரும்***-தொடர்ந்து வரும், ***பிரேத பூத தொகுதிகள்***-பிணப் பேய்களின் கூட்டங்கள், ***பசாசுகள்***-பிசாசுகளையும், ***நிசாசரர் அடங்கலும்***-அசுரர் கூட்டங்கள் அனைத்தையும், ***துண்டப்படக் கொத்துமாம்***-துண்டு துண்டாகச் சிதறும்படி கொத்தும்;

(அது எது என வினாவினால்),

மங்கை-மங்கையும், ***யாமளை***-யாமளையும், ***குமரி***- குமாரியும், ***கங்கை***-கங்கையாக இருப்பவளும், ***மாலினி***-மாலைகளை அணிந் திருப்பவளும், ***கவுரி***-பொன்னிறமாக இருப்பவளும், ***வஞ்சி***-கொடி போன்றவளும், ***நான்முகி***-நான்கு முகங்களை உடையவளும், ***வராகி***-வராகியும், ***மலைஅரையன் உதவுஅமலை***-இமவான் தந்த அப்பழுக்கற்றவளும், ***திருமுலையில் ஒழுகு பால்***-ஆகிய பார்வதிதேவியின் திருமார்பிலிருந்து ஒழுகிய பாலமுதத்தை, ***மகிழ அமுதுண்ட பாலன்***-மகிழ்ச்சியோடு உண்ட சிறுவன், ***செங்கணண்***-(கோபத்தால்) சிவந்த கண்களை உடைய திருமால், ***மதலையிடம் இங்குளான் என்னும்***-இதோ தூணில் இருக்கிறான் என்று பிரகலாதனால் சுட்டிக் காட்டப்பட்டவன், ***நரசிங்கமாய் இரணியனுடல்***-நரசிங்க அவதாரம் எடுத்து இரணியன் உடலை,

சிந்த உகிரில்கொடு பிளந்த மால் மருமகன்-ரத்தம்சிந்த கைநகத்தால் பிளந்து சம்காரம்செய்த மகாவிஷ்ணுவின் மருமகன், **சேவல் திருத் துவசமே**-(ஆகிய) குமாரக்கடவுளின் கொடியில் உள்ள சேவலே தான்அது.

விளக்கவுரை: முருகனுடைய மயிலுக்கும் சேவலுக்கும் இடையே காணும் நட்பை மயில் வகுப்பிலும்,

'கூவியிர வந்தம்உணர் வாழியென நின்றுபொரு
கோழியொடு வென்றிமுறை யும்ப கருமே'

என்று கூறுவார் அருணகிரியார்.

மதலை: இங்கு மதலை என்ற சொல்லுக்கு தூண் என்று பொருள்.

இதேபொருளுடன் 'நீலமயில்' எனத் தொடங்கும் போறை நகர திருப்புகழிலும்,

'கூடமுறை நீடு செம்பொன் மாமதலை யுடை முந்த
கோபவரி நார சிங்கன் மருகோனே.' என்கிறார்.

❖ ❖ ❖

வேல் விருத்தம் - 7

பீம்பளாஸ் கண்டசாபு

அண்டங்கள் ஓருகோடி ஆயினுங் குலகிரி
அநந்தமா யினுமேவினால்
அடையவுரு விப்புறம் போவதல் லதுதங்கல்
அறியாது சூரனுடலைக்
கண்டம் படப்பொருது காலனுங் குலைவுறுங்
கடியகொலை புரியு மதுசெங்
கநகா சலத்தைக் கடைந்துமுனை யிட்டுக்
கடுக்கின்ற துங்க நெடுவேல்
தண்டந் தநுத்திகிரி சங்குகட் கங்கொண்ட
தானவாந் தகன்மாயவன்

தழல்விழிக் கொடுவரிப் பருவுடற் பஃறலைத்
தமனியச் சுடிகையின் மேல்
வண்டொன்று கமலத்து மங்கையுங் கடல்ஆடை
மங்கையும் பதம்வருடவே
மதுமலர்க் கண்துயில் முகுந்தன்மரு கன்குகன்
வாகைத் திருக்கை வேலே.

பதவுரை: ***அண்டங்கள் ஒருகோடி ஆயினும்***-கோடிக் கணக்கான உலகங்கள் எதிரே நின்றாலும், ***குலகிரி அநந்தம் ஆயினும்***-கணக்கில்லாத பெரியமலைகள் எதிரே நின்றாலும், ***மேவினால்***-அவைகள் எதிர்த்தால், ***அடைய உருவி***-அவற்றிற் குள் நுழைந்துபோய், ***புறம் போவது அல்லது***-பின்புறமாக வெளியே போவது அன்றி, ***தங்கல் அறியாது***-தான் எடுத்துக் கொண்ட காரியத்தை முடிக்காமல் தங்கி நின்றது என்கிற சரித்திரமே இல்லாது, ***சூரன் உடலை***-சூரபத்மாவின் தேகத்தை, ***கண்டம் பட பொருது***-போரில் துண்டுதுண்டாக வெட்டி, ***காலனும் குலைவுறும்***-எமனும் அச்சப்படும் வண்ணம், ***கடிய கொலை புரியும் அது***-போர்க்களத்தில் கொடூரமான கொலை களைச் செய்வதும், ***செங்கநக அசலத்தைக் கடைந்து***-பொன் மயமான மேருமலையைக் கடைந்ததுபோல், ***முனையிட்டு***-கூரிய முனைபடைத்து, ***கடுக்கின்ற***-கோபம் கொண்டுள்ள, ***துங்க நெடுவேல்***-பரிசுத்தமான நெடிய வேல்;

(அது யாருடையதுஎன வினாவினால்),

தண்டம்-கௌமோதகி என்கிற கதை, ***தநு***-சார்ங்கம் என்கிற வில், ***திகிரி***-சுதர்சனம் என்கிற சக்கரம், ***சங்கு***-பாஞ்சசன்யம் என்கிற சங்கு, ***கட்கம்***-நாந்தகம் என்கிற வாள் (இந்த பஞ்ச ஆயுதங்களைக் கொண்டவனும்), ***தானவ அந்தகன்***-அசுரர் களுக்கு எமன் போன்றவனும், ***மாயவன்***-மாயாரூபனும், ***தழல்விழி***-நெருப்பைப்போல் எரியும் கண்கள், ***கொடுவரி***-வளைந்த கோடுகள், ***பருஉடல்***-பருத்த உடல், ***பல தலை***-ஆயிரம் தலை முடிகள் கொண்ட, ***தமனிய***-ஆதிசேடனின் பொன்நிறமான, ***சுடிகையின் மேல்***-படுக்கையின் மேல், ***வண்டு ஒன்று கமலத்து மங்கையும்***-வண்டுகள் மொய்க்கும் செந்தாமரையில்

வாசம்செய்யும் ஸ்ரீதேவியும், **கடலாடை மங்கையும்**-கடலை ஆடையாகத் தரித்துள்ள பூதேவியும், **பதம் வருடவே**-தன் திருப்பாதங்களை வருடிக் கொடுக்க, **மது மலர் கண் துயில்**-தேன் சிந்தும் தாமரைபோன்ற அழகான கண்களை மூடிக் கொண்டு தூங்குகின்ற, **முகுந்தன் மருகன்**-மஹாவிஷ்ணுவின் மருமகனும், **குகன் வாகைத் திருக்கைவேலே**-குகமூர்த்தியின் வெற்றியே காணும் வேலாயுதமே அது.

விளக்கவுரை: வேல் ஞானசக்தி ஆதலினால் ஞானத்திற்கு முன் அசுரபலம் என்றும் நிற்காது என்பதை முதல் இரண்டு அடிகளில் உணர்த்துகிறார். எவரையும் கொல்லும் எமன், வேலாயுதம் செய்யும் போர்க்கள கொலைத் தொழிலைக் கண்டு அஞ்சுகிறான் என்பதை 'காலனும் குலைவுறும்' என்கிறார். ஆனால் அவர் தூங்குவது யோக நித்திரை. உலகில் எங்கு கலகம் நேர்ந்தாலும் அங்குசென்று அடியார்களைக் காக்கத் தயாராக அவர் இருக்கிறார் என்பதை,

'கனைக்குந்தண் கடற்சங்கங்
கரத்தின்கண் தெரித்தெங்குங்
கலக்கஞ்சிந் திடக்கண்துஞ் சிடுமாலும்'

என 'மனத்தின்' எனத்தொடங்கும் திருச்செந்தூர் திருப்புகழில் கூறுகிறார்.

மயில் விருத்தம் – 7

பீம்பளாஸ் கண்டசாபு

தீரப் பயோததி [க]திக்குமா காயமுஞ்
செகதலமு நின்று சுழலத்
திகழ்கின்ற முடிமவுலி சிதறிவிழ வெஞ்சிகைத்
தீக்கொப் புளிக்க வெருளும்
பாரப் பணாமுடி அநந்தன்முதல் அரவெலாம்
பதைபதைத் தேநடுங்கப்
படர்சக்ர வாளகிரி துகள்படவை யாளிவரு
பச்சைப்ர வாள மயிலாம்
ஆரப்ர தாபபுள கிதமதன பாடீர
அமிர்தகலசக் கொங்கையாள்

ஆடுமயில் நிகர்வல்லி அபிராம வல்லிபர
மாநந்த வல்லி சிறுவன்
கோரத்ரி சூலத்ரி யம்பக ஜடாதார
குருதரு திருத்தணி கைவேள்
கொடியநிசி சரர்உதரம் எரிபுகுத விபுதர்பதி
குடிபுகுத நடவு மயிலே.

பதவுரை: ***தீர***-மிகவும் நன்றாக, ***பயோததி***-சமுத்திரங் களும், ***திக்கும்***-எட்டுத் திசைகளும், ***ஆகாயமும்***-மேல் வானமும், ***செக தலமும்***-பூவுலகும், ***நின்று சுழல***-நின்ற நிலையில் சுழற்சி அடையவும், ***திகழ்கின்ற***-விளங்குகின்ற, ***முடி மவுலி***-ஆயிரம் பணாமுடிகளும் கீழே விழுந்து சிதறவும், ***வெம் சிகை தீக் கொப்புளிக்க***-கொடிய உச்சியின் மேல்உள்ள படங்கள் நெருப்பைக் கக்கவும், ***வெருளும்***-பயத்தை அடைந்த, ***பாரப் பணாமுடி***-கனத்தப் படக்கூட்டங்களை உடைய, ***அநந்தன் முதல் அரவெலாம்***-ஆதிசேடன் முதலான சர்ப்பக் கூட்டங்கள், ***பதை பதைத்து நடுங்க***-பட படவென்று அச்சமுற்று நடுங்கவும், ***படர் சக்ரவாளகிரி***-எங்கும் பரந்துள்ள சக்ரவாளகிரி, ***துகள் பட***-தூள் தூளாகப் போகவும், ***வையாளி வரு***-பயணத்திற்கு ஏற்றபடி சவாரிக்குவரும், ***பச்சைப் பிரவாள மயிலாம்***-பச்சை நிறத்தையும் பவளநிறத்தையும் உடைய தோகைகளைக் கொண்ட மயில்;

(அது யாருடையது என வினாவினால்),

ஆர-மிக்க கீர்த்தி உடையதாய், ***புளகித***-புளகாங்கிதம், ***கொண்டதாய் மதன***-ஒளி மிகுந்ததாய், ***பாடீர***-சந்தனப் பூச்சுக்கள் அணியப் பெற்றதாய், ***அமிர்த கலச கொங்கையாள்***-அமிர்தம் நிறைந்த குடத்தைப்போன்ற தனபாரங்களைக் கொண்டவள், ***ஆடுமயில் நிகர்வல்லி***-தோகையை விரித்து ஆடும் மயிலைப் போன்றவள், ***அபிராமவல்லி***-பேரழகு உடையவள், ***பரமானந்த வல்லி***-பேரானந்தத்தில் திகழ்ந்து கொண்டிருப் பவள், ***சிறுவன்***-இப்பேற்பட்ட பார்வதிதேவியின் திருக்குமரன், ***கோர த்ரிசூல***-கோரமான முத்தலை சூலத்தை ஏந்தியவரும், ***த்ரியம்பக***-முக்கண்ணரும், ***ஜடாதார***-நிமிர் சடை யானும், ***குரு***-லோககுருவாகிய சிவபெருமான், ***தரு***-தந்தருளிய, ***திருத்தணிகை வேள்***-தணிகேசன், ***கொடிய நிசிசரர் உதிரம் எரி***

புகுத-கொடிய செயல்களையே செய்துவந்த அசுரர்களின் வயிற்றில் எரிபுகவும், **விபுதர் பதிகுடிபுகுத**-தேவர்கள் அமராவதி நகரில் குடியேறவும், **நடவு மயிலே**-செலுத்திய மயிலே தான்அது.

விளக்கவுரை: ஆரப்ரதாப....கலச கொங்கையாள்: அம்பிகையின் தனபாரங்கள் கீர்த்தி மிக்கவை என்பதற்கு காரணம் என்ன?

'துகரவித்தக மாகு மென்றுமை மொழியிற்பொழி
பாலை யுண்டிடு
நுவல்மெய்புள பாலன் னென்றிடு மிளையோனே'

என்று சம்பந்தப்பெருமான் உமையம்மையின் திருமுலைப் பால்அருந்தி ஞானம் அடைந்ததை, 'பகர்தற்கரிதான' எனத் தொடங்கும் பழநித் திருப்புகழில் அருணகிரியார் கூறுகிறார். ஆதிசங்கரரும் தான்இயற்றிய சௌந்தர்யலஹரியில் வரும் 75வது செய்யுளில்,

'தவ ஸ்தன்யம் மன்யே'

இதன்பொருள்: உன்னுடைய தனபாரங்களை நான் வணங்குகிறேன் என்பார். மேலும் அவர் திராவிடசிசுவாகிய ஞானசம்பந்தர் உனது பாலைப் பருகி கவி இயற்றுவதில் அதி உன்னத பதவியைப் பெற்றார் என்பார்.

ஆடு மயில் நிகர் வல்லி: உமையாளுக்கும் மயிலுக்கும் ஒரு ஒற்றுமை உண்டு. மயில் கரிய மழைமேகத்தைக் கண்டு உற்சாகமடைந்து ஆடுவதைப் போல அம்பாளும் சுவாமியின் நீலகண்டத்தை நோக்கி அதன் சிறப்பை உணர்ந்து மயிலனைய பார்வதிதேவி உற்சாகத்துடன் நடனமாடுகிறாள். இதனாலேயே, திருமயிலை, மயிலாடுதுறை போன்ற திருத்தலங்களில் உமா தேவியார் மயில்ரூபமாக சிவபெருமானை பூஜிக்கும் திருக் கோலத்தில் அடியார்களுக்கு காட்சி தருகிறாள்.

குரு: உலகுக்கெல்லாம் குருவாகத் திகழ்பவர் தட்சிணா மூர்த்தி என்பதால் சிவபெருமானை குரு என்கிறார். இப்பேற் பட்ட குருமூர்த்திக்கும் பிரணவ மந்திரத்தை உபதேசித்து குருநாதராகத் திகழ்பவர் முருகன் என்பதால் அவருக்கு 'குருபரன்' எனும் திருநாமம் ஏற்பட்டது.

கொடிய நிசிசரர்....குடிபுகுத: கடைசி வரிகளான இவை களின் கருத்தை, சீர்பாத வகுப்பில்,

'இமையவர்கள் நகரிலிறை குடிபுகுத நிருதர்வயி றெரிபுகுத'

என்கிற அடிகளில் காணலாம்.

சேவல் விருத்தம் - 7

பீம்பளாஸ் கண்டசாபு

வீறான காரிகதி முன்னோடி பின்னோடி
வெங்கட் குறும்புகள் தரும்
விடுபேய்க ளேகழுவன் கொலைசாவு கொள்ளிவாய்
வெம்பேய் களைத்துரத்திப்
பேறான 'சரவண பவா' என்னுமந்திரம்
பேசியுச் சாடனத்தாற்
பிடர்பிடித் துக்கொத்தி நகநுதியி னாலுறப்
பிய்ச்சுக் களித்தாடுமாம்
மாறாத முயலகன் வயிற்றுவலி குன்மம்
மகோதரம் பெருவியாதி
வாதபித் தஞ்சிலேற் பனங்குட்ட முதலான
வல்லபிணி களைமாற்றியே
சீறாத ஓராறு திருமுக மலர்ந்தடியர்
சித்தத் திருக்கு முருகன்
சிலைகள்உரு விடஅயிலை விடுகுமர குருபரன்
சேவற் றிருத் துவசமே.

பதவுரை: வீறான-மிடுக்குடைய, **காரி கதி**-பைரவர் போகும் வழியில், **முன்னோடி பின்னோடி**-முன்னும் பின்னும் ஓடி தொடர்ந்துவந்து, **வெங்கண் குறும்புகள் தரும்**-சிவந்த கண் களை உடையனவாய் சேஷ்டைகள் புரியும், **விடு பேய்களே**-தனித்திருக்கும் பேய்களையும், **கழு**-கொடிய கழுகுகளையும், **வன்கொலை சாவு**-வன்மையான கொலைகளுக்கும் சாவு களுக்கும் காரணமான, **கொள்ளிவாய்**-நெருப்பைக் கக்கும் வாய்களை உடைய, **வெம்பேய்களைத் துரத்தியே**-கொடிய

பேய்களைத் துரத்திச்சென்று, **பேறான**-தவத்தால் கிடைப்பதான, சரவணபவா என்னும் **மந்திரம்**-சரவணபவா என்கிற சடாட்சர மந்திரத்தை, **பேசி**-சொல்லி, **உச்சாடனத்தால்**-உச்சாடனத்தினால் பிரயோகம் செய்யும் வகையில், **பிடர் பிடித்துக் கொத்தி**-அவைகளுடைய கழுத்தைப் பிடித்து மூக்கினால் கொத்தி, **நக நுதியினால் உற பிச்சி**-கூர்மையான நகமுனையினால் பிச்சி, **களித்து ஆடுமாம்**-மகிழ்ச்சியுடன் நடனம் புரியும்;

(அது எது என வினாவினால்),

மாறாத முயலகன்-நீங்காத வியாதியான காக்காய் வலிப்பு, **வயிற்றுவலி**-வயிற்றுவலி, **குன்மம்**-வயிறு உளைப்பு (சூலை நோய்), **மகோதரம்**-பெருவயிறு, **பெரு வியாதி**-பால்வினை நோய்கள், **வாதம் பித்தம்**-வாதம் பித்தம், **சிலேற்பனம்**-சிலேத்துமம், **குட்டம்**-குஷ்டம், **முதலான**-இவைபோன்ற, **வல்லபிணிகளை மாற்றியே**-கொடிய நோய்களை நீக்குபவரும், **சீறாத**-அடியவர்களின் கோடி குறைகள் கருதினாலும் வேறு முனிய அறியாதவரும், **ஓராறு திருமுகம் மலர்ந்து**-தனது ஆறு திருமுகங்களும் மகிழ்ச்சியுடன், **அடியர் சித்தத்திருக்கும் முருகன்**-தியானிக்கும் அடியவர்களின் உள்ளத்தில் வீற்றிருக்கும் முருகன், **சிலைகள் உருவிட**-கிரவுஞ்சகிரியும் மற்ற ஏழுமலை களும் உருவிச் சென்று அழித்த, **அயிலை விடு**-கூரிய வேலாயுதத் தைச் செலுத்திய, **குமரகுருபரன்**-குமாரப் பரமேஸ்வரனின், **சேவல் திருத்துவசமே**-கொடியில் வீற்றிருக்கும் சேவலே தான்அது.

❖ ❖ ❖

வேல் விருத்தம் – 8

மாண்ட் கண்டசாபு

மாமுதல் தடிந்துதண் மல்குகிரி யூடுபோய்
வலியதா னவர்மார்பிடம்
வழிகண்டு கமலபவ னத்தனைச் சிறையிட்டு
மகவான் தனைச் சிறைவிடுத்
தோமவிரு டித்தலைவர் ஆசிபெற் றுயர்வானில்
உம்பர்சொற் றுதிபெற்றுநா

உடையகீ ரன்தனது பாடல்பெற் றுலகுதனில்
ஒப்பில்புகழ் பெற்ற வைவேல்
சோமகல சப்ரபா லங்கார தரஜடா
சூடிகா லாந்தகாலர்
துங்கரக்ஷ கத்ரோண கட்ககுலி சஞ்சூல
துரககே சரமாம்பரச்
சேமவட வாம்புயப் பரணசங் காபரண
திகம்பர த்ரியம்பகமகா
தேவநந் தனகஜா நநசகோ தரகுகன்
செம்பொற் றிருக்கை வேலே.

பதவுரை: ***மாமுதல் தடிந்து***-முதல்வனாய் நின்று மா மரமாய் மாறின சூரபத்மனை அழித்து, ***தண்கு மல்கு கிரி ஊடு போய்***-குளிர்ந்த ஏழு மலைகளையும் ஊடுருவிச் சென்று வலிய, ***தானவர் மார்பிடம்***-அந்த மலைகளில் வசித்த அசுரர்களின் வலிய மார்பினை, ***வழிகண்டு***-பிளந்து அப்புறமாகச் சென்றும், ***கமலபவத்தனை***-தாமரைப் பூவினில் வாசம் செய்யும் பிரமனை, ***சிறை இட்டு***-பிரணவப்பொருளை தெரியாமல் இருந்த குற்றத்திற் காக சிறையில் அடைத்தும், ***மகவான் தனை***-நூறு அஸ்வமேத யாகம் செய்த இந்திரனை, ***சிறைவிடுத்தும்***-சூரபத்மா அடைத்த சிறையினின்றும் விடுவித்தும், ***ஓம இருடி தலைவர் ஆசி பெற்று***-யாகங்கள் செய்யும் முனிவர்களின் வாழ்த்து பெற்று, ***உயர் வானில் உம்பர் சொல் துதிபெற்று***-மேலே சொர்க்கத்தில் தேவர்களால் செய்யப்பட்ட துதிகளைப் பெற்று, ***நா உடைய கீரன் தனது பாடல் பெற்று*** - நாவன்மை உடைய கீரனின் துதிப் பாடல்களைப் பெற்று, ***உலகுதனில் ஒப்பில் புகழ்பெற்ற வைவேல்***-இந்த உலகங்களில் யாருக்குமே இல்லாத வகையில் கீர்த்தியைப் பெற்ற கூரிய வேலாயுதம்;

(அது யாருடையது என வினாவினால்),

கலசசோம-கிண்ணம் போன்ற பிறைச்சந்திரனின், ***பிரபா அலங்கார***-ஒளிவீசும் அலங்காரத்தை, ***ஜடா சூடி தர***-ஜடா

முடியில் தரித்துள்ளவரும், **கால அந்தகாலர்**-எமனுக்கும் மரணத்தை விளைவிப்பவரும், **துங்க ரட்சகத் துரோண**-பரிசுத்தம் வாய்ந்து உலகை பாதுகாக்கும் வில், **கட்கம் குலிசம் சூல**-வாள் வஜ்ராயுதம் சூலம் இவைகளைக் கொண்டுள்ளவரும், **துரக**-குதிரையின் உருவத்தைக் கொண்டு, **கேசரம்**-சிங்கம் போன்ற கம்பீரத்துடன், **அம்பரம்**-சமுத்திரத்தை, **சேம**-பாதுகாத்து வரும், **வடவா**-வடவாமுகாக்னியை, **அம்புய**-அபிஷேக நீராக, **பரண**-கொள்பவரும், **சங்கு ஆபரண**-வெண்சங்கை காதில் ஆபரண மாக கொண்டவரும், **திகம்பர**-திக்குகளை ஆடையாகக் கொண்ட வரும், **த்ரியம்பக**-முக்கண்ணரும் ஆகிய, **மகாதேவ நந்தன**-சிவபெருமானின் குமாரனும், **கஜானன சகோதர**-யானைமுகக் கடவுளான விநாயகப்பெருமானின் சகோதரனுமாகிய, **குகன்**-முருகமூர்த்தியின், **செம்பொன் திருக்கைவேலே**-அழகிய பொன் போன்ற கரத்தில் தங்கும் வேலாயுதமே அது.

விளக்கவுரை: பிரணவத்திற்குப் பொருள் தெரியாமல் அகங்காரங் கொண்ட பிரமனைச் சிறையில் அடைத்தும், பணி வுடன் தன்னைத் துதித்த இந்திரனை சிறையிலிருந்து விடுவித்த தையும் ஒன்றுசேரக் கூறுவது அருணகிரியாரின் வழக்கம்.

இதே கருத்தை, கந்தர்அந்தாதியில்,

\- 'சேவின் மைமீன்.....
தேடிக் கொடும்படை கோமான் சிறைபட வேறுளபுத்
தேடிக் கொடும்படை யாவெகுநாட்டன் சிறைகளை'

என்று கூறுவார். பிரமனைத் தண்டித்த அதே வேலாயுதம் தான் அவனைக் கொண்டுபோய் சிறையிலும் அடைத்தது என்பதை - 'தலராசி தந்தானை சிறையிட்ட வேல்' எனக் கூறுவார்.

'தேதென வாச' என்று ஆரம்பிக்கும் திருப்புகழில்,

'மேருவை நீறெ ழுப்பி நான்முக னார்ப தத்தில்
வேலடை யாள மிட்ட பெருமாளே' என்பார்.

வியாபார நிறுவனங்களிலும் வங்கிகளிலும் இரவில் அவை களை மூடிவிட்டு செல்லும்போது, பாதுகாப்பை உறுதி செய்யும் பொருட்டு, பூட்டைத் துணியால்சுற்றி மூடி அந்த நிறுவனத்தின் இலச்சியினை அரக்கால் காய்ச்சி இட்டு அந்தஇடத்தில்

அடையாளமிடுவர். அதுபோல பிரமனை சிறைஇட்டு அவனது விலங்கின்மேல் தனதுசின்னமான வேலாயுத இலச்சினை பொறித்தார் முருகப்பெருமான்.

இந்திரனை சிறையினின்று மீட்டுவந்ததும் வேலாயுதமே என்பதை வேல்வகுப்பில் கூறுவார்.

'பனைக்கைமுக படக்கரட மதத்தவள
கசக்கடவுள் பதத்திடுநி களத்துமுளை தெறிக்கவர மாகும்.'

முனிவர்கள் செய்யும் ஹோமத்திற்கு உரியவன் முருகனே என்பதை கந்தர்அந்தாதியில் 'ஓம ரண' - என்பார். அந்தண் மறை வேள்விக்காரனாகிய முருகன் யாகங்களை ரட்சிப்பதற்கு வேலாயுதத்தையே அனுப்புகிறார். வேலாயுதத்தின் நற்பணியை வாழ்த்தி முனிவர்கள் - **'ஜெய விஜயீ பவ'** - என ஆசி கூறுகிறார்கள். சிவனார் வேலாயுதத்தை கொடுத்து அருளியபோது, - 'அன்பர் அவை தழைக்க விண் கா' - எனச் சொன்னதை சிரமேற்கொண்டு அந்த வேலாயுதமே விண்ணுலகை காத்து வந்ததால் தேவர்கள் அனைவரும் வேலாயுதத்தைத் துதிக்கின் றனர்.

நக்கீரனுடைய பாடலைப் பெற்றதாகச் சொன்னது அவர் பாடின திருமுருகாற்றுப்படையின் கடைசியில் வரும் வெண் பாக்களில் ஒன்றான,

''வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல் செவ்வேள் திருக்கைவேல் -வாரி
குளித்தவேல் கொற்றவேல் சூர்மார்புங் குன்றுந்
தொளைத்தவே லுண்டே துணை.''.

என்ற பாடலைக் குறிப்பதாகும்.

எல்லா ஜீவராசிகளுக்கும் காலத்தை கணக்கிட்டு முடிப்பவன் காலன், அவனுக்கும் அந்திமகாலமாகிய மரணத்தைக் கொடுப்பவர் சிவபெருமான். அவரே - காலஅந்தகாலர் - காலாந்தகர் - ஆவார். இந்த உயர்ந்தநாமம் வேதங்களில் நடுநாயகமாக திகழும் ஸ்ரீ ருத்ரத்தில் வருகிறது.

பகன் என்பவன் பிருகுமுனிவரின் பேரன். தன்னுடைய தந்தை கிருதவீரியன் இறந்ததை அறிந்து அதற்குக் காரண

மாயிருந்த வம்சத்தை அழிக்க கடும்தவம் செய்கிறான். ஆனால் நடுவில் அவனுடைய பித்ருக்கள் ஆகாயத்தில் தோன்றி அந்த தவத்தைக் கைவிடும்படி வற்புறுத்த அவனும் கைவிட்டு விடுகிறான். தனது தவாக்னியை சமுத்திரத்தில் கொண்டு விடுகிறான். அது பெண்குதிரை வடிவமெடுத்து வடவாமுகாக்னி யாகி கடல்நீர் உலகை அழித்துவிடாதபடி பாதுகாத்து வருகிறது. யுகமுடிவில் சிவபெருமான் இந்த வடவாமுகாக்னியை தனது அபிஷேகநீராக எடுத்துக் கொண்டதினால் கடல்நீர் பெருகி இவ்வுலகை அழிக்கும் போது மகாப்பிரளயம் ஏற்படுகிறது.

மயில் விருத்தம் - 8

மாண்ட் கண்டசாபு

செக்கரள கேசசிக ரத்நபுரி ராசிநிரை
சிந்தப் புராரி யமிர்தந்
திரும்பப் பிறந்ததென ஆயிரம் பகுவாய்கள்
தீவிஷங் கொப்புளிப்பச்
சக்ரகிரி சூழவரு மண்டலங் கள்சகல
சங்கார கோர நயனத்
தறுகண்வா சுகிபணா முடியெடுத் துதறுமொரு
சண்டப்ப்ர சண்டமயிலாம்
விக்ரம கிராதகுலி புனமீ துலாவிய
விருத்தன் திருத்தணிகைவாழ்
வேலாயு தன்பழ வினைத்துயர் அறுத்தெனை
வெளிப்பட வுணர்த்தியருளித்
துக்கசுக பேதமற வாழ்வித்த கந்தச்
சுவாமிவா கனமானதோர்
துரககஜ ரதகடக விகடதட நிருதர்குல
துஷ்டர் நிஷ்டூ ரமயிலே.

பதவுரை: ***ராசிநிரை****-(வாசுகியின்)* வரிசையாக அமைந்துள்ள படங்களின் கூட்டம், ***செக்கர் அளகேச****-சிவந்த நிறமுள்ள குபேரனின் செல்வத்தைப் போன்ற,* ***புரிசிகர ரத்ன****-விளங்குகின்ற முடியிலுள்ள நாகரத்னங்களை,* ***சிந்த****-சிதற,* ***புராரி***

அமிர்தம்-திரிபுர சம்ஹாரியான சிவனார் முன்பு அமிர்தம் போல் உண்ட ஆலகால விஷம், **திரும்பப் பிறந்தது என**- மீண்டும் தோன்றிவிட்டதோ என அனைவரும் அஞ்ச, **ஆயிரம் பகு வாய்கள்**-பிளவுபட்ட ஆயிரம் வாய்களும், **தீவிஷம் கொப்புளிப்ப**-நெருப்பைப்போல் எரியும் விஷத்தைக் கக்க, **சக்ரகிரி சூழவரு மண்டலங்கள்**-சக்ரவாளகிரியால் சூழப்பட்ட தேசங்கள் யாவையும், **சகல சங்கார**-ஒரேமூச்சில் அழிக்கவல்ல, **கோர நயன**-கொடூரமான பார்வையை உடைய, **தறுகண் வாசுகி** -வீரமும் கொடூரமும் உள்ள வாசுகியின், **பணாமுடி எடுத்து உதறும்**-படக்கூட்டங்களை ஒரேஅடியாகத் தூக்கி வீசுகிற, **சண்டப் பிரசண்ட மயிலாம்**-உக்ரமும் வேகமும் கொண்ட மயில்;

(அது யாருடையதுஎன வினவினால்),

விக்ரம கிராதகுலி-வீரம்மிக்க வேடர் வம்சத்தில் வளர்ந்து வந்த, **புன மீது உலாவிய**-வள்ளிப் புனத்திற்குச் சென்று உலாவி வந்த, **விருத்தன்**-கிழரூபம் எடுத்த மேலோன், **திருத்தணிகை வாழ் வேலாயுதன்**-சானித்தியம் கொண்டு திகழும் திருத்தணி தலத்தில் வாழும் வேலாயுதக் கடவுள், **பழவினை துயர் அறுத்து** -என்னுடைய பூர்வஜென்ம வினைகளாய துன்பத்தை ஒழித்து, **எனை வெளிப்பட உணர்த்தி அருளி**-நான் யார் என்பதை எனக்கு உபதேசம் மூலமாக உணர்த்தி அருளி, **துக்க சுக பேதமற வாழ்வித்த கந்தசுவாமி**-இன்ப துன்பங்களைக் கடந்த அத்துவித நிலையில் என்னை இருத்தி அருளிய கந்தசுவாமி, **வாகனமானது**-வாகனமாக திகழும், **ஓர்**-ஒப்பற்ற, **துரக ரத கஜ கடக**-குதிரை, தேர், யானை காலாட் படைகளை கொண்ட, **விகட தட**-பெருமை உள்ளதும் அகன்றதுமான, **நிருதர் குலதுஷ்டர்**-அசுரர் குல தீயோர்களை, **நிஷ்டுர மயிலே**-கொடுமையை காட்டி அழிக்கின்ற மயிலே தான்அது.

விளக்கவுரை: ரத்நம் : ஆயுட்காலம் முழுவதும் யாரை யுமே தீண்டாமல் விஷத்தையும் கக்காமல் இருக்கும் நாக சர்ப்பத்தின் அந்த விஷமே ரத்னமாக மாறிவிடுகிறது. இதையே விஞ்ஞானிகளும் மாணிக்கமும் கரி (Carbon) யின் ஒரு மாற்று ரூபமே என்கிறார்கள். விஷமும் கரியின் ஒருவகை மாற்று ரூபமே.

புராரிஅமிர்தம்: திருப்பாற்கடலில் தேவர்களும் அசுரர் களும் கடைந்த சமயம் வெளிவந்த மஹாலட்சுமி, ஐராவதம், வைஸ்ரவஸ் போன்ற மதிப்புள்ளவைகளை திருமால் முதலிய தேவர்கள் எடுத்துக் கொண்டனர். ஆனால் அதிபயங்கரமான ஆலகால விஷம் வெளிவந்தபோது அதைபெற்றுக் கொள்ளுதற்கு யாரும் முன் வரவில்லை. மாறாக அவர்கள் அஞ்சி சிவபெருமானிடத்தில் சென்று முறையிட்டனர். சிவபெருமானும், சிறுகுழந்தைகளின் சுயநலத்தைக் கண்டு புன்சிரிப்பு செய்யும் தந்தையைப் போல் அந்த விஷத்தைஏற்று உண்டு விடுகிறார். இந்த தியாகத்தை அவர் செய்ததால்தான் அவருக்குத் 'தியாகேசன்' என்கிற திருநாமம் ஏற்பட்டது. வேதத்தில், தியாகம் செய்பவனே அழிவற்ற நிலையை அடைகிறான் என கூறப்பட்டுள்ளது. அதற்கேற்ப விஷத்தை சாப்பிட்ட ஈசருக்கு மரணம் கிடையாது. ஆனால் அமிர்தம் சாப்பிட்ட தேவர்கள் சதுர்யுக முடிவில் மாண்டு விடுகிறார்கள்.

வாசுகி: திருவேளைக்காரன் வகுப்பில்,

'வாளெயிற துற்றபகு வாய்தொறுநெ ருப்புமிழும்
வாசுகியெ டுத்துதறும் வாசிக் காரனும்'

என இதேகருத்தை கூறப்பட்டுள்ளதைக் காணலாம்.

விருத்தன் : வேல்வகுப்பில்,

'திருத்தணியில் உதித்தருளும் ஒருத்தன்மலை'

'விருத்தனென துளத்திலுறை கருத்தன்
மயில் நடத்துகுகன் வேலே'

எனும் அடிகளில் விருத்தன் எனவரும் சொற்றொடரைக் காணலாம்.

பழவினை: வேலாயுதக் கடவுள் அருணகிரியாரை ஆட் கொண்டு தொடர்ந்துவந்த பழையவினைகள் இனியும் தொட ராமல் அற்றுப் போகும்படி செய்து ஜீவாத்மா பரமாத்மாவே தான் என்கிற பரமரகசியத்தை உபதேசம்செய்து இன்பத்திற்கு துன்பத் திற்கு அப்பாற்பட்ட அநுபூதிநிலையில் நிலைபெற்றிருக்கச் செய்தார்.

இதை 'தேனுந்து' எனத்தொடங்கும் கைலைமலைத் திருப்புகழில்,

''தீதும் பிடித்தவினை யேதும் பொடித்துவிழ
சீவன் சிவச்சொரூப மெனதேறி
நானென்ப தற்றுயிரோ டூனென்ப தற்றுவெளி
நாதம் பரப்பிரம மொளிமீதே
ஞானஞ் சுரப்பமகி ழானந்த சித்தியோடெ
நாளுங் களிக்கபத மருள்வாயே''

என விவரிக்கிறார். இக்கருத்தை கந்தர் அலங்காரத்திலும்,

'இன்பம் துன்பம் கழித்து ஓடுவது எக்காலம்?'

என வேண்டியதை அருணகிரிநாதருக்கு முருகப்பெருமான் அருளினார் என்பதை பலஇடங்களில் காணலாம்.

சேவல் விருத்தம் - 8

மாண்ட் கண்டசாபு

வந்தார்ப் பரிக்குமம் மிண்டுவகை தண்டதரன்
வலியதூ துவர்ப்பில்லி பேய்
வஞ்சினாற் பேதுற மகாபூதம் அஞ்சிட
வாயினும் காலினாலும்
பந்தாடி யேமிதித் துக்கொட்டி வடவைசெம்
பவளமா கதிகாசமாப்
பசுஞ்சிறைத் தலமிசைத் தனியயிற் குமரனைப்
பார்த்தன் புறக்கூவுமாம்
முந்தா கமப்பலகை சங்காக மத்தர்தொழ
முன்பேறு முத்தி முருகன்
முதுகா னகத்தெயினர் பண்டோ டயிற்கணை
முனிந்தே தொடுத்த சிறுவன்
சிந்தா குலத்தையடர் கந்தா எனப்பரவு
சித்தர்க் கிரங்கறுமுகன்
செயவெற்றி வேள்புநிதன் நளினத்தன் முடிகுற்றி
சேவற் றிருத் துவசமே.

பதவுரை: வந்து-எதிரே வந்து, **ஆர்ப்பரிக்கும்**-பெரும் ஆரவாரத்துடன், **அம் மிண்டுவகை**-அந்த மதத்துடன் நெருங்கித் தொடரும் வகையில், **தண்டதரன் வலிய தூதுவர்**-தண்டாயுதம் ஏந்தியுள்ள யமனின் பலமிக்க தூதுவர்கள், **பில்லி பேய்**-பிறரால் ஏவப்படும் பிசாசுகள் (இவைகளை), **வஞ்சினால் பேதுற**-வலியசினத்துடன் அவைகளை புத்தி மயங்கும்படி செய்தும், **மகா பூதம் அஞ்சிட**-மிகப்பெரிய பூதங்களும் பயந்து நடுங்கும்படி, **வாயினும் காலினாலும்**-தன்னுடைய மூக்கி னாலும் காலினாலும், **பந்தாடியே மிதித்து**-கால்பந்து போல் அவைகளை உதைத்து மிதித்து, **கொட்டி**-அடித்து, **வடவை செம்பவளமா**-வடவாமுகாக்கினியை பவளமணி போல் கொத்தி எடுத்து, **அதிகாசமாய்**-பெரிய நகைபுரிந்து, **பசும் சிறை தல மிசை**-பசிய சிறைகளின்மேல் முதுகில் வீற்றிருக்கும், **தனி அயில் குமரனை**-ஒப்பற்ற வேலாயுதக் கடவுளை, **பார்த்து அன்பு உற கூவுமாம்**-நோக்கி அன்புடன் குரல்கொடுக்கும்;

(அது எது என வினாவினால்),

முந்து-முற்பட்டு விளங்கும், **ஆகமப் பலகை**-கல்வியின் அளவை நிர்ணயிக்கும் சங்கப்பலகையின் மேல், **சங்காக மத்தர் தொழ**-கல்வியில் வல்லவர்களான 49 புலவர்களும் வணங்க, **முன்பேறு முத்தி முருகன்**-முன்பு ஒருசமயம் ஏறி வீற்றிருந்து மோட்ச சாம்ராஜ்யத்திற்கு வழிகாட்டியான முருகன், **முது கானகத்து எயினர்**-பழமையான காடுகளில் வசிக்கும் வேடர்கள், **பண்டோடு**-முன்பு பின் வாங்கி, **அயிற்கணை முனிந்தே தொடுத்த சிறுவன்**-கூரிய வேலாயுதத்தை சினத்துடன் செலுத்திய முருகன், **சிந்தாகுலத்தை அடர் கந்தா**-மன வியாகுலத்தை நீக்கும் கந்தக்கடவுளே, **எனப் பரவு**-என்று துதிக்கும், **சித்தர்க்கு இரங்கு அறுமுகன்**-உள்ளத்தை உடைய பக்தர்க்கு இரங்கி கருணை புரியும் சண்முகப்பெருமான், **செய வெற்றி வேள்**-வெற்றியையே காணும் முருகன், **புனிதன்**-பரிசுத்த மூர்த்தி, **நளினத்தன் முடி குற்றி**-தாமரைமலரில் வசிக்கும் பிரம்மனை சிரசில்குட்டி தண்டித்த முருகப் பெருமானின், **சேவல் திருத் துவசமே**-கொடியில் விளங்கும் சேவலே தான்அது.

விளக்கவுரை: முந்துஆகம பலகை - சிவபெருமான் அருளிச்செய்த இறையனார் அகப்பொருளுக்கு 49 கடைச்சங்க

புலவர்கள் உரை எழுதி தம் தம் உரையே சிறந்தது என கலகம் விளைவிக்க, சோமசுந்தரப் பெருமான் கொடுத்த அசரீரி வாக்கின் படி மதுரையில் தனபதிச் செட்டியாரின் திருமகனாக அவதாரம் செய்த முருகப்பெருமானாகிய உருத்ரசன்மன் என்கிற பாலகனை அழைத்துவந்து அவனிடம் அபிப்ராயம் கேட்கப்படுகிறது. அவனும் சங்கப்பலகையில் வீற்றிருந்து ஜாடை மூலமாக நக்கீரர், பரணர், கபிலர் ஆகிய மூவரின் உரையே தலைசிறந்தது என உணர்த்துகிறார்.

இச்சம்பவத்தையே அருணகிரியார் இங்கு விவரிக்கின்றார்.

முதுகானகத்து எயினர்... சிறுவன் :முருகப்பெருமான் வள்ளியைக் கவர்ந்து கொண்டு சென்ற பொழுது வேடர்கள் அவரைப் பின்தொடர்ந்து வந்து அவருடன் போர் புரிந்தனர். தன்னுடைய கொடியில் வீற்றிருக்கும் சேவலின் முழக்கத்தால் வேடர்கள் மயக்கமுற்று செயலற்றதாக கந்தபுராணம் கூறும். அருணகிரியார் சற்று மாறுபட்ட கருத்தாக வேலாயுதத்தால் வேடர்களுடன் போரிட்டார் என்கிறார்.

இக்கருத்தை, 'நீலமுகிலான' எனத்தொடங்கும் கோடி (குழகர் கோயில்) திருப்புகழில்,

'சோலைபரண் மீதுநிழ லாகதினை காவல்புரி
தோகைகுற மாதினுட னுறவாடிச்
சோரனொன நாடிவரு வார்கள்வன வேடர்விழ
சோதிகதிர் வேலுருவு மயில்வீரா.' என்கிறார்.

பசுஞ்சிறை தலமிசை: பசிய சிறைகளின் மீதுள்ள முருகன் என்று கூறிஇருப்பது பொருத்தமாக இல்லை. இந்த அடிக்கு பாடபேதம் ஒன்று உண்டு. அதுவே மிகவும் பொருத்தமாக அமைகிறது.

'பசுஞ் சிறை தலம் அசைத்து அசைத்து அன்பரைப்
பார்த்து அன்புறக் கூவுமாம்'

❖ ❖ ❖

வேல் விருத்தம் – 9

துர்கா கண்டசாபு

தேடுதற் கரிதான நவமணி அழுத்தியிடு
செங்கரனை யமுதம் வாய்கொள்
செயமளித் தருளெனக் கெனஉவப் பொடுவந்து
சேவடி பிடித்ததெனவும்
நீடுமைக் கடல்சுட்ட தற்கடைந் தெழுகடலும்
நீயெமைக் காக்க எனவும்
நிபிடமுடி நெடியகிரி எந்தமைக் காவெனவும்
நிகழ்கின்ற துங்க நெடுவேல்
ஆடுமைக் கணபணக் கதிர்முடிப் புடையெயிற்
றடலெரிக் கொடிய உக்ர
அழல்விழிப் படுகொலைக் கடையகட் செவியினுக்
கரசினைத் தனியெடுத்தே
சாடுமைப் புயலெனப் பசுநிறச் சிகரியிற்
றாய்திமித் துடனடிக்குஞ்
சமரமயில் வாகனன் அமரர்தொழு நாயகன்
சண்முகன் தன்கை வேலே.

பதவுரை: ***தேடுதற்கு அரிதான நவமணி***-தேடினாலும் கிடைப்பதற்கு அரிதான, கோமேதகம், நீலம், பவளம், மாணிக்கம், மரகதம், முத்து, புஷ்பராகம், வைடூரியம், வைரம் என்கிற நவரத்தினங்களை, ***அழுத்தி இடு***-தனக்குள்ளே கொண்டது போல் பிரகாசிக்கும், ***செங்கரனை***-சிவந்த கிரணங்களை உடைய சூரியனை, ***அமுதம் வாய் கொள்***-மழை மேகம் மூடும்படியாக, ***செயம் அளித்து அருளென உவப்பொடு வந்து***-களிப்புடன் வந்து, எனக்கு வெற்றியைத் தர வேண்டும் என பிரார்த்தித்து, ***சேவடி பிடித்ததெனவும்***- வேலாயுதத்தின் திருவடிகளை பிடித்து எனவும், ***நீடு மை கடல் சுட்டதற்கு***-நெடிய இருண்ட சமுத் திரத்தை தனது சூட்டால் பொசுக்கினதற்காக, ***அடைந்த எழு கடலும்***-ஏழுகடல்களும் வேலாயுதத்தை சரண்அடைந்து, ***நீ எமைக் காக்க எனவும்***-நீ எங்களைக் காக்க வேண்டும் எனவும், ***நிபிட முடி நெடிய கிரி***-நெருங்கிய சிகரங்களை உடைய

உயர்ந்த மலைகள், **எந்தமைக் கா எனவும்**-எங்களைக் காத்து ரட்சிப்பாய் என்று சொல்லவும், **நிகழ்கின்ற துங்க நெடு வேல்** -சிறப்புடன் விளங்கும் பரிசுத்தமுடைய வேல்;

(அது யாருடையது என வினாவினால்),

ஆடு-ஆடுகின்றதும், **மை கணபண** - பசுமை பொருந்திய கூட்டமான, **கதிர்முடி**-ஒளிவீசும் உச்சியான முடிகளைக் கொண்டதும், **புடை எயிற்று**-வாயின் பக்கத்தில் உள்ள பற்களில், **அடல் எரி கொடிய உக்ர தழல் விழி**- வலிமையான கொடிய நெருப்பை வீசுவதும் நெருப்புக் கண்களைக் கொண்டதும், **படு கொலை**-பெரிய கொலைகளை, **கடைய கட்செவியினுக்கு அரசினை**-செய்யக்கூடியதுமான சர்ப்ப ராஜாவான ஆதிசேஷனை, **தனி எடுத்தே**-தனியாக எடுத்து, **சாடுமைப் புயலென**-வேகமுடன் வீசும் கரிய புயல் மேகம் போல், **பசுநிறச் சிகரியில்**-பசுமை நிறைந்த மலைஉச்சியில், **தாய்**-தாவி மிதித்து, **திமித்த உடன் நடிக்கும்**-நடன தாளங்களுடன் நடிப்பினைச் செய்யும், **சமர மயில் வாகனன்**-போரில் வல்லமை கொண்ட மயில்வாகனக் கடவுள், **அமரர் தொழும் நாயகன்**-தேவர்கள் வணங்கும் தலைவன் ஆகிய, **சண்முகன் தன் கைவேலே**-ஆறுமுகப்பெருமானின் திருக் கரத்தில் விளங்கும் வேலாயுதமே அது.

விளக்கவுரை: எப்பொழுதும் சூரியனைக் கண்டால் மேகங்கள் விலகி ஓடும். 'ஒருமுறையாவது சூரியனை மறைக்கும் வெற்றியை எங்களுக்குத் தரவேண்டும்' என்று மேகங்கள் வேலாயுதத்தினை வணங்குகின்றன. 'முன்பு சூரசம்காரத்தின் போது கடலை வற்றச்செய்தது போல் இனிஒருபொழுதும் எங்களை வற்றச் செய்யாதே' என்று சமுத்திரங்கள் வேலாயுதத்தை பிரார்த்தனை செய்கின்றன.

'முன்பு கிரௌஞ்சம் முதலிய மலைகளை அழித்தது போல் எங்களை இனிஎதுவும் செய்து விடாதே' என்று மலைகள் வேலாயுதத்தை வணங்குகின்றன.

இந்த விருத்தத்தில் ஒருநுணுக்கமான விஷயத்தைக் கவனிக்க வேண்டும். **'வேலும் மயிலும் துணை'** என்கிற மகா மந்திரத் திற்கு இணங்க பாடலின் முற்பகுதியில் வேலின் மகிமையைச்

சொல்லி, பின்பாதியில் மயிலின் வல்லமைகளைக் கூறுகிறார். மலைஉச்சியில் ஆதிசேஷனை தூக்கி எடுத்து மிதித்து நடனமாடு வதை யோகபரமான பொருளைக் காணலாம். சுழுமுனையாகிய மலையின் உச்சியில் குண்டலினி சர்ப்பத்தை அடக்கி மகா மாயையான விந்துவான மயில் பரமானந்த நடனம் ஆடுகிறது. இதையே **'மயிலாடு சுத்தவெளி'** என 'வாத பித்தமொடு' எனத்தொடங்கும் சிதம்பரத் திருப்புகழில் கூறுகிறார்.

மயில் விருத்தம் – 9

துர்கா கண்டசாபு

சிகரதம னியமேரு கிரிரசத கிரிநீல
கிரியெனவும் ஆயிரமுகத்
தெய்வநதி காளிந்தி யெனநீழல் இட்டுவெண்
திங்கள்சங் கெனவும்ப்ரபா
நிகரெனவும் எழுதரிய நேமியென உலகடைய
நின்றமா முகில்என்னவே
நெடியமுது ககனமுக டுறவீசி நிமிருமொரு
நீலக்கலாப மயிலாம்
அகருமரு மணம்வீசு தணிகைஅபி ராமவேள்
அடியவர்கள் மிடிய கலவே
அடல்வேல் கரத்தசைய ஆறிரு புயங்களில்
அலங்கற் குழாம்அசையவே
மகரகன கோமளக் குண்டலம் பலஅசைய
வல்லவுணர் மனம்அசைய மால்
வரைஅசைய உரகபிலம் அசையஎண் டிசைஅசைய
வையாளி யேறு மயிலே.

பதவுரை: தமனிய சிகர-பொன்நிறமான சிகரங்களை உடைய, ***மேருகிரி***-மேருமலை என்று சொல்லும் படியாகவும், ***ரசதகிரி***-வெள்ளிமலை என்னும் கைலாயமலை எனும்படியா கவும், ***நீலகிரி***-நீலோற்பல மலர்கள் வளரும் தணிகைமலை எனும்படியும் (இவ்வாறு பலநிறங்களைப் பெற்று), ***ஆயிரமுக தெய்வ நதி***-ஆயிரம் கிளை நதிகள் கொண்ட கங்கை, ***காளிந்தி***

என - யமுனை நதி போல, **நீழல் இட்டு**-ஒளி வீசும், **வெண் திங்கள் சங்கு எனவும்**-வெண்நிலா போன்ற சங்கின் நிறத்தைப் போலவும், **ப்ரபா நிகர் எனவும்**-தேவர்களின் சிலைகளை அலங்கரிக்கும் திருவாச்சி போலவும், **எழுதரிய நேமி என**-எழுதுவதற்கு அரிதான வட்ட வடிவமான சக்ரம் போலவும், **உலகடைய நின்ற மாமுகில் என்னவே**-உலகம் முழுவதும் பரந்திருக்கும் பெரிய மேகக் கூட்டம் போலவும், **நெடிய முது ககன முகடு**-நீண்ட பழமையான அண்டத்தின் உச்சிவரையிலும், **வீசி நிமிரும்**-தோகையை வீசி நிமிர்ந்திருக்கும், **ஒரு**-ஒப்பற்ற, **நீல கலாப மயிலாம்**-நீல நிறத்தோகையை கொண்ட மயில்,

(அது யாருடையது என வினாவினால்),

அகரு மரு மணம் வீசு-அகில் மருக்கொழுந்து மணம் வீசும், **தணிகை அபிராம வேள்**-திருத்தணிகையில் வீற்றிருக்கும் பேரழகன், **அடியவர்கள் மிடி அகலவே**-தன்னுடைய பக்தர் களின் வறுமை நீங்கும்படி, **அடல் வேல் கரத்தசைய**- திருக் கரத்தில் வலிமை வாய்ந்த வேலாயுதம் விளங்கி நிற்கவும், **ஆறிரு புயங்களில் அலங்கற் குழாம் அசையவே**-பன்னிரு திருத் தோள்களில் பலவித மலர்களில் தொடுக்கப்பட்ட மாலைகள் அசையவும், **மகர கன**-மீன் வடிவமுள்ள பொன்நிறமான, **கோமள குண்டலம் பல அசைய**-அழகிய காதில் குண்டலங்கள் அசையவும், **வல்அவுணர் மனம்அசைய**-கொடிய அரக்கர்களின் மனம் சஞ்சலப் படவும், **மால் வரை அசைய**-மயக்கம் தரும் கிரவுஞ்சகிரி நடுங்கவும், **உரகபிலம் அசைய**-பாதாளலோகம் கிடுகிடென நடுங்கவும், **எண் திசை அசைய**-எட்டுத்திக்குகளும் அசைவுறவும், **வையாளி ஏறும் மயிலே**-பவனிக்காகப் (சவாரிக்குப்) புறப்படும் மயிலே தான்அது.

விளக்கவுரை: மயிலின் வர்ணனை-'சிகர தமனிய' முருகப்பெருமானின் ஒப்பற்ற வாகனமாகிய மயில் பலவிதமான நிறங்களையும் வடிவங்களையும் கொண்டது. இவைகளுக்கு ஒப்புவமையாக உலகில் காணும் பற்பல பொருட்களின் பட்டியலை இங்கு காணலாம்.

'இலகு கனி' எனத் தொடங்கும் பழனித் திருப்புகழில்,

'பலநிறமி டைந்த விசிறைய மர்ந்த
பருமயில டைந்த குகவீரா' என்பார்.

ரசதகிரி: தமனியகிரி, ரசதகிரி, நீலகிரி எனும் வர்ணனையை 'அனகனெனத்' தொடங்கும் பொதுத் திருப்புகழில் கீழ்கண்ட வாறு வர்ணிக்கிறார்,

'இரணியச யிலம்ரசித சயிலமர கதசயில
மெனவிமலை யமுனை யென நிழல்வீசிக்
ககனமழை யுகைகடவு ளுடலமென முதியவிழி
கதுவியெழில் பொதியமிசை படர்கோல
கலபகக மயில்கடவு நிருதர்கஜ ரததுரக
கடகமுட னமர்பொருத பெருமாளே'

ஆயிரமுக தெய்வநதி காளிந்தி: 'அமலவாயு' எனத் தொடங்கும் திருப்புகழிலும் மயிலின் இவ்வகையான வர்ண னையைக் காணுகிறோம்.

'விமலை தோடி மீதோடு யமுனை போல வோரேழு
விபுத மேக மேபோல வுலகேழும்
விரிவு காணு மாமாயன் முடிய நீளு மாபோல
வெகுவி தாமு காகாய பதமோடிக்
கமல யோனி வீடான ககன கோள மீதோடு
கலப நீல மாயூர இளையோனே.'

வெண்திங்கள் சங்கெனவும் ப்ரபா நிகரெனவும்: 'குடருமல' எனத் தொடங்கும் பொதுத் திருப்புகழிலும் மயிலின் வர்ணனை கீழ்க்கண்டவாறு மிகவும் அழகாக கொடுக்கப் பட்டிருப்பதைக் காணலாம்.

'வடகனக சயிலமுத லியசயில மெனநெடிய
வடிவுகொளு நெடியவிறல் மருவாரை
வகிருமொரு திகிரியென மதிமுதிய பணிலமென
மகரசல நிதிமுழுகி விளையாடிக்
கடலுலகை யளவுசெய வளருமுகி லென அகில
ககனமுக டுறதிமிரு முழுநீலக்
கலபகக மயில்கடவி நிருதர்கஜ ரததுரக
கடகமுட னமர்பொருத பெருமாளே.'

அடியவர்கள் மிடி அகலவே: *தன்னை விரும்பித் தொழும் அடியவர்களின் வறுமை மற்ற துன்பங்களை ஒழிப்பதில் முருகப்பெருமானின் திருக்கைவேல் விதிர்ந்து விதிர்ந்து வளைவாகி வருவதை, வேல்வகுப்பில்,*

'சொலற்கரிய திருப்புகழை யுரைத்தவரை யடுத்தபகை யறுத்தெரிய
வுறுக்கியெழு மறத்தை நிலை காணும்
தலத்திலுள கணத்தொகுதி களிப்பினுண வழைப்பதென மலர்க்கமல
கரத்தின்முனை விதிர்க்கவளை வாகும்
துதிக்குமடி யவர்க்கொருவர் கெடுக்கஇடர் நினைக்கினவர்
குலத்தைமுத லறக்களையும் எனக்கோர் துணை யாகும்
சுரர்க்குமுனி வரர்க்குமக பதிக்கும்விதி தனக்குமரி
தனக்குநரர் தமக்குமுறும் இடுக்கண்வினை சாடும்' *என்பார்.*

மேற்கூறிய வரிகள் முருகப்பெருமானின் கொடைத் திறத்தையும் ஏராளமான மாலைகளை அணிந்திருப்பது ஜீவாத்மா வாகிய நாயகிகளை எப்போதும் மணம் புரியத் தயாராக இருக்கும் ஆன்மநாயகன் தானே என்பதையும், நிறைய பொன்னாபரணங் களை தரித்திருப்பது தனது ப்ரபுத்வத்தை அதாவது தானே, LORD OF EVERYTHING, *என்பதையும் காண்பிக்கிறது.*

சேவல் விருத்தம் - 9

துர்கா கண்டசாபு

உருவாய் எவர்க்குநினை வரிதாய் அனைத்துலகும்
உளதாய் உயிர்க் குயிரதாய்
உணர்வாய் விரிப்பரிய உரைதேர் பரப்பிரம
ஒளியாய் அருட்பொருளதாய்
வருமீச னைக்களப முகனா தரித்திசையை
வலமாய் மதிக்க வருமுன்
வளர்முருகனைக் கொண்டு தரணிவலம் வந்தான்முன்
வைகுமயி லைப்புகழுமாம்
குருமா மணித்திரள் கொழிக்கும் புனற்கடக்
குன்றுதோ றாடல்பழனம்
குலவுபழ முதிர்சோலை ஆவினன் குடிபரங்
குன்றிடம் திருவேரகம்

திரையாழி முத்தைத் தரங்கக்கை சிந்தித்
தெறித்திடுஞ் செந்தி னகர்வாழ
திடமுடைய அடியர்தொழு பழையவன் குலவுற்ற
சேவற் றிருத் துவசமே.

பதவுரை: **உருவாய்**-அடியவர்களுக்கு அனுக்ரகம் செய்யும் பொருட்டும் சில திருவிளையாடல்கள் செய்யும் பொருட்டும் நடராஜமூர்த்தி தட்சிணாமூர்த்தி முதலிய பலவடிவங்களை எடுத்தும், **எவர்க்கும் நினைவரிதாய்**-ஆனால் தன்னுடைய சொந்த நிலையான சொரூபநிலையில் எவராலும் நினைத்துக் கூட பார்க்க முடியாதவராயும், **அனைத்துலகும் உளதாய்**-சகல உலகங்களில் வாழும் ஜீவன்களின் சொரூபமாயும், **உயிருக்கு உயிரதாய்**-அந்தந்த உயிர்களை உள் நின்று இயக்கும் உயிர்ச் சக்தியாயும், **உணர்வாய்** - அந்த உயிர்களின் அந்தக்கரணமான அறிவுரூபமாயும், **விரிப்பரிய உரைத் தேர்**-விரித்துச் சொல் வதற்கு அரிதான வேதமொழிகளால் ஆராய்ந்து நிச்சயிக்கப் படும், **பரப்பிரம ஒளியாய்**-மேலான அனைத்தையும் கடந்த பிரம்மப் பொருளாய், **அருட் பொருளதாய்**-அருட் பெரும் ஜோதியாய், **வரும் ஈசனை**-நின்று விளங்கும் சிவபெருமானை, **களப முகன்**-யானைமுகக் கணபதி, **ஆதரித்து**-அன்பு பாராட்டி, **முன் திசையை வலமாய் மதிக்க வரு முன்**-முன்ஒரு காலத்தில் எட்டுத்திசையில் உள்ளோரும் மதிக்கும்படி அந்த ஈசனை வலம் வரும் சமயத்தில், **வளர் முருகனைக் கொண்டு** -விளங்கும் முருகனைத் தன்முதுகில் சுமந்துகொண்டு, **தரணி வலம் வந்தான்**-பூமியைச் சுற்றி வந்த (அந்த முருகனின்), **முன்**-முன்பாக, **வைகும் மயிலைப் புகழுமாம்**-வீற்றிருக்கும் மயிலைப் புகழ்ந்து பேசுமாம்;

(அது யாருடையது என வினாவினால்),

குரு-ஒளிவீசுகின்ற, **மா மணித்திரள்**-ரத்னக் குவியல் களை, **கொழிக்கும்**-வெள்ளத்தில் அடித்துக் கொண்டு வரும், **புனல்**-அருவிகளும், **கடம்**-காடுகளும் விளங்கும், **குன்று தோறாடல்**-பலமலைகள், **பழனம்**-பல வயல்கள், **குலவு பழமுதிர் சோலை**-பிரகாசம் பொருந்திய சோலைமலை, **ஆவினன்குடி**-திருவாவினன்குடி, **பரங்குன்றிலும்**-திருப்பரங்குன்றிலும், **திரு**

வேரகம்-சுவாமிமலை, **திரை ஆழி முத்தை**-கடல்அலைகள் முத்துக்களை, **தரங்கக்கை சிந்தி** - சமுத்திரம் தன்கைகளினால், **தெறித்திடும்**-வீசி எறிந்திடும், **செந்தில் நகர் வாழ்**- திருச் செந்தூரில் வாழும், **திடமுடைய அடியர் தொழு** - திடமான பக்தியைக் கொண்ட அடியார்கள் போற்றி வணங்குகின்ற, **பழையவன்**-பழம்பொருளாகிய முருகப்பெருமான், **குலவுற்ற**-கையில் தரித்திருக்கும், **சேவல் திருத்துவசமே**-கையில் தரித்துள்ள கொடியில் உள்ள சேவலே தான்அது.

விளக்கவுரை: பாடலின் முற்பகுதியில் ஈசனின் பரத்துவம் பேசப்படுகிறது. பக்தர்களுக்காக பலரூபங்களை ஈசன் எடுத் தாலும், ஸ்வயம்ஜோதியாய், பரத்துவமாய், அருட் பிரகாசமாய் இருப்பதை அருணகிரியார் உணர்வுபூர்வமாக விவரித்திருப் பதையே காண்கிறோம்.

'மனமே உனக்கு' எனத் தொடங்கும் தில்லைத் திருப்புகழில்,

'மயில் வாகனக் கடவுள் அவரே பரப்பிரம்மம்' - என்கிறார்.

ஆன்றோர் கருத்துக்கு இணங்க ஐந்துமுகச் சிவனும் ஆறுமுகச் சிவனும் இருவரல்ல ஒருவரே.

திரையாழி முத்தை: திருச்செந்தூரில் கடல்அலைகளால் முத்துக்கள் தெறிக்கப்படுவதை, கந்தர்அலங்காரத்தில் வரும் 107-வது பாடலான 'கொள்ளி தலையில்' எனத் தொடங்கும் பாடலில்,

'ஒருகோடி முத்தம் தெள்ளக் கொழிக்கும் செந்தில்'

என்பதைக் காணலாம்.

பழையவன்: இச்சொல்லுக்கு வேறு ஒருபொருளும் காணலாம். சிவபெருமான் ஆதியில் ஆறுமுகங்கள் தரித்திருந்தார் என்பதும் அதில் உள்ள - அதோமுகத்தை யோகிகள் மட்டுமே தரிசித்தனர் எனத்தெரிகிறது. ஆதலினால் ஈசனின் ஆறுமுக அவதாரத்தில் பாமரரும் தரிசிக்கும்வண்ணம் அருள்புரிகிறார் என்கிற இக்கருத்தை - 'இருவர் மயலோ' - எனத்தொடங்கும் திருவண்ணாமலைத் திருப்புகழில்,

'பழைய வடிவாகிய வேலா' என்கிறார்.

'தரணி வலம்வந்தான் முன்வைகு மயிலை புகழும்' முருகனின் மயில் அகில சராசரங்களையும் ஒருநொடியில் சுற்றிவந்த சமயம் கணபதியான யானை பிளிறிற்று என்பதை, 'வதைபழக' எனத் தொடங்கும் திருப்புகழில்,

'பதயுகள மலர்தொழுது பழுதில் பொரி அவல்துவரை
பயறுபெரு வயிறு நிறை யவிடாப்
பழமுமினி துதவிமுனி பகரவட சிகரிமிசை
பரியதனி யெயிறுகொடு குருநாடர்
கதைமுழுது மெழுதுமொரு களிறு பிளி றிடநெடிய
கடலுலகு நொடியில்வரு மதிவேகக்
கலபக மயில்கடவி நிருதர்கஜ ரததுரக
கடகமுட னமர்பொருத பெருமாளே'

எனக் கூறுவார் நமது அருணகிரியார்.

❖ ❖ ❖

வேல் விருத்தம் - 10

மத்யமாவதி கண்டசாபு

வலாரியல லாகுலமி லாதகல வேகரிய
மாலறியு நாலு மறைநூல்
வலானலை விலானசி விலான்மலை விலானிவர்
மநோலய உலாசம் உறவே
உலாவரு கலோலம கராலய சலங்களும்
உலோகநிலை நீர்நிலையிலா
வொலாவொலி நிசாசரர் உலோகம தெலாமழல்
உலாவிய நிலாவு கொலைவேல்
சிலாவட கலாவிநொத வாசில்மு காவிலொச
னாசின சிலாத ணிவிலா
சிலாமலர் எலாமதிய மோதிமதி சேலொழிய
சேவக சராப முகிலாம்
விலாசகலி யாணகலை சேரபசு மேலைமுலை
மேவிய விலாச அகலன்
விலாழியி னிலாழியகல் வானில்அனல் ஆரவிடு
வேழம்இளை ஞன்கை வேலே.

பதவுரை: வலாரி-வலாசுரனின் பகைவனாகிய இந்திரனின், **அலல்**-துன்பங்களும், **ஆகுலம்**-மன வருத்தங்களும், **இலாது அகலவே**-நீங்கும் படியும், **கரியமால்**-மேக வண்ணனாகிய திருமாலும், **அறியும் நாலுமறைநூல்**- அறியப்பட்ட நான்குவேத சாஸ்திரங்களையும், **வலான்**-ஓத வல்ல பிரம்மனும், **அலைவு இலான்**-அலைச்சல் இல்லாதவனும், **நசிவு இலான்**-அழிவு இல்லாதவனும், **மலை விலான்**-மேருமலையை வில்லாக வளைத்தவனும் (ஆகிய சிவபெருமான்), **இவர்**-இவர்களின், **மநோலயம் உலாசம் உறவே**-மனம் அமைதிஅடைந்து மகிழ்ச்சி அடையவும், **உலா வரு**-புரண்டு வரும், **கலோல**-அலைகள் நிறைந்த, **மகர ஆலய**-மகர மீன்களுக்கு இருப்பிட மான கடலின், **உலோக நிலை நீர்நிலையிலா**- இவ்வுலகத்தில் உள்ள உயிர்களும் நீரில் வாழும் உயிரினங்களும் அழிந்து போகும்படி, **ஒலா ஒலி**-விகாரமான பேரொலி எழுப்பி (போரிட்ட), **நிசாசரர்**-அசுரர்களின், **உலோகமதெலாம்**-வாழும் உலகங்களிலெல்லாம், **அழல்**-நெருப்பு, **உலாவிய நிலாவு**-பரவும்படி உலாவிவந்த, **கொலை வேல்**-கொடிய கொலை களைச் செய்த வேல்;

(அது யாருடையது என வினாவினால்),

சிலா வட (வட சிலா) **கலா விநோதவா**-வடக்கே உள்ள கந்தமாதனகிரியில் சகலகலா வல்லவனாகியும், **சிலா**-மலைகளை தனது இருப்பிடமாகக் கொண்டவனும், **வட கலா விநொதவா**-வடமொழியாகிய சமஸ்கிருதத்தில் அதிக பிரிய முடையவன், **சிலிமுகா**-வண்டு ரூபம் எடுத்தவன், **விலோசனா**-விஷேசமான (கருணை நிறைந்த) **சின சிலா தணி**-சினம் தணிந்து தணிகாசலத்தில் வீற்றிருப்பவரும், **வலா**- வில்லேந்திய வேலனும், **மலர் எலாம்**-சுனையிலுள்ள மலர்கள் எல்லாம், **மதிய மோதி**-சந்திரன்மேல் உரசி, **மதி சேல் ஒழிய**-சந்திரனில் உள்ள சேல்மீன்கள் போன்ற களங்கம் அழியும்படி **சேவக**-வீரத்தைக் காட்டிய போர்வீரனும், **சிலா**-வள்ளி மலையில், **சராப முகிலாம்**-சரபபட்சி போன்று மேக நிறமுடைய திருமால், **விலாச கலியாண**-அகன்ற மங்களகரமான, **கலைசேர**- கலை மான் உருவெடுத்த மஹா லட்சுமியைச் சேர, **மேலை**-முன்ஒரு காலத்தில், **பசு**-அப்போது தோன்றிய உயிராகிய வள்ளிப்

பிராட்டியின், **முலை மேவிய விலாசஅகலன்**-தனபாரங்களைத் தழுவிய அகன்ற திருமார்புகளை உடையவனும், **விலாழி இனில்**-தனது துதிக்கையினால் நீரினால், **ஆழி**-சமுத்திரத்திலும், **அகல் வானில்**-அகன்ற ஆகாயத்திலும், **அனல்**-வெப்பத்தை, **ஆரவிடு**-தணியும்படி பொழிந்த, **வேழம்**-யானைமுக கணபதியின், **இளைஞன் கைவேலே**-இளையோனாகிய முருகப்பெருமானின் கையில் உள்ள வேலாயுதமே அது.

விளக்கவுரை: இந்திரன், பிரம்மா, திருமால் ஆகியவர் களுக்கு சூரனால் நேர்ந்த துன்பம் நீங்கி களிப்புற்றார்கள். அதை சிவபெருமானுக்குச் சொல்வது பொருத்தமாகாது. தான் கொடுத்த வரங்களை வைத்துக் கொண்டு தேவர்களை எல்லாம் யுக காலமாக வாட்டி வதைத்ததைப் பார்த்து மனவருத்தம் கொண்ட சிவபெருமான், அந்த துயரம் சூரனின் அழிவால் உல்லாசம் அடைந்தது.

பிரமனுக்கு பிரணவத்தின் பொருள் தெரியாததினால், அவன் சிறையில் முருகப்பெருமானால் அடைக்கப்பட்டான். உனக்கு மட்டும் பிரணவத்தின்பொருள் எப்படித் தெரியும்? என்று கேட்டதற்கு,-'முன்பு நீங்கள் அம்மாவுக்கு உபதேசம் செய்த போது அவளின் கூந்தலில் வண்டாக இருந்து கேட்டேன்' - என கூறுகிறார். (சிலி முகம் - வண்டு)

'கொந்தார் பைங்குழலில் உறைவண்டே'- என குமரகுருபரர் முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழில் முருகனை வண்டே என விளிப்பது இங்குநினைவு கூறத்தக்கது.

சூரியனின் வெப்பத்தால் உயிர்கள் அவதி அடையாதபடி தனது துதிக்கை நீரை கடலிலும் ஆகாயத்திலும் வீசி வெப்பத்தைத் தணிக்கிறார் என்பதை - 'விலாழி இனில் ஆழி அகல வானில் ஆர விடு வேழம்' என்கிறார்.

வேல்விருத்தத்திற்கு எனத் தனியாக விநாயகர்துதி இல்லை என்றாலும், இதன் முதல்பாடலான 'மகரம்' எனத் தொடங்கும் பாடலின் பின்பாதியிலும், கடைசிபாடலான இதிலும் **'வேழம் இளைஞனே'** என விநாயகரை அருணகிரியார் நினைவு கூறுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

விநாயகர் ஓங்கார வடிவம். வேலாயுதம் சக்தியின் சொரூபம். ஆதலால் ஆரம்பத்திலும் முடிவிலும் ஓங்காரமும் நடுவில் சக்தியும் (சக்திவேல்) வருவதால், ஓம் சக்தி ஓம் எனும் மஹா மந்திரம் இருப்பதை உணரலாம்.

மயில் விருத்தம் - 10

மத்யமாவதி கண்டசாபு

நிராசத விராசத வரோதய பராபர
னிராகுல னிராமய பிரா
னிலாதெழு தலாலற மிலானெறி யிலானெறி
நிலாவிய உலாசஇ தயன்
குராமலி விராவுமிழ் பராரை யமராநிழல்
குராநிழல் பராவு தணிகைக்
குலாசல சராசரம் எலாமினி துலாவிய
குலாவிய கலாப மயிலாம்
புராரிகும ராகுரு பராஎனும் வரோதய
புராதன முராரி மருகன்
புலோமசை சலாமிடு பலாசன வலாரிபுக
லாகும்அயி லாயுதனெடுந்
தராதல கிராதர்கள் குலாதவபி ராமவல
சாதனன் விநோத சமரன்
தடாரி விகடாசுரன் குடாரித படாதிகழ்
ஷடாநநன் நடாவு மயிலே.

பதவுரை: ***நிராசத****-நி+ராஜத, மூன்றுகுணங்களில் ஒன்றான ராஜத குணம் அற்றவன்,* ***விராசத****-வி + ராஜத, ராஜத குணத்திற்கு எதிரான சாத்வீக குணமுடையவன்,* ***வரோதய****-அடியவர்களுக்கு வேண்டிய வரங்களைத் தருபவன்,- பரமேஸ்வரன்,* ***நிராகுலன்****-மனவருத்தம் இல்லாதவன்,* ***நிராமயன்****- (நிர் + அமயம் (நோய்), நோய் இல்லாதவன்,* ***பிரான்****-தலைவன்,* ***அறமிலான் நெறியிலான் நில்லாது எழுதலால்****-தர்ம நெறி அற்றவர்களும் ஒழுக்கநெறி அற்றவர்களும் தன்னிடம் சேராததினால்,* ***நெறி நிலாவிய உலாச இதயன்****-நன்நெறி பூண்டு ஒழுகி மனக்*

களிப்புடன் எப்போதும் இருப்பவன், **குராமலி**- குராமரங்களில் தோன்றி, **விராவு உமிழ்**-கலந்து வெளிப்பட்டு விளங்கும், **பராரை**-பருத்த அடிமரத்தின் கீழ், **அமரா** - (திருவிடைக்கழியில்) சானித்தியத்துடன் விளங்குபவன், **நிழல்**- ஒளிவீசும், **குரா நிழல்** -குராமரங்களின் நிழலில், **பராவு**-படர்ந்திருக்கும், **தணிகை குலாசல**-திருத்தணிகை முதலிய சிரேஷ்டமான மலை முதல், **சராசரம்**-பூவுலகெங்கும், **இனிது உலாவிய**-களிப்புடன் திரிந்து, **குலாவிய கலாப மயிலாம்**-குலாவுகின்ற தோகை மயில்;

(அது யாருடையது என வினாவினால்),

புராரி குமரா-திரிபுரமெரித்த சிவபெருமானின் மைந்தா, **குருபரா**-சிவகுருமூர்த்தியே, **எனும்**-என்று துதித்து வணங்கும், **வரோதய**-அடியவர்களுக்கு வேண்டிய வரங்களை நல்குபவன், **புராதன முராரி மருகன்**- பழம்பெரும் கடவுளானவரும், முரன் என்ற அசுரனைக் கொன்றவரும் ஆன திருமாலின் மருமகன், **பலாசன புலோமசை**-(பழங்களையே உண்டு வாழும்) கிளி போன்ற இந்திராணியால், **சலாமிடு**-வணங்கப்படுகின்றவன், **வலாரி புகலாகும் அயிலாயுதன்**-இந்திரனுக்கு சரணாகதி அளித்த வேலாயுதக்கடவுள், **நெடும் தரா தல**-நீண்ட பூமியின் கண் உள்ள மலைகளில் வாழும், **கிராதர்கள் குல ஆதவ**-வேடுவர்களின் குலத்திற்கு சூரியனைப் போல, **அபிராம** -மாப்பிள்ளையாகிய பேரழகன், **வல சாதனன்**-வலிமையை சாதித்தவன், **விநோத சமரன்**-போர்புரிவதை விளையாட்டாகச் செய்பவன், **தடாரி**-மலையான கிரவுஞ்சத்தை அழித்தவன், **விகடாசுரன்**-தொந்தரவு செய்து வந்த சூரபத்மாவை, **குடாரி**-கோடாரியைப் போல மார்பை இரு கூறாக பிளந்தவன், **இதபடா திகழ் ஷடாநநன்**-நன்மையும் மகிழ்ச்சியையும் அளிக்கும் ஆறுமுகப்பெருமான், **நடாவு மயிலே** -செலுத்துகின்ற மயிலே தான்அது.

விளக்கவுரை: நிராமய: - இறைவன் தன்னுடைய சொந்த நிலையில் குணமற்றவனாக இருந்தாலும் அடியார்களுக்காக அர்ச்சாவதாரம் எடுக்கும் பொழுது எண்குணபஞ்சரனாக பல அருட்குணங்களை ஏற்றுக்கொள்கிறான்.

புலோமசை: முருகப்பெருமானின் அவதார நோக்கங்கள் பலவற்றுள் முக்கியமானதொன்று இந்திராணியின் திருமாங்கல்

யத்தை காத்து இந்திரலோகத்தை வாழ்விப்பது இச்செய்தியை முதல் மயில்விருத்தத்தில்,

'இந்த்ராணி மங்கில்ய தந்து ரக்ஷாபரண'

என அழகுபட முருகனை விளிக்கிறார்.

கிராதர்குல ஆதவ: இப்பூவுலகில் பற்பல குலங்கள் இருப்பினும் வேடர்குலத்திற்கு விஷேசமாக அநுக்ரகம் செய்ததின் காரணம், மற்ற குல மக்கள் பலதெய்வங்களை வழிபாடு செய்வார்கள், வேடர்குல மக்கள் முருகனைத் தவிர வேறு தெய்வத்தை கனவிலும்கூட வணங்க மாட்டார்கள். இக்கருத்தை 'வஞ்சக லோப' எனத் தொடங்கும் குன்றுதோறாடல் திருப்புகழில் இப்படியாகக் கூறுவார்.

'குஞ்சரம் யாளி மேவு பைம்புன மீது லாவு
குன்றவர்சாதி கூடி வெறியாடி
கும்பிட நாடி வாழ்வு தந்தவ ரோடு வீறு
குன்றுதொ றாடல் மேவு பெருமாளே.'

வேடுவர்கள் தாமச வழிபாடாகிய வெறியாடல் செய்து முருகனை வணங்குபவர்களாக இருந்தாலும், அவர்களுடைய தீவிரமான பக்திக்கு இரங்கி, அவர்களின் குலக்கொழுந்தான வள்ளிப் பிராட்டியாரை காந்தர்வமணம் புரிந்து அவர்களுடனே சேர்ந்து வாழ்பவன் முருகப்பெருமான்.

சேவல் விருத்தம் - 10

மத்யமாவதி கண்டசாபு

மகரசல நிதிசுவற உரகபதி முடிபதற
மலைகள்கிடு கிடுகிடெனவே
மகுடகுட வடசிகரி முகடுபட படபடென
மதகரிகள் உயிர்சிதறவே
ககனமுதல் அண்டங்கள் கண்டதுண் டப்படக்
கர்ச்சித் திரைத்தலறியே
காரையா ழிந்நகரர் மாரைப் பிளந்துசிற
கைக்கொட்டி நின்றாடுமாம்

சுகவிமலை அமலைபரை இமையவரை தருகுமரி
துடியிடைய னகையசலையாள்
சுதன் முருகன் மதுரமொழி உழைவநிதை
இபவநிதை துணைவனென திதயநிலையோன்
திகுடதிகு டதிதிகுட தகுடதித குடதிகுட
செக்கண செகக்கண எனத்
திருநடனம் இடுமயிலில் வருகுமர குருபரன்
சேவற் றிருத் துவசமே.

பதவுரை: மகர சலநிதி சுவற-மகர மீன்கள் வாழும் கடல் வற்றிப் போகவும், ***உரகபதி முடி பதற***-சர்ப்பராஜனான ஆதிசேஷனின் ஆயிரம் முடிகளும் பதறவும், ***மலைகள் கிடுகிடு கிடெனவே***-மலைகள் கிடுகிடுஎன நடுங்கவும், ***மகுட***-சிகரங் களைக் கொண்ட, ***குட***-குடம் போன்ற திரட்சி உடைய, ***வட சிகரி***-மேருமலையின், ***முகடு படபடபடென***-உச்சிகள் பட படெென நடுங்கவும், ***மதகரிகள் உயிர் சிதறவே***-மத யானை களின் உயிர் பயத்தால் பிரியவும், ***ககன முதல்***-தேவலோகம் முதல், ***அண்டங்கள் கண்ட துண்டப் பட***-எல்லா உலகங்களும் துண்டுதுண்டாக சிதறவும், ***கர்ச்சித்து இரைத்து அலறியே***-பெருத்த ஆரவாரம் செய்து, ***காரையாழிந் நகரர்***-சமுத்திரக் கரையில் உள்ள காரையாழி நகரில் வாழ்ந்த அசுரர்களின், ***மாரைப் பிளந்து சிறகைக் கொட்டி நின்று ஆடுமாம்***-மார்பைப் பிளந்து தன்னுடைய சிறகுகளை அடித்துக் கொண்டு களிப்புடன் நடனம் ஆடுமாம்,

(அது யாருடையது என வினாவினால்),

சுகவிமலை-சுக சொரூபியானவள், ***அமலை***-மலமற்றவள், ***பரை***-பராசக்தி, ***இமயவரை தரு குமரி***-இமயராஜன் தந்தருளிய மடந்தை, ***துடி இடை***-உடுக்கை போன்ற இடுப்பை உடையவள், ***அனகை***-பயமற்றவள், ***அசலை***-மலை போன்று சலனமில்லாமல் இருப்பவள், ***சுதன்***-இப்பேர்ப்பட்ட பார்வதிதேவி தந்த திருக் குமாரன், ***முருகன்***-ஞானமும் அறிவும் இளமையும் உடையவன், ***மதுரமொழி உழை வநிதை***-தேன் போன்ற இனியமொழியைப் பகரும் மான்மகளான வள்ளிப் பிராட்டி, ***இப வநிதை***-ஐராவதம் வளர்த்த தேவசேனை, ***துணைவன்***-இவர்களின் துணைவன்,

எனது இதய நிலையோன்-எனதுஉள்ளத்தில் என்றும் நிலைத்து இருப்பவன், **திகுட-சகக் கண**-எனும் ஒலியுடன், **திரு நடனம் இடு மயிலில்**-நடனமிடும் மயில் வாகனத்தில், **வரு குமரகுருபரன்**-பவனி வரும் குமரகுரு மூர்த்தியின், **சேவல் திருத் துவசமே**-கொடியில் உள்ள சேவலே தான்அது.

விளக்கவுரை: சேவலுக்கு, மலைகள் முதல் பிரபஞ்சத்தில் வலுவுள்ள அனைத்தையும் தகர்க்கும் ஆற்றல் உண்டு என்பதை, கந்தர்அலங்காரத்தில் வரும் 12ஆவது பாடலில்,

'சேவல் சிறகடிக் கொள்ளச் சலதிகிழிந்து
உடைபட்ட தண்ட கடாக முதிர்ந்த துடுபடலம்
இடைப்பட்ட குன்றமு மமேரு வெற்பு மிடிபட்டவே' என்கிறார்.

காரையாழிந் நகரர்: இலங்கையில் யாழ்ப்பாணத்திற்கு அருகில்உள்ள காரை என்கிற நகரில் பழம்காலத்தில் இராவண னுடைய வம்சத்தினரான அரக்க குலத்தினர் வாழ்ந்து வந்தனர். அவர்கள் அனைவரையும் முருகனுடைய சேவல் அழித்து விட்டது என்பது இதன்கருத்து. இந்த வரலாறு எந்தபுராணத்தில் உள்ளது என்று தெரியவில்லை.

சேவல் விருத்தம் - 11

மத்யமாவதி கண்டசாபு

பூவிலயன் வாசவன் முராரிமுநி வோரமர்
பூசனைசெய் வோர்மகிழவே
பூதரமும் எழுகடலும் ஆடஅமு தூறஅநு
போகபதி னாலுலகமும்
தாவுபுகழ் மீறிட நிசாசரர்கள் மாளவரு
தானதவ நூல்தழையவே
தாள்வலிய தானபல பேய்கள் அஞ்சச் சிறகு
கொட்டிக் குரற்பயிலுமாம்
காவுகனி வாழைபுளி மாவொடுயர் தாழைகமு
காடவிகள் பரவுநடனக்
காரணமெய்ஞ் ஞானபரி சீரணவ ராசனக்
கனகமயில் வாகனனடற்

சேவகன் இராசத இலக்கண உமைக்கொரு
சிகாமணி சரோருகமுகச்
சீதள குமாரகிரு பாகர மனோகரன்
சேவற் றிருத் துவசமே.

பதவுரை : பூவில் அயன்-தாமரைப்பூவில் வாசம் செய்யும் பிரம்மன், ***வாசவன்***-இந்திரன், ***முராரி***-திருமால், ***முனிவோர்***-தவம்செய்யும் முனிவோர்கள், ***அமரர்***-தேவர்கள், ***பூசனை செய்வோர்***-நித்தம் இறைவனை வழிபாடுகள் புரியும் அடிய வர்கள், ***மகிழவே***- இவர்கள் அனைவரும் மகிழ்ச்சி அடையும் பொருட்டு, ***பூதரமும் எழுகடலும் ஆட***-மலைகளும் ஏழுகடல் களும் ஆட்டம் காணவும், ***அமுதுற***-பூவுலகில்இன்பம் நிறைந்து விளங்கவும், ***அநுபோக பதினாலு உலகமும்***-எல்லா வித அநு போகங்களைத் தரும் பதினாலு உலகங்களிலும், ***தாவு புகழ் மீறிட***-பரந்து கிடக்கும் தனது புகழ் முதன்மையாக விளங்கி நிற்கவும், ***நிசாசரர் மாள***-அரக்கர்கள் மடிந்து அழியவும், ***வரு தான தவநூல் தழையவே***-விளங்கும் ஒழுக்க நெறிகளை கூறும் தர்மஇலக்கிய நூல்கள் தழைத்து ஓங்கவும், ***தாள் வலியதான பலபேய்கள் அஞ்ச***-கெட்ட வலிமை பொருந்திய செயல்களைச் செய்யும் பலபேய்கள் பயந்து ஓடவும், ***சிறகு கொட்டிக் குரல் பயிலுமாம்***-தனது சிறகுகளைத் தட்டி அடித்துக் கொண்டு பெரிய கூக்குரல் எழுப்பும்;

(அது எது என வினாவினால்),

காவு-சோலைகள், ***கனி வாழை***-நல்ல பழங்களைத் தரும் வாழைமரங்கள், ***புளி***-புளியமரம், ***மாவொடு***-மா மரம் இவை களுடன், ***உயர் தாழை***-வானளாவ உயர்ந்த தென்னை மரங்கள், ***கமுகு***-பாக்குமரங்கள் (இவைகளுடன் கூடிய), ***அடவிகள்***-அடர்ந்த காடுகளில், ***பரவு நடன***-பரந்த நடன வகைகளைக் காட்டும், ***காரண மெய்ஞான பரி***-முருகன் ஆட் கொண்ட காரணத்தால் மெய்ஞானத்தை அடைந்த வாகனமானதும், ***சீர் அணவு***-சிறப்பு மிக்கதும், ***அர அசன***-பாம்பை உணவாகக் கொள்வதும் ஆன, ***கனகமயில் வாகனன்***-வலிமை மிக்க மாவீரன், ***இரசத இலக்கண***-இராசத இலட்சணம் பொருந்திய, ***உமைக்கு ஒரு சிகாமணி***-பார்வதிதேவிக்கு ஒப்பற்ற சிரோ

ரத்னம், **சரோருகமுக**-தாமரைபோன்ற முகஅழகு கொண்டவன், **சீதள**-தண்மையான குணாளன், **குமார**-என்றும் இளையவன், **கிருபாகர**-கருணைக்கடல், **மனோகரன்**-அடியார்கள் மனதில் அனுதினமும் மகிழ்ச்சியைத் தருபவன் (ஆகிய கந்தக்கடவுளின்) **சேவல் திருத் துவசமே**-கொடியில் உள்ள சேவலே தான்அது.

விளக்கவுரை: காரணமெய்ஞானபரி: முருகப்பெருமான் சூரபத்மனுக்கு போர்க்களத்தில் தனது விஸ்வரூப தரிசனத்தைக் காட்டினதாலும் முன்ஜென்மத்தில் முருகனை அடைய வேண்டும் என கடும்தவம் செய்ததாலும் மயிலாக மாறி மெய்ஞானம் பெற்றான் என்பதையே காரண மெய்ஞானம் என கூறுகிறார்.

''உலகு ஏழும் அதிர அரற்று கோழியும் மறவேனே''

(கதியை - பழநித் திருப்புகழ்)

❖ ❖ ❖

மயில் விருத்தம் - 11

மத்யமாவதி

பல சுருதி

எந்நாளும் ஒருசுனையில் இந்த்ரநீ லப்போ
திலங்கிய திருத் தணிகைவாழ்
எம்பிரான் இமையவர்கள் தம்பிரான் ஏறும்ஒரு
நம்பிரா னான மயிலைப்
பன்னாளும் அடிபரவும் அருணகிரி நாதன்
பகர்ந்தஅதி மதுர சித்ரப்
பாடல்தரு மாசறு வேல்விருத்தம் ஒருபத்தும்
படிப்பவர்கள் ஆதி மறைநூல்
மன்னான் முகம்பெறுவர் அன்னம் ஏறப்பெறுவர்
வாணிதழு வப்பெ றுவரால்
மகரால யம்பெறுவர் உவணம் ஏறப்பெறுவர்
வாரிச மடந்தை யுடன்வாழ்
அந்நாயகம் பெறுவர் அயிராவ தம்பெறுவர்
அமுதா சனம்பெ றுவர்மேல்
ஆயிரம் பிறைதொழுவர் சீர்பெறுவர் பேர்பெறுவர்
அழியா வரம்பெ றுவரே.

பதவுரை: எந்நாளும்-ஒருநாள்கூட தவறாமல் எப்பொழுதும், **ஒரு**-ஒப்பற்ற, **சுனையில்**-நீர் மடுவில், **இந்திர நீலப்போது இலங்கிய**-இந்திரநீலம் எனப்படும் நீலோற்பல மலர் விளங்கு கின்ற, **திருத்தணிகை வாழ்**-தணிகாசலத்தில் வாழும், **எம்பிரான்**-எமது தெய்வமாகிய கந்தக்கடவுள், **இமையவரின் தம்பிரான்**-தேவர்களின் தலைவன், **ஏறும்**-ஊர்தியாக ஏறும், **ஒரு நம்பிரான் ஆன மயிலை**-ஒப்புவமை இல்லாத நாம் வழிபடும் தெய்வமான மயில்வாகனத்தை, **பன்னாளும் அடி பரவும்**-பல நாட்களாக துதித்து வணங்கும், **அருணகிரிநாதன்**-அருணகிரிநாதனாகிய நான், **பகர்ந்த**-இயற்றிய, **அதிமதுர**-இனிமை நிறைந்ததும், **சித்ர**-விசித்ரமான அழகுகள் நிறைந்ததும், **பாடல் தரு**-இசைக்குரிய பாடலாகச் சொன்ன, **மாசறு**-எவ்வித குற்றமும் இல்லாத, **விருத்தம் ஒரு பத்தும்**-இந்த பத்து விருத்தப் பாக்களையும், **படிப்பவர்கள்**-தினமும் பாராயணமாக ஓதி உணர்ந்தவர்கள்,

ஆதி மறைநூல்-மிகவும் பழமையான வேதங்கள், **மன்**-நிலைபெற்று விளங்கும், **நான்முகம் பெறுவர்**-பிரம தேவனின் சொரூபத்தை அடைவார்கள், **அன்னம் ஏறப் பெறுவர்**-பிரம்மனின் அன்ன வாகனத்தில் ஏறும் பாக்யத்தைப் பெறு வார்கள், **வாணி தழுவப் பெறுவர்**-கலைவாணியாகிய சரஸ்வதி தேவியின் திருவருளை பெற்று அவருடன் கூடி வாழ்வார்கள், **மகராலயம் பெறுவர்**-சுறா மீன்கள் வாழும் சமுத்திரத்தின் தலைவனாகிய வருணபதவியை அடைவார்கள், **உவணம் ஏறப் பெறுவர்**- கருடவாகனத்தில் ஏறுவார்கள், **வாரிசமடந்தையுடன் வாழ் அந்நாயகம் பெறுவர்**-செந்தாமரையில் வீற்றிருக்கும் இலக்குமியுடன் வாழும் சிறந்த தலைமைப்பதவியை பெறு வார்கள், **அயிராவதம் பெறுவர்**-தேவேந்திரனுடன் அயிரா வதத்தின்மேல் பவனி வருவார்கள், **அமுதாசனம் பெறுவர்**-தேவர்கள்போல் அமுதத்தை அருந்தி மகிழ்வர், **மேல் ஆயிரம் பிறை தொழுவர்**-அதற்கு மேலும் ஆயிரம் பிறை கண்டு சதாபிஷேகம் செய்யப் பெறுவார்கள், **சீர் பெறுவர் பேர் பெறுவர்**-மிகச்சிறந்த பெருமையும் புகழும் அடைவார்கள், **அழியா வரம் பெறுவர்**-முடிவில் அழிவில்லாத முக்தி சாம்ராஜ் யத்தை அடைவார்கள்.

விளக்கவுரை: எந்நாளும் ஒரு சுனையில்: - இறைவன் கோயில் கொண்டுள்ள திருத்தலங்களின் பெயர்களை ஓதுவது புண்ணியம் பயக்கும். சைவசமயத்தவர்களுக்கு தில்லையைப் போல் முருகனின் அடியார்களுக்கு ஆறுபடைச் சேத்திரங்கள் நினைந்து ஓதுவதற்கு தகுந்தவைகளாகும். இத்தலங்களை திருப்புகழ் முதலான ஒன்பது படைப்புகளிலும் விஷேசமாகக் கூறுவார் அருணகிரிநாதர். உதாரணமாக,

*'**திருச் செந்திலை** உரைத்துய்ந்திட அறியாரே'*
'படிக்கின்றிலை பழநித் திரு நாமம்'
*'உனது **குவளைச் சிகரி** பகரப் பெறுவோனோ'*

(சொரியுமு கிலை)

என்று குறிப்பிடுவார்.

திருத்தணிக்கு பலசிறப்புகள் இருந்தாலும் அதற்கு பெரிய பேற்றினைச் சேர்ப்பது நீலோற்பன சுனையாகும். இந்திரன் தன்நன்றியைத் தெரிவிப்பதற்காக ஐராவத யானையையும் ஒரு பெரிய சந்தனக்கல்லையும் திருத்தணிக்கு நல்கி ஒருதடாகம் நிர்மாணித்து அதில் தேவலோகத்தில் இருந்து தான் கொண்டு வந்த நீலோற்பன செடியையும் வைத்தான். அச்செடி காலை, மதியம், மாலை இம்மூன்று வேளைகளிலும் ஒவ்வொரு பூமட்டும் பூக்கும்.

அந்த மலர் தணிகேசனுக்கு அணிவிக்கப்பட்டு வழிபாடு நடக்கும். இந்ததொண்டு, பலயுகங்களாக நடந்து வந்ததை, 'பகலிராவினும்' எனத்தொடங்கும் திருத்தணி திருப்புகழில்,

'சகல லோகமும் புகல நாடோறுஞ்
சறுகிலாத செங் கழுநீருந்
தளவு நீபமும் புனையு மார்பதென
தணிகை மேவுசெங் கதிர்வேலா.' எனக் கூறுவார்.

★சுமார் ஐம்பது வருடங்களுக்குமுன் வரையிலும் இக் கைங்கரியம் ஒருதடையில்லாமல் நடந்து வந்திருக்கிறது என்பதை பலபெரியோர்கள் பேசியும் எழுதியும் இருக்கிறார்கள். ஆனால் கலியின் கொடுமையினால் இன்று இந்த அற்புத நிகழ்ச்சி நின்று

போய்விட்டது. இதைமீண்டும் புதுப்பிக்கும் சிவபுண்ணியம் எந்தப் பாக்கியவானுக்கு கிடைக்குமோ?

அடியார் ஒருவர் பிரம்மப் பதவி, வைகுண்டப் பதவி, சிவலோகப் பதவி பெற்ற பிறகு சதாபிஷேகம் செய்யப்படுவதாக பொருள் காண்பது நடைமுறைக்குப் பொருத்தமாக இல்லை. ஆகையால் அந்த கடைசி அடிகளுக்கு பொருத்தமாக வேறு ஒரு பொருளும் காணலாம்.

★ **ஆதிமறை நூல் மன் நான்முகம் பெறுவர்** - பிரம தேவனைப் போல் வேதங்களில் பாண்டித்யம் பெறுவார்கள்,

அன்னம் ஏறப் பெறுவர் - தமதுஇல்லத்தில் அன்னக் கொடி ஏற்றி வருபவர்கள் அனைவருக்கும் அன்னதானம் செய்யும் பேறு பெறுவார்கள்,

வாணி தழுவப் பெறுவார்கள் - நாவில் சரஸ்வதி கடாட்சம் பெற்று சகலகலா வல்லுனர்களாக திகழ்வார்கள்,

மகராலயம் பெறுவர் - கடல் கடந்துஉள்ள நாடுகளிலும் தனது புகழ் பரவும்படியான நற்செய்கைகளையே செய்யும் பேறு பெறுவார்கள்,

உவணம் ஏறப் பெறுவர் - ஆகாய விமானத்தில் பறந்து சென்று எல்லா விதமான நற்செயல்களையும் செய்யும் பேறு பெறுவார்கள்,

வாரிச மடந்தையுடன் வாழ் அந்நாயகம் பெறுவர் - லட்சுமி கடாட்சத்துடன் பதினாறு செல்வங்களையும் பெற்று வாழ்வார்கள்,

அயிராவதம் பெறுவர் - தேவேந்திரனைப் போல் எவ்விடத் தும் தனது ஆட்சியை செலுத்துவார்கள்,

அமுதாசனம் பெறுவர் - உண்ணும் உணவெல்லாம் நீண்ட ஆயுளும் ஆரோக்கியம் அமையப் பெற்று,

சீரும் சிறப்போடு வாழ்ந்து சதாபிஷேகம் செய்யப் பெற்று முடிவில் முக்தி வீடும் பெறுவார்கள்.

❖ ❖ ❖

வேல் வகுப்பு

முன்னுரை

வேல்வகுப்பு ஔஷதம் போன்றது. ஒரு மருந்து பல நோய்களை தீர்ப்பதுபோல இந்த வகுப்பு புறநோயை நீக்கும். பிறவிப் பிணியை போக்கும், வேல் ஞானம் ஆதலால் அதைப் படிப்பவர்களுக்கு ஞானத்தைக் கொடுத்து பேரின்ப வாழ்வைக் கொடுக்கும். முருகன் வேறு வேல் வேறு அல்ல. கந்தக்கடவுள் பவரோக வைத்தியநாதப் பெருமாள் ஆகையினால் வேலாயுதமும் பிறவியை அழிக்கும் பெரிய மருந்து என்பார் தணிகைமணி அவர்கள். மேலும் இவ்வகுப்பு - 'ப' - வில் ஆரம்பித்து - லே -வில் முடிவதினால், இதை - பலே - வகுப்பு என்பார் அவர்.

பாடல்

மோஹனம் ஆதி திஸ்ரநடை

பருத்தமுலை சிறுத்தஇடை வெளுத்தநகை
கறுத்தகுழல் சிவத்தவிதழ் மறச்சிறுமி
விழிக்குநிக ராகும்

பனைக்கை படக்கரட மதத்தவள
கசக்கடவுள் பதத்திடுநி களத்துமுளை
தெறிக்கவர மாகும்

பழுத்தமுது தமிழ்ப்பலகை யிருக்குமொரு
கவிப்புலவன் இசைக்குருகி வரைக்குகையை
யிடித்துவழி காணும்

பசித்தலகை முசித்தழுது முறைப்படுதல்
ஒழித்தவுணர் உரத்துதிர நிணத்தசைகள்
புசிக்கவருள் நேரும்

சுரர்க்குமுநி வரர்க்குமக பதிக்கும்விதி
தனக்கும்அரி தனக்குநரர் தமக்குறும்
இடுக்கண்வினை சாடும்

சுடர்ப்பருதி ஒளிப்பநில வொழுக்குமதி
ஒளிப்பஅலை யடக்குதழல் ஒளிப்பவொளிர்
ஒளிப்பிரபை வீசும்

துதிக்குமடி யவர்க்கொருவர் கெடுக்கஇடர்
நினைக்கினவர் குலத்தைமுத லறக்களையும்
எனக்கோர்துணை யாகும்

சொலற்கரிய திருப்புகழை யுரைத்தவரை
யடுத்தபகை யறுத்தெறிய வுருக்கியெழு
மறத்தைநிலை காணும்

தருக்கிநமன் முருக்கவரின் எருக்குமதி
தரித்தமுடி படைத்தவிறல் படைத்தஇறை
கழற்குநிக ராகும்

தலத்திலுள கணத்தொகுதி களிப்பினுண
வழைப்பதென மலர்க்கமல கரத்தின்முனை
விதிர்க்கவளை வாகும்

தனித்துவழி நடக்குமென திடத்துமொரு
வலத்துமிரு புறத்துமரு கடுத்திரவு
பகற்றுணைய தாகும்

சலத்துவரும் அரக்கருடல் கொழுத்துவளர்
பெருத்தகுடர் சிவத்ததொடை யெனச்சிகையில்
விருப்பமொடு சூடும்

திரைக்கடலை யுடைத்துநிறை புனற்கடிது
குடித்துடையும் உடைப்படைய அடைத்துதிர
நிறைத்துவிளை யாடும்

திசைக்கரியை முதற்குலிசன் அறுத்தசிறை
முளைத்ததென முகட்டினிடை பறக்கவற
விசைத்ததிர வோடும்

சினத்தவுணர் எதிர்த்தரண களத்தில்வெகு
குறைத்தலைகள் சிரித்தெயிறு கடித்துவிழி
விழித்தலற மோதும்

திருத்தணியில் உதித்தருளும் ஒருத்தன்மலை
விருத்தனென துளத்திலுறை கருத்தன்மயில்
நடத்துகுகன் வேலே.

பதவுரையும் விளக்கவுரையும்

பதவுரை: பருத்தமுலை-பெருத்திருக்கும் தனபாரங்களையும், **சிறுத்த இடை**-நுண்ணியதாக ஒடுங்கி இருக்கும் இடையையும், **வெளுத்த நகை**-வெண்மைநிறம் வீசும் பற்களையும், **கருத்த குழல்**-கருமைநிறம் கொண்ட கூந்தலையும், **சிவந்த இதழ்**-சிவந்த உதடுகளையும் உடைய, **மறச் சிறுமி** - வீரம்மிக்க வேடர் குலத் திலகமாகிய வள்ளிப்பிராட்டியின், **விழிக்கு நிகராகும்**-திருக்கண்களுக்கு ஒப்பாகும் (குகன் வேலே);

விளக்கவுரை: குழந்தையின் நோயை தாய்மார்கள் மருந்து அருந்தி முலைப்பால் மூலமாக தாய்மார்கள் குணப்படுத்து வார்கள். உயிர்க்கூட்டங்களின் மலப்பிணியை போக்கும் மருந் தாகிய பாலமுதம் நிரம்பிய தனபாரங்களை உடையவர் வள்ளிப் பிராட்டியார், உயிர்களுக் கெல்லாம் அமுதம் ஊட்ட வேண்டிய திருப்பதால், அவருடைய தனபாரங்களை 'பருத்த முலை' என்றார். (பாட்டு உள்ளத்துரு)

விமலனின் திருவடிப் பெருமையை புகழ்வாரின் வினை தேய, உயிர்கள் உணர்ந்துஉய்ய இடையை 'சிறுத்தஇடை' என்கிறார்.

பிறவித்தளையை வேரருக்கும் மாசற்ற வெண்மை ஒளி வீசும் தகுதியினால் அவரின் பற்களை 'வெளுத்தநகை' என்கிறார்.

தேவயானைக்கும் இதே தூயநகை உண்டு என்பதை 'முத்தைத்தரு பத்தித் திருநகை' என முதல் திருப்புகழில் குறிப்பிடுகிறார்.

இறைவனைப் புகழாதார் உள்ளம் எப்படி இருக்கும் எனக் காட்டுகிறது தேவியாரின் 'கருத்த குழல்'.

குமரனின் ஞானசொற்களைப் பேசும் செழுமை மிக்க உதடுகளை 'சிவந்தஇதழ்' என்கிறார்.

வள்ளிநாச்சியாருக்கு - பஞ்சகிருத்தியங்கள் - என்று கூறப் படும் ஐந்துதொழில்களும் உண்டு என்பதை இவ்வடிகள் ரகசியமாக வெளிப்படுத்துகின்றன.

1. பக்குவமடைந்த நிலையை காண்பிக்கும் பருத்த முலையினால் தோற்றமும்,

2. கனமான தனபாரங்களை தாங்கும் இடை திதியையும் (காத்தல்)

3. அஞ்ஞானத்தை சுட்டெரித்து வெண்பூதியாக்கும் வெளுத்த நகை சம்ஹாரத்தையும் (அழித்தல்),

4. கறுத்து இருண்டிருக்கும் கூந்தல் திரோபாவத்தையும் (மறைத்தல்),

5. ஞானத்தை அருளும் சிவத்தஇதழ் அனுக்ரகத்தையும் காட்டுகின்றன. வேலுக்கும் இவ்வைந்து தொழில்களும் உண்டு என்பதே இந்த ரகசியம்.

திருச்செந்தூரில் நாழிக்கிணறையும் வயலூரில் கண்ணாடி தடாகத்தையும் தோற்றுவித்ததால் தோற்றமும், கிரவுஞ்சகிரியில் அகப்பட்ட வீரபாகு முதலிய வீரர்களையும் திருப்பரங்குன்றம் குகையில் பூதத்தால் அடைக்கப்பட்ட நக்கீரர் முதலியவர்களை காப்பாற்றியது காத்தலையும், சூரன் முதலிய அசுரர்களை அழித்தது சம்ஹாரத்தையும், பிரமனை சிறையில் அடைத்தது மறைத்தலையும், அருணகிரியாரின் நாவில் ஆறெழுத்து மந்திரத்தை பொறித்தது அனுக்கிரகத்தையும் காட்டுகிறது. ஆகையினால் வள்ளியின் தொழில்கள் ஐந்தும் வேலாயுதத்திற்கும் உண்டு எனத் தெரிய வருகிறது.)

(ஞானசம்பந்தர் மதுரையில் சமணரோடு வாதுசெய்யும் போது அனல்வாதத்திற்காக தான்இயற்றிய தேவாரஏடுகளில் கயிறு சாத்தி பார்க்கும்போது திருநள்ளாற்றுப் பதிகமாகிய-'போக மார்த்த' - எனத்தொடங்கும் பதிகம் கிடைத்தது. அம்பிகையின் கருணை ரூபமாகிய பருமனான தனபாரங்களை குறிப்பிடுவதால் அந்தஏடு அனலில் வேகாது அமணரை வென்றது. அதனால் அப்பதிகம் - ''பச்சைப் பதிகம்'' - எனப் பெயர் பெற்றது.

மறுபடி ஒருமுறை சம்பந்தர் திருநள்ளாறு வந்த சமயம் - 'தளிர்இள' எனத் தொடங்கும் பதிகத்தைப் பாடுகிறார். அதில் - 'நள்ளான் நாமமே எரிஇட பழுதிலை மேன்மையே'- என்கிறார். அதாவது சிவபெருமானின் புகழைப் பாடும் இந்தப் பதிகம் நெருப்பில் இட்டாலும் வேகாது என்பதே இதன் கருத்து. ஆதலால் வெப்புநோய் வராமல் தடுக்க சைவப்பெருமக்கள் இப்பதிகத்தை ஓதி பயன்பெறுகிறார்கள். வேல்வகுப்பிலும் இச்சாசக்தியாகிய வள்ளிநாச்சியாரின் கருணை தனபாரங்களைக் குறித்து ஆரம்பிப்பதால் இப்பதிகத்திற்கும் அதே பலன் உண்டு எனத் தெரிய வருகிறது)

ப-ரை: பனைக்கை-பனைமரம் போன்று நீண்டு தொங்கும் துதிக்கையும், **முகபடம்**-முகத்தில் அணிந்த சித்திர வேலைப்பாடு அணிந்த சீலையும், **கரட மதம்**-இரண்டு கபால மதநீரையும், **தவள**-வெண்ணிறத்தையும் உடைய, **கசம்**-கஜம்-ஐராவதம் என்னும் யானையை, **கடவுள்**-வாகனமாகக் கொண்ட இந்திரன், **பதத்து இடு**-கால்களில் சூரபத்மனால் இடப்பட்ட, **நிகளத்து**- விலங்கின், **முளை**-ஆணியானது, **தெறிக்க அரம் ஆகும்**-உடைபட்டு விழ அரம்போல் செயல்படும் (குகன் வேலே).

வி-ரை: (பால்கடலில் தோன்றியதால் பால் போன்ற வெண்மை கொண்டது ஐராவதம் என்பதால் அதனை 'தவள கசம்' என்கிறார்.

இந்திரன் விலங்கிடப் பட்டான் என்கிற போது அவனது பரிவார தேவதைகளும் அதேநிலையில் இருந்தார்கள் என்பது சொல்லாமலே உணரப்பெறும். காலில் விலங்கிடப்பட்ட அவர் களது வருத்தத்தைக் கண்ட வேற்படை முறையே ஆணிகளைக் கழற்றி விலங்கை அவிழ்க்காமல் உக்ரத்தோடு ஒரே மோதலில் தெரித்து தானே விலங்கு கழன்றது என்பதை அழகாக சித்தரித்துள்ளார். பதம் என்பதற்கு இந்திரப்பதவி எனவும் பொருள் கொள்ளலாம். புண்ணியப்பயனால் இந்திரனுக்குக் கிடைத்த தேவேந்திரப் பதவிக்கும் ஆபத்து வந்தபோது அவனைக் காப்பாற்றியது வேலாயுதமே. தேவர்களுக்கு ஏற்பட்ட சோதனைக்கு மூலகாரணம் தக்கன் வேள்வியில் கலந்து கொண்டது தான். அஞ்ஞானத்தால் ஏற்பட்ட சிவஅபராதத்தை வேற்படை என்னும் ஞானசக்தி நீக்கி விடுதலை அளித்தது என்பதை இங்கு உணரவேண்டும்.)

ப-ரை: பழுத்த-ஞானம் கனிந்த, **முது**-பழமைவாய்ந்த, **தமிழ்ப்பலகை**-மதுரை தமிழ்ச்சங்க பலகையில், **இருக்கும்**-தலைவனாக அமர்ந்திருக்கும், **ஒரு கவிப் புலவன்**-ஒப்பற்ற பாக்கள் இயற்றும் அறிவில் சிறந்த நக்கீரனுடைய, **இசைக் குருகி**-பாட்டின் இனியபொருள்மிக்க ஒலிக்கு திருவுள்ளம் உருகி, **வரைக்குகையை**-திருப்பரங்கிரி மலைக்குகையை, **இடித்து வழி காணும்**-அங்கு கற்கிமுகி எனும் பூதத்தால் அடைக்கப்பட்டிருந்த நக்கீரர் முதலிய புலவர்கள் அனைவரையும் அக்குகையிலிருந்து வெளிவர வழிசெய்து கொடுத்தது (குகன் வேலே);

வி-ரை: முருகன் வைதாரையும் வாழவைக்கும் தெய்வம் ஆதலால் அம்மொழியின் முதிர்ச்சியை வளர்ச்சியை அவர் விரும்புகிறார் எனப் பொருள்படும். அதையே அருணகிரியார் பழுத்த தமிழ் என்கிறார். இம்மொழி புதிதாக தோன்றியது அன்று. இறைவன் போல் அதுவும் உள்ளது என்பார். இதனால் தமிழ் மொழியை, 'முதுதமிழ்' என்கிறார். இவ் வார்த்தையை - பழுத்த அமுது-என்று பிரித்தால் அமுதம் போன்றது, சிறந்த சீரான தன்மை கொண்டது எனவும் பொருள் கொள்ளலாம்.

கல்லையும் உருகவைக்கும் திருமுருகாற்றுப் படை கல் போன்ற மனதையும் உருக்க வல்லது என்பதை,

'கீதை இசை கூட்டி வேதமொழி சூட்டு கீரர்'

என 'வீணைஇசை' எனத்தொடங்கும் திருப்புகழில் கூறுகிறார். மேலும் திருமுருகாற்றுப்படையை வேதம் ஓதுவது போல் கூறவேண்டும் என்பதுவும் தெரிய வருகிறது. குமரவேள் ஏவிய வேற்படை வழிகாணும் என்பதால் முத்திக்கு வழிகாணும் என்றும் பொருள் கொள்ளலாம்.

மதுரையில் தருமிக்காக பாடி அளித்த 'கொங்குதேர் வாழ்க்கை' என்கிற பாசுரத்திற்கு தன் கல்விச்செருக்கால் நக்கீரர் குற்றம் கண்டுபிடித்தது மட்டுமல்லாமல் சிவபெருமானையே அவமதித்த காரணத்திற்காக சிறைப்பட நேர்ந்தது. ஞானசக்தி யாகிய வேற்படை அவருக்கு சிவஞானத்தை நல்கி பூதத்திலிருந்து உடலையும் சிவத்துரோகமாகிய பாவத்திலிருந்து உயிரையும் காப்பாற்றியது என்பது உணரத்தக்கது.)

ப-ரை: அலகை-பேய்கள், **பசித்து**-பசிகொண்டு, **முசித்து**-மெலிந்து, **அழுது**-அழுது புலம்பி, **முறைப்படுதல் ஒழித்து**-எங்கள் பசி தாங்க முடியவில்லையே என முறையிடுதலை அறவே நீக்கி, **அவுணர்**-அசுரர்களின், **உரத்து உதிரம்**-உடலின் இரத்தம் தோய்ந்த, **நிணத்தசைகள்**-கொழுப்போடு சேர்ந்த மாமிசத்தை, **புசிக்க**-அப்பேய்கள் உண்ண, **அருள் நேரும்**-மறக்கருணையால் உடன்படும் (குகன் வேலே);

வி-ரை: (அவுணர் என்ற சொல்லில் - அ - எனும் எழுத்து தகாது எனும் பொருளைக் குறிக்கும். அதாவது உயிர்கள்பால்

கருணைஇல்லாது அவைகளைக் கொன்று உண்ணும் கூட்டத்தாரே அவுணர் எனப்படுவர். தூய காய்கறிஉணவு உண்பவர்களை நாடாமல் உணவில் ஒழுக்கம்கெட்ட அவுணர்களின் உடலையே உண்ண பேய்கள் விரையும் போலும்.

'கொன்றது கொன்றன, தின்றது தின்றன' என்பார் பட்டினத்தார்.

அவுணர்செய்த வினையின் வெம்மை தேவியின் கணங் களின் ஒருபகுதியான பேய்களின் வயிற்றில் பெரும்பசியாய் நுழைந்து எரிவீச, பசிதாங்காமல் அந்தப்பேய்கள் கத்துவதைக் கண்ட வேற்படை அவைகளின் குறை அகலவும் ஈட்டின வினைகள் அழியவும் உபகாரம் செய்தமையால், 'அருள் நேரும் வேலே' என்கிறார். ஞானசக்தி மறக்கருணை காட்டுவதையே இவ்வடிகள் குறிக்கின்றன. பேய்களின் முறையீட்டை அகற்றிய வன் முருகனே என்று தக்கயாகப் பரணியும் கூறுகிறது.)

ப-ரை: சுரர்க்கும்-வானோர்களுக்கும், **முனிவர்களும்**-தவ சிரேஷ்டர்களுக்கும், **மகபதிக்கும்**-இந்திரனுக்கும், **விதி தனக்கும்**-பிரம்மனுக்கும், **அரிதனக்கும்**-திருமாலுக்கும், **நரர் தமக்கும்**-உலக மக்களுக்கும், **உறும்**-நேர்ந்த, **இடுக்கண்**-துன்பத்திற்கு காரணமான, **வினை**-தீவினைக் கூட்டங்களை, **சாடும்**-மோதி அழிக்கும் (குகன் வேலே);

வி-ரை: துஷ்டனான சூரபத்மனுக்கு வைதீக வானவர் மீன் கொண்டு வரவும், அவன் முன்னிலையில் பிரம்மன் பஞ்சாங்கம் வாசிக்கவும் இன்னும்பல அவலநிகழ்ச்சிகளை தக்கன் வேள்வி யில் கலந்து கொண்ட பாவத்தினால் வந்தன.

இந்த சாபத்தினால் சாகாவரம் பெற்ற தேவர்கள் அனைவரும் துன்பம் அடைந்தனர். அவர்களின் ஓலத்திற்கு மனம் இரங்கி இறைவன் ஆறுமுகம் படைத்த குமரனாய் அவதரித்தான். இறுதிப் போரில் சூரன் இமையோரை விழுங்க பெரும் இருள் வடிவம் எடுக்கிறான்.

வேற்படை இருளை அகற்ற, சூரபத்மன் தீப்போல் தளிரும், புகைபோல் தளையும் பொன்போல் பூங்கொத்தும், மரகதக்காயும் செந்நிறப்பழமும் அண்டம் அளாவிய கிளைகளை உடையதாய் நிலத்தின்கீழ் பாதாளம்வரை வேர்ஓட்டி கடலின்நடுவில் மாமர

மாய் நிற்கிறான். உயிர்கூட்டம் துடிப்பதைக்கண்ட வேல் தெய்வம் மாமரத்தைப் பிளந்து அனைவருக்கும் விடுதலை கொடுத்து வானவரின் பழைய வினைகளையும் நீக்கிற்று. இக்கருத்தை, 'கலக வாள்' எனத்தொடங்கும் பழநித் திருப்புகழில்,

'அலைவி லாதுயர் வானோ ரானோர்
நிலைமை யேகுறி வேலா சிலா' என்பார்.

ப-ரை: சுடர்ப்பருதி ஒளிப்ப-ஒளியை உடைய செங் கதிரோன் தோற்றுப்போய் ஒளித்துக் கொள்ளவும்,

நிலவு ஒழுக்குமதி ஒளிப்ப-குளிர்ந்த கிரணங்களை உடைய வெண்கதிரோனும் ஒளித்துக் கொள்ளவும்,

அலைஅடக்கு தழல்ஒளிப்ப-கரைகடந்து உலகை அழிக்காத படி சமுத்திரத்தை அடக்கிக் கொண்டிருக்கும் வடவாமுகஅக்னி ஒளித்துக் கொள்ளவும்,

ஒளிர்-பிரகாசிக்கின்ற, ஒளிர் பிரபை வீசும்-ஒளியை உடைய ஞானசக்தியை எங்கும் பரவும்படி செய்யும்,(குகன் வேலே);

வி-ரை: வடவாமுகஅக்னி மற்ற ஐந்து தழல்களையும் மிஞ்சுவதாகக் கூறுவர்.

மற்ற ஐந்துதழல்கள்: 1.யுகாந்தாக்னி 2.அகத்தியர் உதராக்னி 3.ஆலகால விஷாக்னி 4.ராம சராக்னி 5.பதிவிரதாக்னி.) வேலாயுதத்தின் அளவற்ற வெப்பத்தைக்கண்டு ஆற்றாது ஆதவனும், அமுத சீதள கிரணம் கண்டு ஆற்றாது அம்புலியும் பொறுக்க முடியாத எரிவு கண்டு மேற்சொன்ன ஆறு தழல்களும் ஒளிந்துக் கொள்ளுகின்றன. இம்மூன்றினையும் காய்ந்து குளிர்ந்து எரிக்கும் வேல் என்பதைக் குறிப்பிட 'ஒளிர் ஒளி பிரமை' என்கிறார்.

திருப்போரூர் சன்னதித் திருமுறையில் ஒருமேற்கோள்:

'ஒளியால் கதிர் அவுணர் உடலால் காலன் அடியால்
குளிர் மதியே யாகும் போருரில் வீரன் கரத்து ஏந்தும் வேல்,

ப-ரை: துதிக்கும்-தன்னைப் போற்றி வணங்கும், **அடியவர்க்கு**-அன்பர்களுக்கு, **ஒருவர்**-வேறு யாரேனும் ஒருவர், **கெடுக்க**-அந்த அடியவரை அழிக்க, **இடர் நினைக்கின்**-ஏதேனும் துன்பம் செய்ய மனதில் எண்ணினாலும், **அவர்குலத்தை**-அவர் வம்சத் தையே, **முதல்அற களையும்**-வேருடன் அழித்து களைந்து

விடும், **எனக்குஓர் துணையாகும்**-எனக்கு ஒப்பற்ற துணையாக இருந்து உதவிபுரியும், (குகன் வேலே);

வி-ரை: அடியவர்களுக்கு இடையூறுகள் பலஉருவில் வரும். முன்னும் பின்னும் துன்ப இருப்பு அடியார்களை சுற்றும்படி தீமை புரிபவர்கள் எல்லாரும் உலகில் பாவ வளர்ச்சிக்கு வழி செய்வார்கள். ஆதலால் அன்னவர் பரம்பரையை வேரோடு களைந்தால் அன்றி சிவஞானப்பயிர் செழிக்காது. ஆகையால் ஞானசக்தியாகிய வேல் அத்திருப்பணியை செய்து கொண்டே இருக்கும்.

வேல்வகுப்பு பாராயணம் செய்யும் போது - 'எனக்கொர் துணையாகும்' - என்கின்ற வரிகளை கூறுகின்ற சமயம் அருணகிரியாரின் திருக்கரங்கள் இரண்டும் அவரின் இதயத்திற்கு நேரே குவிந்திருக்கும் என்பது செவிவழிச் செய்தி. இந்த அடிகளின் 'சினத்தவர் முடிக்கும்' எனத் தொடங்கும் திருத்தணித் திருப்புகழில்,

'சினத்தவர் முடிக்கும் பகைத்தவர் குடிக்குஞ்
செகுத்தவ ருயிர்க்கும் சினமாகச்
சிரிப்பவர் தமக்கும் பழிப்பவர் தமக்கும்
திருப்புகழ் நெருப்பென் றறிவோம்யாம்' என்கிறார்.

ப-ரை: சொலற்கரிய-அருமை பெருமைகளை அளவிட்டுச் சொல்ல இயலாத, **திருப்புகழை**-இறைவனது அருள் சம்பந்தப் பட்ட திருப்புகழை, **உரைத்தவரை**-விருப்புடன் செப்பியவரை, **அடுத்தபகை**-நெருங்கிவரும் பகை நிலைமையை, **அறுத்தெறிய**-வேருடன் அறுத்து எறிவதற்கு, **உறுக்கி எழும்**-உக்ரத்துடன் புறப்படும், **அறத்தை நிலை காணும்**-தர்மத்தை நிலைபெறச் செய்யும் (குகன் வேலே);

வி-ரை: சிவபெருமான் பார்வதிதேவியிடம், 'தேவி உன்னுடைய திருக்குமரனின் பெருமையை விவரித்துச் சொல்ல 100 கோடி வருடங்கள் காணாது' - என்று சொல்லும் அளவிற்கு கந்தனின் மகிமை விரிந்திருப்பதினால், 'சொலற்கரிய திருப்புகழ்' என்கிறார். சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி என்னும் நான்கு நல்வாக்குகளின் பகுதியான வேதம் ஆதிய நூல்களும் அளந்து காண இயலாத முருகனின் திருப்புகழை அளந்து கண்டது

என்றால் அருணகிரிநாதர் பாடிய திருப்புகழின் அருமை விரித்து காண்பது அரிது.

கல்லால மரத்தின் அடியில் சனகாதி முனிவர்கள் நால் வருக்கும் மெய்ப்பொருளை வாக்கினால் சொல்ல முடியாது என்று கையைமட்டும் காட்டிப் போனார் தட்சிணாமூர்த்தியார். ஆனால் கருணைமிகுதியால் முருகனின் திருப்புகழை பல பாக்களினால் விவரித்திருக்கிறார் எனில் திருப்புகழின் பெருமை ஓரளவுதான் அளவிட முடியும்.

'பரித்ராணாய' - எனும் சுலோகத்தில் ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா கீதையில் சொல்லிய மாதிரியே வேலாயுதமும் அடியவர்களைக் காத்து துஷ்டர்களை அழிக்கும் என்பதையே இவ்வடிகள் உறுதி செய்கின்றன.

மேலும் இதேகருத்தை,

'கருப்புவிலில்' எனத் தொடங்கும் பழநிமலைத் திருப்புகழில்,

'திருப்புகழை யுரைப்பவர்கள் படிப்பவர்கள்
மிடிப்பகைமை செயித்தருளு மிசைப்பிரிய' - என்கிறார்.

ப-ரை: நமன்-எமன், **தருக்கி**-இறுமாப்புடன், **முருக்கவரின்**-அழிக்க வந்தால், **எருக்கு**-எருக்க மலரையும், **மதி**- திங்களையும், **தரித்தமுடி படைத்த**-சூடிய ஜடாபாரத்தை உடைய, **விறல் படைத்த**-வெற்றி அமைந்து, **இறை கழற்கு**-எங்கும் இருப்பவ ரான சிவபிரானின் திருவடிக்கு, **நிகராகும்**-ஒப்பாகும் (குகன் வேலே);

வி-ரை : திருவாசகம் கூறுவது போல் சிவபெருமானின் திருவடியே ஐந்தெழுத்தாகும். - 'நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க' - என்ற அடிகளே இதற்குச் சான்றாகும். வேலாயுதம் சிவபெருமானின் திருவடிக்கு ஒப்பாகும் என்பதால் அதுவே பஞ்சாட்சரம் என ஊகிக்க முடிகிறது.

இக்கருத்தை உறுதி செய்யும்படிக்கு 'பருவம்' எனத் தொடங்கும் சிதம்பரத்து திருப்புகழில்,

'செருவெங் களத்தில் அவுணன் தெறித்து மங்க
சிவமஞ் செழுத்தை முந்த விடுவொனே' என்கிறார்.

ஆதலால் ஐந்தெழுத்தை ஓத இயலாதவர்கள் வேல் வேல் என பாராயணம் செய்வதே அதற்கு நிகராகும்.

இவ்வடிகளின் கருத்தை பல திருப்புகழ் பாக்களில் குறிப்பிடுகிறார். அவைகளில் சில,

'சினத்தொடும் சமன் உதைபட நிருவிய பரன்' *(தருக்கு)*

'காலன் வந்து பாலன் ஆவி காயம் வென்று பாசம் வீசு
காலம் வந்து ஓலம் ஓலம் எனும் ஆதி' *(நாலுமைந்து)*

'நமனை விழி கொளும் அழலின் இணைகழல்' *(குமரகுருபர)*

'மறலியின் நாட்ட மற சரணீட்டி' *(பாட்டில் உருகிலன்)*

ப-ரை: தலத்தில் உள-தமது ஆட்சியில் உள்ள, **கணத் தொகுதி**-சிவக்கண கூட்டம், **களிப்பின் உண**-மகிழ்வோடு உண்பதற்கு, **அழைப்பதென**-அழைப்பது போல், **மலர்க்கமல கரத்தின்**-மலர்ந்த தாமரைஅன்ன திருக்கரத்தில், **முனை**-நுனியை, **விதிர்க்க வளைவு ஆகும்**-அசைக்க வளையும் *(குகன் வேலே)*;

வி-ரை: தன்னை வழிபட்டு சூழும் கணங்களுக்கு ஆனந்த சேவையும் ஆனந்தஅமுதும் அளிக்க குமரன் தன்திருக்கையின் விரல்களினால் வருக என அழைக்கும் போதெல்லாம் அப்பரமன் ஏந்தியுள்ள திருக்கரத்து வேலாயுதமும் உடன் வளைந்து காட்டும் காட்சியை அனுபவித்த காட்சி அருணகிரியார் இவ்வண்ணம் கூறுகிறார். என்றும் எதற்கும் வளையாத வேல் அடியாரை பெருமான் அழைக்கும் தருணத்தில் தானும் வளையும் என்பதே இதன் குறிப்பு. பேய்களுக்கு விருந்தளிக்க அழைத்தல் என்பது பொருந்தாது. பேய்களே சூழ்ந்திருப்பன என பொருள் காண்பன என்பது பொருந்தாத ஒன்றாகும்.

ப-ரை: தனித்து-துணையின்றி தன்னந்தனியாய், **வழி நடக்கும்**-வழியில் நடக்கின்ற, **எனது இடத்தும்**-எனது இடப் பக்கமும், **ஒரு வலத்தும்**-ஒப்பற்ற வலதுபுறத்தும், **இரு புறத்தும்**-முன்னும் பின்னுமான இரண்டு பக்கங்களிலும், **அருகுஅடுத்து**-அண்டையில் நெருங்கி, **இரவு பகல் துணையதாகும்**-இராக் காலத்திலும் பகல்காலத்திலும் துணையாக இருந்து என்னைக் காப்பாற்றும். *(குகன் வேலே)*;

வி-ரை: பரமனைத் தரிசிக்கும் வேட்கையால் இரவென்றும் பகலென்றும் பாராமல் குமரக் கோட்டங்களை எண்ணி எண்ணி வழிநோக்கி தன்னந்தனியாக செல்லும் எனக்கு பூதபிசாசுகள், கள்வர், இயற்கை சீற்றங்கள் இவைபோன்ற பற்பல துன்பங்கள் நேராதபடி குகன்வேல் என்னைக் காக்கும் என்கிறார் அருணகிரியார்.

ஞானேந்திரியங்கள், கர்மேந்திரியங்கள் எல்லாம் என்னைக் கைவிட்டு மறலி ஊர்புகும் மரணவார்த்தையின் போதும், தியான காலத்தில் இரவுபகல் அற்றஇடத்தே செல்லும்போதும் ஞான சக்தியாகிய வேலாயுதம் என்னைக் காக்கும் என்பதும் குறிப்பு)

ப-ரை: சலத்து வரும் அரக்கர் உடல்-கோபப்பட்டு வருகின்ற அசுரர்களின் உடம்பில், **கொழுத்து வளர்** - பல தகாத உணவு வகைகளை உண்டு கொழுப்படைந்து வளர்ந்துள்ள, **பெருத்த குடர்**-பெருத்திருக்கின்ற குடல்களை, **சிவத்த தொடை என**-சிவத்த பூமாலை போல, **சிகையில் விருப்பமொடு சூடும்**-தன் உச்சியில் பிரியத்துடன் தரித்துக் கொள்ளும் (குகன் வேலே);

வி-ரை : எங்குமே, என்றுமே அமைதி காணாது பெரும் சினத்தோடு விளங்கும் அவுணரை 'சலத்து வரும்' என்கிறார். அசுரர்கள் அரக்குபோன்ற செந்நிற மேனியர் ஆதலால் அவர் களை அரக்கர் என்கிறார். அசுரர்கள் தின்பதைத்தவிர மற்றஒன்றும் செய்து அறியாதவர்கள். ஆதலால் அவர்களை 'கொழுத்துவளர்' என்கிறார். வேல் தனதுஆற்றலுக்கு இசைய அந்தஅரக்கர்களது சிறுகுடல்களை நீக்கி நீண்டு வளர்ந்துள்ள பெருங்குடல்களையே மாலைகளாகச் சூடும் என்பதால் 'பெருத்த குடர்' என்கிறார். அசுரரை அழிப்பது வேலுக்கு உவகை தரும் தொழில் ஆகை னால், 'விருப்பமொடு சூடும்' என்கிறார்.

இக்கருத்தை மற்றொரு வகுப்பான கடைக்கண்ணியல் வகுப்பில்,

'முதியவுணர் அன்றுபட்ட முதியகுடர் நன்று சுற்று
முதுகழுகு பந்தர் இட்ட வேலினான்'

என்பதையும் காணலாம்.

ப-ரை: திரைக்கடலை-அலைகள்வீசும் கடலை, **உடைத்து**-பிளந்து, **உடையும்**-உடைப்பு எடுத்து ஓடும் (நீரை), **உடைப்பை அடைய அடைத்து**-உடைப்பு முழுவதும் பலவகையிலும் சிதறாதபடி ஆங்காங்கு அணையிட்டதுபோல் அடைத்து, **நிறை புனல் கடிது குடித்து**-சமுத்திரத்தில் நிறைந்துள்ள நீரை விரைவில் உறிஞ்சிப் பருகி, **உதிரம் நிறைத்து விளையாடும்**-வெற்றிடமாய் இருந்த கடல்பரப்பில் அவுணர்களின் இரத்தத்தை நீருக்குப் பதிலாக நிரப்பி விளையாடி நிற்கும் (குகன் வேலே);

வி-ரை: இந்த அரியசெயல் குகனின் வேற்படைக்கு ஒரு சிறு விளையாட்டுக் காரியமாக இருந்தது என்கிறார் அருணை முனிவர்.

ப-ரை: திசைக்கிரியை-எட்டுத்திக்குகளிலும் உள்ள மலை களை, **முதற் குலிசன்**-தேவர்களின் முதன்மை வாய்ந்த இந்திரன், **அறுத்த சிறை முளைத்ததென**-அறுத்துத் தள்ளின இறக்கைகள் மறுபடியும் முளைத்தது என்று பார்ப்போர்கள் கூறுமாறு, **முகட்டினிடை பறக்க**-அண்டஉச்சியின் நடுவில் பறந்து கொண்டு, **அற விசைந்து**-அளவில்லா வேகம் கொண்டு, **அதிர ஓடும்**-அகில உலகங்கள் நடுங்கும்படி விரைந்துஓடும் (குகன் வேலே);

வி-ரை: பண்டைக் காலத்தில் மலைகள் அனைத்தும் சிறகு களுடன் பறந்து உலகோருக்கு கேடுவிளைத்து வந்தன. இதை அறிந்த இந்திரன் வஜ்ராயுதத்தால் மலைகளின் சிறகுகளை அறுத்து எறிந்தான். அன்று முதல் மலைகளனைத்தும் நிலத்தில் அழுந்தி - பூதரம் - எனப்பெயர் பெற்றன.

பின்பு முருகனுடைய வேற்படை அண்டஉச்சியில் அதி வேகத்தோடு பறந்தபோது உலகெல்லாம் கிடுகிடு என அதிர்ந்தன. மீண்டும் மலைகளுக்கு சிறகுகள் முளைத்தனவோ என உலகோர் அஞ்சினர் என்கிறார்.

ப-ரை: சினத்தவுணர்-கோபத்தை உடைய அசுரர்கள், **எதிர்த்த ரண களத்தில்**-போர்செய்த யுத்தகளத்தில், **வெகு குறைத்தலைகள்**-உடலில் இருந்து அறுக்கப்பட்ட அளவற்ற தலைகள், **சிரித்து**-நாம் எப்படி எல்லாம் இருந்தோம், இப்போது இந்தநிலைக்கு வந்துவிட்டோமே என்று வருந்தி தமக்குத்தாமே

சிரித்துக் கொண்டு, **எயிறுகடித்து**-பற்களை நறநற என கடித்துக் கொண்டு, **விழிவிழித்து**-கண்களை உறுட்டிப் பார்த்து, **அலற மோதும்**-வாய்விட்டு அலறும்படி அசுரர்களைத் தாக்கும் (குகன் வேலே);

ப-ரை: திருத்தணியில்-சாந்திநிகேதனம் எனப்படும் தணிகை யம்பதியில், **உதித்தருளும் ஒருத்தன்**-ஞானசூரியனாய்க் காட்சி நல்கும் ஒப்பற்றவனும், **மலை விருத்தன்**-மலைக் கிழவனும், **எனது உளத்துரை கருத்தன்**-என்னுடைய மனதில் எழுந்தருளி இருக்கும் கடவுளும் ஆகிய, **மயில் நடத்து குகன் வேலே**-மயிலை வாகனமாகக்கொண்ட முருகப் பெருமானது வேலாயுதமே (மேற்சொன்ன சிறப்புகளைக் கொண்டதாகும்).

தொகுப்புரை: உலகங்கள் அனைத்திற்கும் ஒளிவிளங்க, அமைதி நிலையமான திருத்தணியில் உதயமாகும் ஞான திவாகரன், உலகம் அனைத்தையும் தாங்கும் குறிஞ்சிக்கிழவன் அடியேன் உள்ளத்தில் தங்கிஇருக்கும் கடவுள், மயில் எனப்படும் ஆவரணசக்தியை ஏறிநடத்தும் எம்மான், உயிர்களின் உள்ளமாம் குகையில் எப்போதும் உறைகின்ற ஒப்பற்றவன் ஆகிய குகப்பெருமான் திருக்கரத்தில் தாங்கி இருக்கும் ஞானசக்தியாகிய வேலாயுதம்,

1.வள்ளிப்பிராட்டியின் திருக்கண்களுக்கு ஒப்பாகும்,

2.இந்திரனின் கால்விலங்கின் முளைதெறிக்க அராவும் அரமாகும்,

3.குகையை இடித்து வழிதெரியும்படி செய்யும்,

4.பேய்களின் பசிஅகல உபகரிக்கும்,

5.அனைவரையும் துன்பப்படுத்தும் வினைப்பெருக்கங் களை மோதி அழிக்கும்,

6.ஒளிஎல்லாம் நாண பேரொளி வீசும்,

7. அடியார்களுக்கு இடையூறு செய்பவர்களின் குலத்தையே நாசம் செய்யும்,

8. எனக்கு எப்போதும் ஒப்பற்ற துணையாக வந்துஉதவும்,

9. திருப்புகழ் பாடுவோருக்கு நேரும்பகைகளை அறுத்து எறிய ஆக்ரமித்து புறப்படும்,

10. அறத்தை நிலைபெறச் செய்யும்,

11. எமன் பற்றவரின் மார்க்கண்டேயரைக் காக்க சிவபிரான் நீட்டிய திருவடி போல் விரைந்துவந்து அந்த எமனை கண்டித்து அடியாரைக் காக்கும்,

12. இறைவனின் திருக்கரங்கள் அசையும்போது எல்லாம் சிவகணங்களை அமுதுண்ண அழைப்பதுபோல் தானும் தனது திருமுடியை வளைத்து காட்டும்,

13. தனிவழியில் வேறு துணையின்றி செல்லும் போதெல் லாம் இரவும்பகலும் துணையாகவந்து அச்சம் அகற்றும்,

14. அரக்கர்களின் பெருங்குடல்களை எடுத்து மாலைபோல் விருப்பமுடன் சூடிக்கொள்ளும்,

15. கடலை உடைத்து, புனலைக் குடித்து, உடைந்த உடைப்பை அடைத்து அதில் அவுணரது குருதி நிறைத்து விளையாடும்,

16. சிறகுகளுடன் மலைகள் பறக்கின்றது என கண்டவர்கள் கூறுமளவிற்கு விண்ணில் வேகமுடன் அதிர்ச்சி காட்டி ஓடும்,

17. போர்க்களத்தில் எதிர்த்த அவுணர்களின் தலைகளை அறுத்துப், பற்களை கடித்து கண்ணை உருட்டி வீறிட்டு அலற அவைகளை மோதும்,

என்றெல்லாம் அறக்கருணை மறக்கருணை இருப்பைப் பாடும்முறையில் வேலாயுதத்தின் பரத்துவத்தை பாடுகிறார் நம் அருணைமுனிவர்.

❖ ❖ ❖

மயில் வகுப்பு

ராகமாலிகை - பைரவி சதுஸ்ரஏகம் - கண்டநடை

ஆதவனும் அம்புலியும் மாசுறவி ழுங்கியுமிழ்
ஆலமரு வும்பணியி ரண்டும் அழுதே

ஆறுமுகன் ஐந்துமுகன் ஆனைமுகன் எங்கடவு
ளாமெனமொ ழிந்தகல வென்று விடுமே

ஆர்கலிக டைந்தமுது வானவர்அ ருந்தஅருள்
ஆதிபக வன்துயில்அ நந்தன் மணிசேர்

ஆயிரம் இருந்தலைக ளாய்விரிப ணங்குருதி
யாகமுழு துங்குலைய வந்த றையுமே

நடபைரவி

வேதமுழு தும்புகல் இராமன்ஒரு தம்பிமிசை
வீடணன் அருந்தமையன் மைந்தன் இகலாய்

வீசும்அர வஞ்சிதறி யோடவரு வெங்கலுழன்
மேல்இடி எனும்படிமு ழங்கி விழுமே

மேதினிசு மந்தபெரு மாசுணம யங்கநக
மேவுசர ணங்கொடுல கெங்கு முழுமெ

வேலியென எண்டிசையில் வாழும்உர கந்தளர
வேஅழலெ னுஞ்சினமு டன்ப டருமே

ஆனந்தபைரவி

போதினில் இருந்தகலை மாதினைம ணந்தவுயர்
போதனை யிரந்துமலர் கொண்டு முறையே

பூசனைபு ரிந்துகொடி யாகிமகிழ் ஒன்றுதுகிர்
போல்முடிவி ளங்கவரும் அஞ்சம் அடுமே

பூதரொடு கந்தருவர் நாதரொடு கிம்புருடர்
பூரணக ணங்களொடு வந்து தொழவே

போரிடுவ வென்றுவெகு வாரணக ணங்களுயிர்
போயினம் எனும்படிஎ திர்ந்து விழுமே

ஸிந்துபைரவி

கோதகலும் ஐந்துமலர் வாளிமத னன்பொருவில்
கோலவுட லங்கருகி வெந்து விழவே

கோபமொடு கண்டவிழி நாதர்அணி யும்பணிகள்
கூடிமனம் அஞ்சிவளை சென்று புகவே

கூவியிர வந்தம்உணர் வாழியென நின்றுபொரு
கோழியொடு வென்றிமுறை யும்ப கருமே

கோலமுறு செந்தில்நகர் மேவுகும ரன்சரண
கோகனதம் அன்பொடுவ ணங்குமயிலே.

பதவுரை: ஆதவனும் அம்புலியும் மாசுற விழுங்கி உமிழ்-வெயில்பரப்பும் சூரியனும் தண்மை வரிக்கும் சந்திரனும் களங்கம் அடைய வாயில்இட்டு மீண்டும் கக்கும் குணம் அடைய, **ஆலம் மருவும் பணி இரண்டும் அழுதே**-விடம் பொருந்திய இராகு கேது எனும் இரு பாம்புஉருவ கோள்களும் அலறி அழுது,

ஆறுமுகன் ஐந்துமுகன் ஆனைமுகன் எம் கடவுள்-ஆறுமுகப் பரமன், ஐம்முகச் சிவன், யானைமுகக் கணபதி ஆகியோர் எமது வழிபடு தெய்வங்கள், **ஆம்என மொழிந்து அகல வென்று விடுமே**-நிச்சயமாக சொல்கிறோம் என்றுகூறி வழி விலகிஓட முனைப்புஅகல வென்று அவர்கட்கு உயிர்ப் பிச்சை தரும்;

வி-ரை: இராகுகேது வரலாறு: விமலகாசிபர் மகன் விப்ரசித்தி. அவன் சிமிக்கை என்பாளை மணந்து இராகு கேது எனும் இருவரைப் பெற்றனர். திருமால் மோகினி உருவம் கொண்டு அமரர்க்கு அமுது பகிர்ந்தளித்த காலத்தில் இராகு தேவஉருவம் கொண்டு சூரியனுக்கும் சந்திரனுக்கும் இடையே அமர்ந்து புத்தமிர்தம் வாங்கிப் புசித்தனர். மேலோர் உண்பதற்கு முன் உண்ணலும் உண்பதற்குமுன் கொள்அனுட்டானங்கள் இன்மையும் அசுரசாயலை உடைய இராகுவை சந்திரசூரியர் கண்டு திருமாலுக்கு அதை சமிக்கையால் உணர்த்தினர். உடனே அப்பெருமான் சட்டுவத்தால் அடித்து ராகுவின் தலையை நிலத்தில் தள்ளினார். அமுதுண்டு இறவாத தன்மை எய்திய அத்தலை இராகு எனவும் உடல் கேது எனவும் பெயர் பெற்றனர். உடன் பிறந்தவன் பெயர் கேது, அதே பெயர் தலையுடன் ஒன்றிப் பிறந்த கேதுவுக்கும் உரியதாயிற்று.

அதன்பின் இராகுவும் கேதுவும் பெரும்தவம் செய்து திருமால் அருளால் கரும்பாம்பு செம்பாம்பு உருவாயினர். தம்மைக் காட்டித்தந்த காரணத்தால் மகத்தான பகைகொண்டு சந்திரசூரியர் ஆட்சியை மறைப்பதுவே தொழிலாகக் கொண்டனர். சாயாக் கிரகங்களான இவர்களது தொல்லை தாங்காத சந்திரசூரியர் அவர்கள் தம்மை பிடிக்கவரும் காலத்தில் சண்முகநாமம் ஜெபிக் கின்றனர். ஜெபத்தின் முடிவில் விந்துத் தத்துவம் மயில் உருவம் வெளிப்படுகிறது.

அதைக் கண்டதும் பல்லில், விஷமுடைய பாம்புகட்கு அச்சம் மனதில் அதிகரிக்கின்றது. உடனே 'ஆறுமுகச்சிவனார் என் தெய்வம், ஐந்துமுகச்சிவனார் எம்இறைவர் கணபதி எம்கடவுள் வாய்மையே எங்கள் வார்த்தை' என வினயமோடு விளம்பி ஒதுங்கிச் செல்ல நம்பன் நாம நலம் கேட்டு அவைகட்கு உயிர்ப் பிச்சை அளித்து வாகைமாலை சூடும்மயில் என்றபடி ஆறுமுகன் சடாக்சரன், ஐந்துமுகன் பஞ்சாட்சரன், ஆனைமுகன் ஏகாட்சரன் என்க. அதன்படி சூரிய சந்திர கிரகணகாலங்களில் ஷடாச்சர, பஞ்சாட்சர, ஏகாட்சர ஜெபம் செய்தால் கிரகணபீடை நீங்கும்.

ப-ரை: ஆர்கலி கடைந்து அமுது வானவர் அருந்த அருள்-நிறைந்த பாற்கடலைக் கடைந்து அமரர் அமுதுஉண்ண உதவிய, **ஆதிபகவன் துயில் அநந்தன் மணிசேர்**-திருமால் துயில் கொள்ளும் படுக்கையானஆதிஷேடனின் மாணிக்கங்கள் உடைய, **ஆயிரம் இரும்தலைகளாய் விரி பணங்குருதி ஆக**-வன்மை உள்ள 1000 தலைகளில் இருந்து மலரும் 1000 படங்களும் குருதிக் குளம்பு மயமாக, **முழுதும் குலைய வந்து அறையுமே**-அப்பாம்பின் உடல் முழுதும் நெறிய வந்து மோதும்.

வி-ரை: ஆயுள் நீட்டிக்க உதவுவது அமுதம், கடல் கடைந்து அதை அமரருக்கு அருளியவர் ஆதிமூலர். அப்பெருமானது அயர்வு அகற்றி அரிதுயில் கொள்ள அவருக்கு தனது உடலை உதவுகிறான் ஆதிசேடன். அஃதன்றி **'சென்றால் குடையாம், இருந்தால் சிங்காசனமாம், நின்றால் திருவடியாம், நீள் கடவுள் என்றும் புனையான், மணிவிளக்கான் பூம்பட்டான், புங்கும் அணையான் திருமாலுக்கு அரவு'**- என்று பொய்கையார் கூறி புனிதத் திருப்பணி அளவிலாது செய்தலின் ஆதிசேடன் அநந்தன் எனும் பெயர் எய்தினான். இத்துடன் பூமியைத் தாங்கும் புனித நலமும் பெற்றான்.

இதனால் உலகம் அவனை உவந்து புகழ்ந்தது. முதிர்ந்த புகழ்ச்சி முனைப்பை அளித்தது. அந்த முனைப்பு அகில தலத்தையும் அலமறச் செய்தது. அந்நிலையில் அமைதியை விளைவிக்க விந்துத்துவ மயில் வெளிவந்து மோதிய அளவில் அநந்தன் ஆதிசேடன் என்றபடி.

பாம்புருவான இராகு-கேதுக்கள் முருகநாமம் கூறி உய்திபெற்ற வரலாற்றை முன் கூறினார். கூறஇயலாத ஆதிசேடன் செய்தியை இந்த அடியில் கூறிச்சென்றார். ஆர் - நிறைவு, கலி - தோஷம், எனவே நிறைவுதரு பேரொலி தரும் கடல் திரு, ஐஸ்வர்யம், புகழ், வீரம், ஞானம், வைராக்கியம் எனும் ஆறு குணங்கள் அதையவன் எனும் பொருட்டு.

ப-ரை: வேதம் முழுதும் புகல் இராமன் ஒரு தம்பி மிசை- எல்லா வேதங்களும் துதிக்க இராமபிரானின் ஒப்பற்ற தம்பியாகிய இலட்சுமணன் மேல், **வீடணன் அரும்தமையன் மைந்தன் இகலாய்**-அருமையான விபீடணனின் தமையனாகிய இராவணனது மகனாகிய இந்திரஜித்து பகை மிகுந்து,

வீசும் அரவம் சிதறிஓட வரு வெம்கலுழன் மேல்- விட்ட நாககணை சிதறுண்டு ஓடிஒழிய உவந்துவந்த உக்ரமான கருடன் மேல், **இடி எனும்படி முழங்கிவிழுமே**-இடி என்று சொல்லும்படி பெரும் முழக்கம் செய்து மேல் வந்து மோதும்.

வி-ரை: (இராமன்தம்பி லட்சுமணன்மேல் விபீடணன் அண்ணன் மகன் அரவாஸ்திரம் விட்டான். அதனால் இராமன் முதல் அனைவரும் அளவிலா கவலை அடைந்தனர். இதை அறிந்த விண்ணவர் வேண்ட வெளியேறினான் கருடன். அவன் வருகையைக் கண்டதும் பாம்புஅஸ்திரம் அச்சம் மிகுந்து, இருந்த இடம் தெரியாதபடி ஓடி ஒளிந்தது. அதன்பின் லட்சுமணன் உயிர்ப்புடன் எழுந்தான், இராமனாதியர் மகிழ்ந்தனர். பல்லாண்டு இமையவர் பாடினர். இந்நிலையை நினைத்து இறுமாந்தான் கருடன். இந்த இறுமாப்பு உலகம் அனைத்திற்கும் இடுக்கண் தந்தது. கதறியது உலகம். குறிப்பறிந்த குடிலை மயிலாகி வந்தது. கர்ஜித்து மோதியது. கருடனை அவ்வளவில் செருக்கை அடக்கியது. திருந்தினான் கருடன். உய்ந்தது உலகம்).

ப-ரை: மேதினி சுமந்த பெரு மாசுணம் மயங்க- உலகைத் தாங்கிய பெரிய பாம்பான ஆதிசேடனுடைய அறிவுநிலை குலைய, **நக மேவு சரணம் கொடு உலகெங்கும் உழுமை**-நகங்களை உடைய பாதங்களைக் கொண்டு உலகம் முழுவதையும் கிளறி உழுதலைச் செய்யும்,

வி-ரை: *(வனைந்த உலகங்கள் அனைத்தையும் காக்க வலம் வருகின்றது மயில். அதன் பாதங்களில் உள்ள உறுவலி நகங்கள் நிலத்தை ஏர்போல் உழுகின்றன. அந்த அதிர்ச்சியால் ஆதி சேடனின் தலைகள் அதிர்கின்றன என்றும், உயிர்கள் நிலத்தில் வித்து இட்டு விளைவுமிக வழி செய்கின்றது என்றபடி. மதுகைடவருடைய மேதஸ் எனும் கொழுமை நிறைந்த நிலம் எனும் பொருட்டு. 'சிவஞான புண்டரீகம்' எனும் திருப்புகழில், 'அழகா நகம் பொலியும் மயிலா' என்பதை, 'நகம் மேவு சரணம் கொடு உலகெங்கும் உழுமே' என்கிறார்.*

ப-ரை: வேலிஎன எண்திசையில் வாழும் உரகம்தளர- *உலகிற்கு இட்ட வேலிபோல் எண்திசையிலும் வாழ்கின்ற எட்டு நகங்களும் உடலும் உள்ளமும் பெரும் தளர்ச்சி அடையும்படி,*

வேஅழல் எனும் சினமுடன் படருமே- *மூங்கிலில் எழும் காட்டுத்தீ எனும்படியான கோபக் கொதிப்புடன் பவனி வரும். (எண்திசைகளை வரைஅறுத்தோம் யாம், தாங்குகின்றோம் யாம் இலரேல் உலகம் நிலைகுலையும் எனும் பாம்புகளின் செருக்கை அடக்கிய செய்தி இது.)*

போதினில் இருந்த கலைமாதினை மணந்த- *வெண் கமலத்தில் வீற்றிருந்த கலைமகளை மணந்து கொண்ட,* ***உயர் போதனை இரந்து-*** *உயர்ந்த புத்தியுள்ள பிரமனைக் குறை இரந்து (சொல்லி),*

மலர்கொண்டு முறையே பூசனைபுரிந்து கொடியாகி மகிழ் ஒன்றும்- *மலர்பறித்து விதிப்படி அர்ச்சித்து வழிபட்டு அதன் பயனாக அப்பிரமனுக்குக் கொடியாக விளங்கி, மகிழ்ச்சி பொருந்தும்,*

துகிர்போல் முடிவிளங்க வரும் அஞ்சம் அடுமே- *பவளம் போல் உச்சிக் கொண்டை விளங்க வெளிவருகின்ற அன்னத்தைத் தண்டிக்கும்,*

(உலகம் படைப்பானுக்கு ஊர்தியும் கொடியும் ஆனேன் எனும் செருக்கு மிகுந்து நீ எனக்கு எம்மாட்டு என்று எதிர்த்த அன்னத்தை மயில் சத்தியலோகம்வரை சென்று தண்டித்த வரலாற்றை உபதேச காண்டத்தில் உணர்க)

பூதரொடு கந்தருவர் நாதரொடு கிம்புருடர்-பூத கணங் களுடன் கந்தர்வர்கள் நவநாத சித்தர்கள் கிம்புருடர்கள்,

பூரண கணங்களொடு வந்து தொழவே-பதிணென் கணங் களுடன் வந்து வணங்க, **போரிடுவ என்று வெகுவாரண கணங்கள்**-அவர்களிடம் அமர்செய்து தடை விளைப்பம் என்று கருதி அளவிலா யானைகள், **உயிர்போயினம் எனும்படி எதிர்ந்து விழுமே**-உயிர்ப்பு ஒழிந்தோம் என பிளிறும்படி அவைகளை எதிர்த்து மோதும்.

வி-ரை: வாழவல்ல கந்தர்வர் இசைவழிபாட்டில் பூத கணத்தவர்கள் கலந்துகொள்வர். பதநாதம், அபரநாதம், பர அபரநாதம் எனும் மூன்றுநாதங்களிலும் லயித்திடுவார்கள் நவ நாதர்கள். அவர்களுடன் மனிதமுகமும் கொண்ட கிம்புருடர்கள் எப்போதும் நயந்து நிற்பர். பின் நின்றவர் பதிணென் வகை தேவஜாதியர். இவர்களை வரிசைப்பட இந்த அடி நினை வுறுத்தும் அழகை உணர்க.

அமலமுருகனை இவர்கள் வழிபட ஆரம்பிக்கும் போதெல்லாம் ஐம்புலக்களிறுகளின் எதிர்ப்பை எழுப்பி வழிபடுதலைத் தடைபடுத்தும். அவ்வமயம் நோக்கி விந்துத் தத்துவமான மயில் வெளியாகும். வீரிடும்படி புலக்களிறுகளை மோதி பக்தர்களைக்காக்கும். என்ற குறிப்பு இங்கு உணரத்தகும்.

''தொண்டர் அஞ்சுகளிறும் மடக்கி சுரும்பார் மலர் இண்டைகட்டி வழிபாடு செயும் இதம்'' என்பதால் – சம்பந்தர் தேவாரம் நினைவிற்கு வருகிறது அல்லவா!

ப-ரை: கோதகலும் ஐந்துமலர் வாளி மதனன்பொருவில்-குற்றம் அகன்ற ஐந்துமலர்களை உடைய மன்மதனது நிகரற்ற, **கோல உடலம் கருகி வெந்து விழவே**-அழகிய உடல் வெந்து தீய்ந்து போகும் வண்ணம், **கோபமொடு கண்டவிழி நாதர் அணியும் பணிகள்**-உக்ர நோக்கம்செய்த அருள்நாத வடிவின ரான சிவனார் அணிந்துள்ள ஆபரணங்கள் ஆகிய பாம்புகள், **கூடி மனம் அஞ்சி வளை சென்று புகவே**-ஒருங்கு சேர்ந்து உள்ளம் பயந்து வளையில் ஓடிஒளியும்படி,

கூவி இரவு அந்தம் உணர்வாழி என நின்று-கொக்கரக்கோ எனும் பெரும் குரல் எழுப்பி கூவி இரவின் முடிவை உணர்த்தி

உயிர்கள் அதனால் வாழ்க என கூறி நிமிர்ந்து நின்று, **பொரு கோழியொடு வென்றி முறையும் பகருமே**-அறியாமையை மோதும் சேவலுடன் தனது வெற்றிமுறைகளை விரிவாக எடுத்துச் சொல்லும்.

வி-ரை: ஆணவஇருள் விலகும் காலம் அண்மி உளது. அகக்கண் திறந்து சிவசூரியனை தரிசிக்கச் சித்தமாய் இருங்கள். வாழும்வழி இது என்று சேவலான நாதத்தத்துவம் செய்தி உரைத்து ஆசியும் செய்கிறது. அதேசமயத்தில் வித்தக ஞான விமல சூரியனை இதோ கொணர்கிறேன் நான் என்று விந்துத்தத்துவ மான மயில் தன்வெற்றி விருதையும் நினைவுறுத்துகிறது என்பது இங்கு போந்த பொருள்.

குற்றமற்ற மலர்களைக் கொடுங்கணைகளாக்கி தன்னைக் கோலம் செய்வதிலேயே நோக்குடைய மாமதம் பிடித்த மதன் பலம் சாம்பலாகும்படி உறுத்து நோக்கியது யோகசிவம். அதன்பின் திருமேனி அணிகளான பாம்புகள் சேவல்குரல் கேட்டு ஓடி வலையில் ஒளிந்த சேதி விஷப்பல்லர் எத்தனை உயர்ந்த பதவியில் இருந்தாலும் கரந்து வாழும் கருத்தினர் ஆவர் என்பதைக் காட்டியபடி.

மேலும் பாம்புஉருவ குண்டலிகள் அருள்நாதம் எழும் சமயம் அஞ்சி இடம்விட்டு அகலும் என்ற குறிப்பை நினைவுறுத்தியபடி என்பதும் ஒருவகை.

எதிர்த்தவர்களிடம் பொரும் சேவலுடன் சேர்ந்து அமர் செய்து விருது கூறும் என்னுமாம். எதிர்த்த வரலாற்றை உபதேச காண்டத்தில் சூராதிகள் ஒடுக்க சர்க்கத்தில் காண்க.

ப-ரை: கோலமுறு செந்தில் நகர் மேவு குமரன்-அழகிய திருச்செந்தூரில் விரும்பி எழுந்தருளிய குமரப்பரமேஸ்வருடைய, **சரண கோகனதம் அன்பொடு வணங்கு மயிலே**-திருவடித் தாமரைகளை அன்புடன் வணங்கும் மயிலே.

மயிலேறும் குமரன் மலரடிக்கே அடைக்கலம்.



உ

அனைத்து திருப்புகழ் நவமணிகளையும்
படித்த பாடிய பலன் பெற

திருஎழுகூற்றிருக்கை

தர்பாரி கானடா ஆதி

ஓருரு வாகிய தாரகப் பிரமத்
தொருவகைத் தோற்றத் திருமர பெய்தி
ஒன்றா யொன்றி யிருவரிற் றோன்றி மூவா தாயினை

இருபிறப் பாளரி னொருவ னாயினை
ஓராச் செய்கையி னிருமையின் முன்னாள்
நான்முகன் குடுமி இமைப்பினிற் பெயர்த்து
மூவரும் போந்து இருதாள் வேண்ட
ஒருசிறை விடுத்தனை

ஒருநொடி யதனில் இருசிறை மயிலின்
முந்நீ ருடுத்த நானிலம் அஞ்ச நீவலஞ் செய்தனை

நால்வகை மருப்பின் மும்மதத் திருசெவி
ஒருகைப் பொருப்பன் மகளை வேட்டனை

ஒருவகை வடிவினி லிருவகைத் தாகிய
மும்மதன் தனக்கு மூத்தோ னாகி
நால்வாய் முகத்தோன் ஐந்துகைக் கடவுள்
அறுகு சூடிக் கிளையோ னாயினை

ஐந்தெழுத் ததனில் நான்மறை யுணர்த்து
முக்கட் சுடரினை இருவினை மருந்துக்
கொருகுரு வாயினை

ஒருநாள் உமையிரு முலைப்பா லருந்தி
முத்தமிழ் விரகன் நாற்கவி ராஜன்
ஐம்புலக் கிழவன் அறுமுக னிவனென
எழில்தரு மழகுடன் கழுமலத் துதித்தனை

அறுமீன் பயந்தனை ஐந்தரு வேந்தன்
நான்மறைத் தோற்றத்து முத்தலைச் செஞ்சூட்
டன்றி லங்கிரி யிருபிள வாக ஒருவேல் விடுத்தனை

காவிரி வடகரை மேவிய குருகிரி இருந்த
ஆறெழுத் தந்தணர் அடியிணை போற்ற
ஏரகத் திறைவ னென இருந்தனையே.

❖ ❖ ❖

மாசிலடி யார்கள் வாழ்கின்ற வூர்சென்று
தேடிவிளை யாடி யேயங்ங னேநின்று
வாழுமயில் வீர னேசெந்தில் வாழ்கின்ற பெருமாளே.

எங்கள் பிழையே பொறுத்து இருதாளில் உற்ற
பெருவாழ்வு பற்ற அருள்வாயே.

அசதோ மா சத் கமய
தமசோ மா ஜோதிர் கமய
ம்ருத்யோர் மா அமிர்தங் கமய

ஹரி ஓம் சாந்தி சாந்தி சாந்தி ஓம்





தெப்பக்குளக்கரை செந்திலாண்டவன்

தேன் அபிஷேக தரிசனம்